ஆசிரியர் உரை



# என் பூமிக்கோள் எவ்வளவு இளமையானது?

## *Just How Young is my Home Planet?*

Louis Rushmore

நான் ஒரு காரியத்தை ஒப்பிட்டுப் பேசுகிறேன், நீங்களும் நானும் ஒப்பீட்டின் அடிப்படையில் இளமையான பூமியில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதாவது, நாம் வாழும் இக்கோள் பரிணாமக் கொள்கைக்காரர்கள் சொல்லிக்கொள்வது போல ஐந்நூறு கோடி ஆண்டுகள் பழமையானதல்ல. நம் தேவன் வேதவாக்கியங்கள் மூலமாகவும், சிருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சத்தின் மூலமாகவும் நாம் வாழும் கோளாகிய இப்பூமி பத்தாயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமையானதல்ல என்று உறுதியாகச் சொல்கிறார். உண்மையான விஞ்ஞானம் சிருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சத்தின் அங்கமாகிய இப்பூமி பத்தாயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழதையானதல்ல என்று உறுதியாய் ஆதாரத்துடன் சொல்லுகிறது.

பரிணாமக்கொள்கைக்கும், நிரூபிக்கத்தக்க அறிவியல் உண்மைக்கும் இடையே மிகப்பெரிய வித்தியாசம் இருக்கிறது. பொதுவாக, விஞ்ஞானிகள், விஞ்ஞானம் அளந்து பார்க்கக்கூடிய, பரிசோதித்துப் பார்க்கக்கூடிய, உற்று நோக்கக்கூடிய ஒன்றோடு தொடர்புடையதாயிருக்கிறது என்று மகிழ்ச்சியுடன் சொல்கிறார்கள். மேலும், மனிதனுடைய ஐம்புலன்களால் ஒன்றை மதிப்பீடு செய்ய முடியவில்லையென்றால் அது உண்மையாக இருக்கமுடியாது என்றும் சொல்கிறார்கள். பரிணாமக் கொள்கைக்காரர்களின் கூற்றை பரிசோதனைக் கூடங்களில் கூட வைத்து கண்காணிக்க முடியாத காரணத்தினால், இன்னும் நிரூபிக்க முடியாத காரணத்தினால் அவர்களாகவே தங்கள் தோல்வியை ஒத்துக்கொள்ள வேண்டும். உண்மையாய் சொல்லப்போனால், இந்த பரிணாமக்கொள்கை தேவனுடைய வல்லமையை அவமாக்குவதற்கும், தேவனால் வெளிப்படுத்தப் பட்டிருக்கிற புத்தகமாகிய வேதாகமம் நம்பகத்தன்மையற்றது என்று பரப்புவதற்குமே இருந்து வருகிறது.

முதலாவது, நம் தேவன் வேதாகமத்தின் மூலமாக இப்பூமியின் வயதைப் பற்றி என்ன சொல்கிறார்? நம் பூமி நம் மூதாதையர்களான ஆதாம் ஏவாளை விட ஐந்து நாட்களே மூத்ததாயிருக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஆதியிலே மனுஷரைச் சிருஷ்டித்த தேவன் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்று சொன்னார் (மாற்கு. 10 : 6).

ஆதியாகமம் ஒன்று, இரண்டு அதிகாரங்கள் சிருஷ்டிக்கப்பட்ட எல்லா சிருஷ்டியைப் பற்றிய விவரங்களைப் பதிவு செய்திருக்கிறது. இதில் ஆறாம் நாளில் ஆதாம், ஏவாள் சிருஷ்டிக்கப்பட்டது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்பூமியின் வயது சம்மந்தமான கேள்விக்கான முதல் பதில் இப்பூமி மனித இனத்தை விட வெறும் ஐந்து நாட்களே பழமையானது. வேதாகமம் இக்கருத்தை அதிலுள்ள 66 புத்தகங்களிலும் போதிக்கிறது, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உண்மையை உறுதி செய்திருக்கிறார். வேதாகமத்தின் பெரும்பாலான புத்தகங்கள் ஆதியாகம புத்தகத்தைப் பற்றி குறிப்பிடுகின்றன. அப்படி ஆதியாகமம் புத்தகத்தைப் பற்றி பிலேமோன், II மற்றும் III யோவான் போன்ற ஒரு சில புத்தகங்களே ஆதியாகமம் பற்றி குறிப்பிடாமல் இருக்கின்றன.

மேலும், பூமியின் வயதைப் பற்றிய நம் நம்பிக்கையை வேதாகமம் அதிகப் படுத்தியிருக்கிறது. வேதாகமம் அதன் வாசகர்களுக்கு கால வரிசையின்படி வரலாற்றைப் பதிவுசெய்திருக்கிறது. அதன்மூலம் ஒருவர் வேதவாக்கியங் களிலிருந்து இப்பூமியின் வயது 6000 என்பதை உறுதி செய்துகொள்ள முடியும். பொதுவாக, வரலாறும், நம்முடைய தற்கால நாள்காட்டியும் நம் ஆண்டவர் இவ்வுலகத்தில் வாழ்ந்த காலத்திலிருந்து இந்நாள்வரை ஏறக் குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டது என்று உறுதி செய்கின்றன. மத்தேயு 1 ஆம் அதிகாரத்திலும் லூக்கா 3 ஆம் அதிகாரத்திலும் இடம்பெற்றுள்ள ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு உலக வரலாறோடு இணைந்து இயேசு கிறிஸ்துவுக்கும் அவருடைய முற்பிதாவான ஆபிரகா முக்கும் இடையே இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்ததற்கு சாட்சி பகர்கின்றன. இதோடு சேர்த்து ஆபிரகாமுக்கும், ஆதாமுக்கும் இடையே கழிந்த ஆண்டுகளை சேர்க்கும் போது இப்பூமியின் தோராயமான வயதை நாம் உறுதி செய்து விடலாம். ஆதியாகமம் 5 ஆம் அதிகாரம் ஆபிரகாமுக்கும் ஆதாமுக்கும் இடையே உள்ள வம்சவரலாற்றைப் பதிவு செய்திருக்கிறது. இது தோராயமாக இரண்டாயிரம் ஆண்டுகள் கால அளவை உள்ளடக்கியதாகும். எனவே, நாம் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது இப்பூமியின் வயது ஆறாயிரந்தான்.

## மாபெரும் பள்ளத்தாக்கு

அமெரிக்காவிலுள்ள "The Grand Canyon" என்றழைக்கப்படும் மாபெரும் பள்ளத்தாக்கு பரிணாமக் கொள்கைகாரர்களுக்கு மிகப்பெரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. அவர்கள் அந்த மாபெரும் பள்ளத்தாக்கில் ஏற்பட்டுள்ள வெற்றிடம் கொலரடோ என்னும் ஆற்றில் லட்சக்கணக்கான ஆண்டுகளாக ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மண்அரிப்பினால் உண்டானது என்று சொல்கிறார்கள் அப்படியென்றால், அந்த Grand Canyon என்று சொல்லப்படும் மாபெரும் பள்ளத்தாக்கிலிருந்த 900 Cubic Mile மண் எங்கே போனது? பரிணாமக் கொள்ளைக்காரர்கள் சொல்வது சரியானால் அந்த மணல் கொலரடோ ஆற்றின் முடிவில் இருக்க வேண்டுமே. ஆனால், அது அங்கே இல்லையே. எனவே, இந்த மாபெரும் பள்ளத்தாக்கு நோவாவின் நாட்களில் உலகெங்கும் ஏற்பட்ட ஜலப்பிரளயத்தினால் தான் உருவாகியிருக்க வேண்டும்.

## நயாகரா நீர்வீழ்ச்சி

இப்பிரபஞ்சத்தின் தோற்றம் சம்மந்தமாக, குறிப்பாக நாம் வாழும் இப் பூமியின் தோற்றம் சம்மந்தமாக பரிணாமக் கொள்கைக்காரர்கள் கொடுக்கும் விளக்கம் திருப்திகரமாக இல்லை. நயாகரா நதி ஏற்படுத்திய மண் அரிப்பினால் தான் நயாகரா பள்ளத்தாக்கு உண்டானதென்றும் இது நயாகரா நீர்வீழ்ச்சியை ஏழு மைல்கள் பின்னே தள்ளியிருக்கிறதென்றும் பரிணாமக் கொள்ளைக் காரர்கள் சொல்கிறார்கள். தண்ணீரை வேறுபக்கமாக திருப்பும் திட்டங்கள் அமுலுக்கு வருவதற்கு முன்பாக மண்அரிப்பு நீர்வீழ்ச்சியை வருடத்திற்கு மூன்று அடிகள் பின்னே தள்ளியது என்று சொல்கிறார்கள். அவர்களுடைய கூற்றுப்படி வருடத்திற்கு மூன்று அடி நயாகரா நீர்வீழ்ச்சி பின்னோக்கிச் சென்றிருந்தால் 500 கோடி ஆண்டுகளில் நீர்வீழ்ச்சி 1300 கோடி அடிகள் பின்னோக்கிச் சென்றிருக்க வேண்டும். இதில் வேடிக்கை என்னவென்றால், பூமியின் தூரமே 132 மில்லியன் அடிகள்தான்.

எனவே, வரலாற்றுப் பதிவுகளும் விஞ்ஞானத் தகவல்களும் இப்பூமியும் அதில் உள்ளவைகளும் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமையாயிருப் பதற்கு வாய்ப்பே இல்லை என்று உறுதியாய்ச் சொல்கின்றன. நாம் வாழும் இப்பூமி பரிணாமக் கொள்கைக்காரர்கள் சொல்லிக் கொள்வது போல, பல ஆயிரம் கோடி ஆண்டுகள் பழமையானதல்ல. ஏனென்றால், பரிணாமக் கொள்கை விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல, மாறாக இப்பூமியும் அதில் உள்ளவைகளுமோ நம் சர்வவல்ல தேவனால் சிருஷ்டிக்கப் பட்டவைகள்.

✞

# ... ஒன்றையுங் குறித்து கவலைப்படேன்

## *... None of these things move me*

E.Z.S. Rajanayagam

விதிவிலக்கு என்றில்லாமல் எல்லோரையும் பாதித்திருப்பவைகளில் ஒன்று தான் கவலை. பொதுவாகக் கவனித்தால், நடந்தவைகளுக்காகக் கவலைப் படுவதைவிட, இன்னும் நடக்காமலிருப்பவைகளுக்காகவே மனிதர்கள் அதிகம் கவலைப்படுகிறார்கள் என்று புள்ளி விவரங்கள் கூறுகிறது. இக்கவலை மனிதனின் மகிழ்ச்சியை உறிஞ்சி, நம்பிக்கையை நாசம் செய்து நடைபிணமாக அலைய வைக்கிறது. ஆயினும், இப்படிப்பட்ட கவலை அர்த்த மற்றதென்றே இயேசு ஆண்டவர் கூறியுள்ளார். **கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?** என்று (மத். 6 : 27).

இயேசு கிறிஸ்துவால் நற்செய்தியைச் சுமந்து செல்லும்படியாகப் பிரத்யே கமாகப் பிடிக்கப்பட்ட பவுல் தன் ஊழியத்தின் பாதையில் மூன்று நற்செய்திப் பயணங்களை மேற்கொண்டார். ஆயினும், இப்பயணங்களில் எதுவுமே சுகமான பயண அனுபவங்களைக் கொடுக்கவில்லை.

**முதல் நற்செய்திப் பயணம் :** அந்தியோகியாவில் தொடங்கி அந்தி யோகியாவிலேயே முடிகிறது. இப்பட்டணத்தில் அவர் துன்புறுத்தப்பட்டார் (அப். 14 : 2 ) லீஸ்திராவில் கேட்கவே வேண்டாம். மரித்துப்போனான் என்று எண்ணு மளவுக்கு கல்லுகளால் ஒரு நாயைப் போல அடிக்கப்பட்டு, தரதரவென்று பட்டணத் துக்கு வெளியே இழுத்துச் செல்லப்பட்டார் ( அப். 14 : 19 ). பிறகு, தேவதயவால் சுதாரித்து எழுந்து, நற்செய்தியை அறிவித்துவிட்டுத் திரும்பவும் அதே பட்டணங் களுக்கு வந்து, சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்தில் நிலைத்திருக்கும் படி புத்திசொல்லி, அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்ஜி யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று அறிவுறுத்தினான் (அப். 14 : 20-22).

**இரண்டாம் நற்செய்திப் பயணம் :** மீண்டும் அந்தியோகியாவிலிருந்து தான் ஆரம்பிக்கிறார். அப்படி ஆரம்பிக்கும் போது, முதல் பயணத்தில் தனக்குக் கிடைத்த பாடுகளும், உபத்திரவங்களும், போராட்டங்களும் இருக்கக்கூடாது

என்று சிறப்பு ஜெபம் ஏறெடுத்துப் புறப்பட்டதாகத் தெரியவில்லை. ஏனென்றால், தனது பேச்சும், மூச்சும் ராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தைப் பரப்புவதிலே தான் இருந்ததேயொழிய, மற்றபடி பட்ட வேதனைகளில் இருக்கவில்லை. ஊழியம் என்றால் என்ன என்பதை இங்கே தெரிந்து கொள்ள வேண்டும்.

பிலிப்பி பட்டணத்தில் நற்செய்தி அறிவித்தபோது, பலமான எதிர்ப்புகள் கிளம்பி, அதிகாரிகள் முன்பாகக் கொண்டு போய் நிறுத்தப்பட்டு, உடைகளைக் கிழித்து, அரை நிர்வாணமாக்கப்பட்டு, அடித்து உதைக்கப்பட்டதோடு, இருட்ட றையில் தள்ளப்பட்டு, தொழுமரத்தில் மாட்டி வைக்கப்பட்டான். பிறகு, அற்புத மான முறையில் விடுதலை பெற்ற பவுல், நேராக லீதியாள் வீட்டிற்குச் சென்று, சகோதரரைக் கண்டு ஆறுதல் சொல்லுவது எப்படி என்று பாருங்கள். அடப் பவுலே! எப்படி உன்னால் இப்படி முடிந்தது?

**மூன்றாம் நற்செய்தி பயணம் :** முதல் இரண்டு நற்செய்திப் பயணங்களின் கொடுமையான அனுபவங்களினால் ஆட்டம் கண்டிருக்க வேண்டிய பவுலடியார் எதற்கும் அசராதவராக மூன்றாம் நற்செய்திப் பயணத் தை ஆரம்பித்தார். எபேசு, மக்கெதோனியா, அகாயா என்று விரிவான பயணம். இப்பயணத்தில் தான், பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங் களைச் செய்தார் (அப். 19 : 11). இப்பயணத்தில் தான், துரோவா பட்டணத்தில், கிறிஸ்தவர்கள் வாரந்தோறும் கடைப்பிடிக்க வேண்டிய கர்த்தருடைய பந்திக் கான வழிகாட்டி நெறிகளைக் கொடுத்தார் (அப். 20 : 7). தூங்கி விழுந்த ஐத்திகு என்ற வாலிபன் உயிரோடு எழுப்பட்டதும் இப்பயணத்தில் தான் (அப். 20 : 12) ஒரு கட்டத்தில், மிலேத்து என்னும் பட்டணத்துக்கு வந்து, மீண்டும் எபேசுவுக்குப் போகச் சமயமில்லாதபடியால், அப்பட்டணத்து மூப்பரை வரவழைத்து அவர் களோடு பல காரியங்கள் பற்றிப் பேசினார் (அப். 20 : 16, 17). அப்பேச்சை நாம் இங்கே கவனிப்பது நமக்கு நல்லது.

எபேசு பட்டணத்து மூப்பர்களுடனான தனது உரையாடலின் ஒரு பகுதிதான் ( அப். 20 : 21, 22 ) ஆகிய வசனங்கள். இப்பொழுதும் நான் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன். அங்கே எனக்கு நேரிடுங் காரியங்களை அறியேன். கட்டுகளும், உபத்திரவங்களும் எனக்கு வைத் திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன் என்று கூறுகிறார். எருசலேமுக்குப் போக வேண்டாம் என்பதும், மீறிப் போனால் என்ன நடக்கும் என்பதும் இங்கு மாத்திரம் கொடுக்கப் பட்ட எச்சரிப்பு அல்ல. வேறு பல வசனங்களிலும் சொல்லப்பட்டுள்ளது (அப். 21 : 4, 11). நமக்கெல்லாம் ஊழியத்தின் பாதையில்

பிரச்சனை, ஆபத்து என்ற செய்திவருமானால், அப்படியே பதுங்கி, சம்பந்தமில்லா சாக்குப்போக்குகளை லாவகமாகக் கூறி நைசாக திசையை மாற்றிக்கொள்வோம்.

ஆனால், பவுலடியாரின் மனநிலை முற்றிலும் மாறுபட்டு இருந்துள்ளது. ஆம், **அவைகளில் ஒன்றையுங் குறித்துக் கவலைப்படேன்** என்று அழுத்தம் திருத்தமாக, ஆணித்தரமாக, நெத்தியடியாக உரக்கக் கூறுகிறார். பவுலடியாரால் எப்படி இவ்விதம் கூற முடிந்தது? இதன் இரகசியம் I கொரி. 15 : 31 ல் இடம் பெற்றுள்ளது. ஆம், கொரிந்தியருக்கு எழுதும்போது, "நான் அனுதினமும் சாகிறேன் " என்று கூறியுள்ளார். அதாவது, ஊழியத்தினிமித்தம் தினந்தோறும் செத்துள்ளார். ஒருவேளை, சரீரத்தில் உயிரோடு இருந்திருந்தாலும், ஆவிக் குரிய ரீதியில் பாவத்திற்கு மரித்தவராகவும், மாம்சத்திற்கு மரித்தவராகவும், உலகத்திற்கு மரித்தவராகவும் இருந்துள்ளார். ஆகவே, அவரை எதுவும் ஒன்றும் செய்ய முடியவில்லை. வேண்டுமானால், ஒரு பிணத்தண்டை போய் ஏதாவது முயற்சித்துப் பாருங்களேன்! அப்படிப்பட்டதோர் ஆவிக்குரிய வாழ்வைத் தான் பவுலடியார் நடத்தியுள்ளார்.

நம்மைப் போன்றவர்களால் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்குப் பவுலடியார் எண்ணுவதற்கும், பேசுவதற்கும், காரணம் பரலோகம் பற்றிய அவருடைய தெளிவான பார்வைதான். ஆகவே தான், நித்திய வீடாகிய பரம **வாசஸ்தலத்தை வாஞ்சிக்கிறவர்களாயிருக்கிறோம்** என்று (II கொரி. 5 : 1, 2) கொரிந்தியருக்கும், **மேலானவைகளைத் தேடுங்கள்** (கொலோ 3 : 1) என்று கொலோசெயருக்கும் எழுத முடிந்தது. இச்சிந்தையில் அவர் மூழ்கி இருந்தபடியால் தான், அவைகளில் ஒன்றையுங் குறித்து கவலைப்படேன் என்று அவரால் சொல்ல முடிந்தது.

இதிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று இப்பொழுது பார்ப்போம்.

**I. பரலோகத்திற்காக உயிரைப் பற்றிக் கவலைப்படவில்லை**

பரலோகத்திற்கான தன்னுடைய பயணத்தில், தனக்குச் சவாலாக வரும் எதைப்பற்றியும் கவலைப்படாமல் பவுல் வெற்றி நடை போட்டதற்கான முதல் காரணம், அவர் தன்னுடைய உயிரைப் பற்றிக் கவலைப்படாததே.

ஆம், என் பிராணனையும் அருமையாக எண்ணேன் (அப். 20 : 24) என்று விளம்புகிறார். பொதுவாக, எல்லோருக்குமே உயிர் என்பது ஒரு பொருட்டு தான், அருமையானது தான். பூமியின் வாழ்க்கையில் ஒருவன் படுகின்ற

எல்லாப் பாடுகளும் இந்த உயிரை வாழவைப்பதற்குத் தான். ஆனால், பவுலடியாருக்கோ கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்த நாள் முதல் கொண்டு, அவருடைய உயிர் அவருக்கு ஒரு பொருட்டாக இருந்ததேயில்லை. ஆகவே தான், பிலிப்பி பட்டணத்து கிறிஸ்துவின் சபையாருக்கு இப்படியாக எழுத முடிந்தது. கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் ( பிலி. 1 : 21 ) என்று.

கிறிஸ்துவுக்காக இந்த உயிரை விடும்போது பரலோகத்தில் தனக்கு என்ன கிடைக்கும் என்பதைத் திட்டமாக அறிந்திருந்தார். அப்படி என்ன தான் கிடைக்கும் என்கிறீர்களா? வஸ்திரத்தின் ஓரத்தைத் தொடுவது போல் சிலவற்றை இங்கே குறிப்பிடுகிறேன். மேலான சரீரம் (I கொரி. 15 : 51); மேலான வீடு (II கொரி. 5 : 1, யோவான் 14 : 2 - 3 ); மேலான சுதந்திரம் ( I பேதுரு. 1 : 5 ). இவை எல்லா வற்றுக்கும் மேலாக, மேலான ஐக்கியம். ஆம், தேவாதி தேவனோடும், நம் இரட்சகராகிய இயேசுவோடும் வாழும் வாழ்க்கை பாழாய்ப்போன மனிதர் களாகிய நமக்கு. இது போதாதா?

## II. ஓட்டத்தை சந்தோஷத்தோடே முடிக்க விரும்பினார்

பரலோகத்திற்கான தன்னுடைய பயணத்தில், தனக்குச் சவாலாக வரும் எதைப்பற்றியும் கவலைப்படாமல் பவுல் வெற்றிநடை போட்டதற்கான அடுத்த காரணம், தன் ஓட்டத்தைச் சந்தோஷமாக முடிக்க விரும்பியது தான்.

பொதுவாகவே, ஓட்டத்தை ஆரம்பிக்கிற எல்லோரும் அதை முடிப்பதில்லை. அது விளையாட்டு சம்பந்தமான ஓட்டமாக இருந்தாலும், வாழ்க்கை ஓட்டமாக இருந்தாலும் அல்லது ஆன்மீக ஓட்டமாக இருந்தாலும் இது தான் யதார்த்த நிலை. கிறிஸ்துவுக்காக ஓட்டத்தை ஆரம்பித்த கலாத்தியா நாட்டுக் கிறிஸ்தவர்கள் தங்கள் ஓட்டத்தை நன்றாய் நடத்தவில்லை. ஆம், நீங்கள் நன்றாய் ஓடினீர்களே (கலா. 5 : 7) இப்பொழுது என்ன ஆச்சு உங்களுக்கு என்று வியந்து எழுதினார்.

பவுலடியாரைக் கொண்டு ஆவியானவர் வெளிப்படுத்தின வார்த்தைகளைக் கவனிக்கும் போது, இன்னொரு கருத்தும் நமக்குத் தெரியவருகிறது. ஆம், ஓட்டத்தை " சந்தோஷத்தோடே " முடிக்க விரும்பியுள்ளார். மற்ற ஓட்டங்களைப் போலல்லாமல், கிறிஸ்தவ ஓட்டம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டால், ஒருவன் எப்படி ஓடினாலும் அது ஒரு நாளில் முடிவுக்கு வரும். ஆனால், எல்லோருக்கும் அந்த ஓட்டம் சந்தோஷமாக முடியாது. எப்படியெனில், ஓட்டத்தின் முடிவில், **வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே** (மத். 25 : 34) என்று ஏற்றுக் கொள்ளப்படுபவர்களும் இருப்பார்கள், **சபிக்கப்பட்டவர்களே... நித்திய அக்கினியிலே போங்கள்** ( மத். 25 : 41 ) என்று சாடப்படுபவர்களும்

இருப்பார்கள். இந்த உண்மையை அறிந்ததால் தான் ஓட்டத்தை சந்தோஷத்தோடே முடிக்கப் பவுல் விரும்பியுள்ளார். அவ்விதமாகவே முடித்தும் காட்டினார் (II தீமோ. 4:7, 8).

### III. பெற்ற ஊழியத்தை நிறைவேற்ற விரும்பினார்

பரலோகத்திற்கான தன்னுடைய பயணத்தில், எதைப் பற்றியும் கவலைப் படாமல், பவுலடியார் வெற்றி நடை போட்டதற்கான இன்னுமொரு காரணம், பெற்ற ஊழியத்தை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பியது தான்.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இக்காலம் நம்பிக்கைத் துரோகம் பற்றிக் கவலைப்படாத ஒரு காலம். குடும்பங்களிலும், சமுதாயத்திலும் அது ஓர் அன்றாட நிகழ்வாகி விட்டது. இப்படி ஆகிடுச்சே, இப்படிப் பண்ணீட்டீங்களே, இப்படியா செய்வாங்க, அப்படி நான் நெனைக்கவே இல்லையே, ஐயோ நான் இனி என்ன செய்வேன் என்பன போன்ற அவலக்குரல்களை, புலம்பல் சத்தங் களை நாம் பல நேரங்களில் கேட்க முடிகிறது. இதற்கெல்லாம் காரணம் துரோகம் தான். எதிர்பார்ப்பு பொய்த்துப் போவது தான்.

ஆனால், பவுலடியார் வேறுபட்ட சிந்தை உடையவராக இருந்துள்ளார். இயேசுவால் நம்பிக் கொடுக்கப்பட்ட ஊழியத்தை நிறைவேற்றவே விரும்பி யுள்ளார். எந்த ஒரு செயலைச் செய்து முடிப்பதற்கும் விருப்பம் தேவை. ஊழி யத்தின் பாதையில் அந்த விருப்பம் பவுலுக்கு இருந்தது. தான் அழைக்கப்பட்ட விதத்தையும், தன்னிடத்தில் கொடுக்கப்பட்ட பொறுப்பையும் (அப். 9 : 4, 15) அவர் எப்பொழுதும் நினைவில் கொண்டிருந்தார். ஆகவே தான், பிலிப்பி யருக்கு எழுதும்போது, ...நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன் என்றார். (பிலி. 3:12).

ஆகையால், அருமையானவர்களே, பவுலடியார் பெற்ற ஊழியத்தை நிறைவேற்ற விருப்பம் கொண்டு சாதித்தது போல், நாம் பெற்றுக்கொண்ட அல்லது பெற்றுக்கொள்ள விரும்பும் இரட்சிப்பை நிறைவேற்ற வேண்டுமென்ற ஆசை கொண்டு செயல்படுவோமானால் அது சாத்தியமே.

✝


**வேதாகமத்தை பற்றி சர் ஐசக் நியூட்டன்...**

**“உலக வரலாற்றுப் புத்தகங்களை விட வேதாகமத்தில் நம்பகத்தகுந்த ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன” ஆகவே, வேதாகமத்தை நம்புங்கள்**

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| என் தாய்க்கோள் எவ்வளவு... | Louis Rushmore | ... 1 |
| ... ஒன்றையுங் குறித்து ... | E.Z.S. Rajanayagam | ... 4 |
| நீங்கள் எவ்வளவு ஆவிக்குரிய... | Jerry Bates | ... 11 |
| தேவனைப் பற்றி பவுலின் ... | Byron Nichols | ... 15 |
| ஏன் நீங்கள் வேதாகமம் ... | J.C. Choate | ... 18 |
| யார் இந்த தேவதூதர்கள்? | P.C. Philemon Rajah | ... 21 |
| கர்த்தருடைய ஊழியக்காரன் ... | B. Arjunan | ... 24 |
| வசனமே வழி | Benny Martin | ... 29 |
| **தேவன்** | **God** | |
| நம்மால் காண முடிந்தால் | Mike Ireland | ... 32 |
| தேவத்துவம் | The Jean Gnifes Barker | ... 35 |
| **தேவனுடைய வார்த்தை** | **The Word Of God** | |
| வேதாகமத்தை நம்புவதற்கான ... | Gerry C. Hampton | ... 39 |
| உம்முடைய வசனமே சத்தியம் | Hugo MC Cord | ... 43 |
| **இரட்சிப்பு** | **Salvation** | |
| சிலுவையை ஒன்றுமில்லாமல் செய்தல் | Bobby Dockery | ... 47 |
| மரணம் என்பது... | Kevin L. moore | ... 50 |
| இருதயத்தை கீழ்ப்படிதலின் ... | Michael L. King | ... 53 |
| **சபை** | **The Church** | |
| எங்களை உயிரற்றவர்களாக... | Dalton Key | ... 56 |
| சபையை ஆளுகை செய்பவர்கள் | Robert Rawson | ... 58 |
| **வாழ்வதற்கான உபதேசம்** | **Doctrine to Live by** | |
| ஞானஸ்நானமும் சிலுவைக் கள்ளனும் | A.L. Franks | ... 60 |
| கிறிஸ்தவ ஒழுக்க நெறிகளா ... | Justin A. Hopkins. | ... 62 |

| | | | |
|---|---|---|---|
| **வாழ்வதற்கான உபதேசம்** | **Doctrine to Live by** | | |
| அழியாமை | Perry N. Hall | ... 65 | |
| சத்தியமா அல்லது பைத்தியமா? | Maxie B. Boren | ... 67 | |
| **செயலில் கிறிஸ்தவம்** | **Christianity in Action** | | |
| அது எப்படி விருத்தியடைந்தது? | Bruce Buckley | ... 69 | |
| மரணத்தின் முத்தம் | Lewis G. Hale | ... 71 | |
| **ஆராதனை** | **Worship** | | |
| ஆராதனைக் கூடுகை | Jack Harriman | ... 73 | |
| **அனுதின கிறிஸ்தவ ஜீவியம்** | **Daily Christian living** | | |
| பிசாசு களிகூருகிறான் | Bonnie Rushmore | ... 75 | |
| ஏன் போய் சந்திக்க வேண்டும்? | Bobby wheat | ... 78 | |
| வேலையாட்களுக்கு அழைப்பு | Dwight Fuqua | ... 81 | |
| ஆளும் அதிகாரத்திற்கு கீழ்ப்படிதல் | Wayne Barrier | ... 83 | |
| **கிறிஸ்தவ இல்லம்** | **The Christian Home** | | |
| என் அப்பா எப்போதுமே... | Keith Parker | ... 86 | |
| ஒரு தாயின் தாக்கம் | Dennis Gulledge | ... 88 | |
| **ஹாய் குட்டீஸ்** | **Hey You Kids** | | |
| உண்மையாகவே அன்பு... | Alex Gibson | ... 90 | |
| **வசனப்பகுதி பாடல்கள்** | **The Christian Home** | | |
| இடறல்கள் வர வேண்டும் | T. Pierce Brown | ... 98 | |
| தேவன் உண்மையுள்ள... | Harvey Porter | ... 100 | |
| **வேதாகம கதாபாத்திரங்கள்** | **Biblical History** | | |
| ஒரு மறுமலர்ச்சி | Betty Tucker | ... 102 | |
| தோவேக்கு | Neal Pollard | ... 104 | |



## நீங்கள் எவ்வளவு ஆவிக்குரியவர்களாயிருக்கிறீர்கள்?

## How Spiritual Are You?

Jerry Bates

இன்றைய உலகில் நாம் ஆவிக்குரிய தன்மை பற்றி அதிகமாகப் பேசுகிறோம். எல்லோருமே ஆவிக்குரியவர்களாக விரும்பு வது போல் தெரிகிறது. இன்னும் பலர் தங்களை ஆவிக்குரியவர்களென்று சொல்லிக் கொள்கிறார்கள். நிச்சயமாகவே, அவர்களுடைய ஆவிக்குரிய தன்மை பல நிலைகளையும், பல உருவங்களையும் கொண்டுள்ளது. மனித வரலாற்றில் அதிக ஆவிக்குரியவர்களாயிருக்க பல முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக, நவீனகால ஆவிக்குரிய தன்மையைப் பொறுத்தவரை அது உணர்வுப்பூர்வமான காரியங்களுக்கு அதிக அழுத்தம் கொடுக்கிறது. கிறிஸ்தவர்களாக நாமும் ஆவிக்குரிய தன்மை உடையவர்களாக இருக்க வேண்டும். ஆயினும், நம் ஆவிக்குரிய தன்மை வேதவசனங்களை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். ஆவிக்குரிய தன்மைக்கு உலகம் கொடுக்கிற விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கக் கூடாது. நாம் ஆவிக்குரியவர்களாயிருக்க வேண்டுமென்று பல வேத வசனங்கள் பேசுகிறது. ஆனால், சில நிமிடங்களுக்கு பிலிப்பியர். 1 : 9 - 11 வசனங்களை நாம் ஆழ்ந்து சிந்திப்போம். ஒரு பிரசங்கியார் இவ்வசனப்பகுதியை ஆவிக்குரிய தன்மையின் எவரெஸ்ட் சிகரம் என்றழைக்கிறார்.

மேலும், உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக் கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகதிகமாய்ப் பெருகவும், தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி, நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும், இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன்.

இவ்வசனங்களை நாம் பார்க்கும்போது, உண்மையாக ஆவிக்குரிய

தன்மை உடையவர்களாயிருப்பதற்கான பவுலின் வழி நம் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டதே. பின்பு, நம் சிந்தனைகள் நம் வாழ்க்கையை வழி நடத்தும். அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பி பட்டணத்து கிறிஸ்தவர்கள் அன்பில் பெருகவேண்டுமென்று ஜெபித்தான். இது உணர்வுப்பூர்வமான அன்பல்ல. இந்த அன்பு யாரிடத்தில் செலுத்தப்படுகிறதோ அவர்களுக்கு சிறந்ததையே வாஞ்சிக்கும் " Agape " அன்பாகும். இந்த அன்பு தேவனுக்கான அன்பாகும். தேவனுக்கான அன்பு எப்போதுமே அவருடைய சித்தத்திற்கு கீழ்ப் படிவதை உள்ளடக்கியது. இயேசு கிறிஸ்து **ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்** என்றார். (யோவான் 14 : 23) இந்த அன்பு தேவன் எந்த மனிதர்கள் மீது அன்பு செலுத்துகிறாரோ அவர்களிடத்தில் நாம் அன்பு செலுத்துவதையும் குறிக்கிறது.

**சபையில் அன்புக்குப் பதிலாக பொறாமை, சண்டை, ஒற்றுமையின்மை போன்றவற்றை நாம் எத்தனை முறை காண்கிறோம்?**

அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பி பட்டணத்து கிறிஸ்தவர்கள் அன்பில் பெருக வேண்டுமென்று ஜெபித்தது மட்டுமல்லாமல் அவர்கள் அறிவிலும் பெருக வேண்டுமென்றும் ஜெபிக்கிறார். இந்த அறிவு தேவனைப்பற்றி சில உண்மைகளை அறிந்து கொள்வதை மட்டும் குறிக்காது. மாறாக, தேவனை தனிப்பட்ட முறையிலும், நெருக்கமான முறையிலும் அறிந்து கொள்ளும் அறிவைத்தான் குறிக்கிறது. நாம் தேவனை எந்த அளவுக்குப் புரிந்து கொள்கிறோமோ, அந்த அளவுக்கு கிறிஸ்தவர்கள் என்னும் நிலையில் நாம் ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ள வேண்டிய பொறுப்புகள் இருப்பதை நம்மால் காண முடிகிறது. நிச்சயமாகவே, இந்த அறிவு தேவனுடைய வார்த்தை களை நாம் படிப்பதன் மூலமாகவும், தியானிப்பதன் மூலமாகவும் தான் வரு கிறது. மறுபடியும், ஆவிக்குரிய தன்மை என்பது ஒருவர் என்ன உணர்கிறாரோ அதல்ல, மாறாக, ஒருவர் எதைச், சிந்தித்து செயல்படுகிறாரோ அதுதான் என்பதை நம்மால் காண முடிகிறது.

அடுத்ததாக, பவுல் அவர்கள் உணர்வில் அதிகமதிகமாய்ப் பெருகவேண்டு மென்று ஜெபித்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், மூலமொழியில் பகுத்தறிவில் அவர்கள் பெருகவேண்டுமென்பதற்காக பவுல் ஜெபித்ததாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மையான ஆவிக்குரிய தன்மை என்பது ஒழுக்க ரீதியாக எது சரியென்பதைப் பகுத்தறிந்து பரிசுத்தமான வாழ்க்கையை வாழ்வ தாகும். இது வேத அறிவோடு நெருக்கமாக சம்மந்தப்படுத்தப்பட்டிருக்கிறது. ஏனென்றால், வேத வசனங்களிலிருந்து பெற்றுக்கொண்ட அறிவில்லையென் றால் ஒருவரால் ஒழுக்க ரீதியாக எது சரியென்பதை பகுத்தறிய முடியாது. எபிரெய

ஆசிரியர் 5 : 14 ல் பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்க முயற்சி செய்யும். ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும் என்று எழுதின போது இக்கருத்தை மனதில் கொண்டுதான் எழுதியிருக்கிறார்.

மேலும், பவுல் உத்தமமானவைகளை கிறிஸ்தவர்கள் ஒப்புக்கொள்ளத் தக்கதாக அவர்கள் அத்திறமையில் வளரவேண்டுமென்று உற்சாகப்படுத்துகிறார்.இதே விதமான கருத்துதான் ரோமர். 2 : 18 லும் இடம் பெற்றிருக்கிறது. தமிழ் வேதாகமத்தில் ஒப்புக்கொள்ளுதல் என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிற வார்த்தை பெரும்பாலும் உலோகங்களில் குறைகளைக் கண்டுபிடிப்பதற்காக அதை பரிசோதிப்பதற்கு பயன்படுத்தப்படும் வார்த்தையாக இருக்கிறது. இங்கே பவுல் கிறிஸ்தவர்கள் தங்கள் செயல்பாடுகளில் எவைகள் சிறந்தவைகள் என்பதை தீர்மானிப்பதற்காக தங்கள் செயல்பாடுகளைச் சோதித்துப் பார்க்கவேண்டுமென்று உற்சாகப்படுத்துகிறார். இப்பழக்கம் கிறிஸ்தவர்களிடையே அதிகமாகக் குறைவுபடுகிறது என்று நான் நினைக்கிறேன். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் எது சரி, எது தவறு என்பதை அடிப்படையாக வைத்துதான் முடிவுகளை எடுக்கிறார்கள். ஒன்றில் தவறில்லையென்றால், அவர்கள் விரும்பினால் அதைச் செய்ய முற்படுகிறார்கள். இருந்தபோதிலும், உண்மைக் கிறிஸ்தவர்கள் எது சிறந்ததோ அதைச் செய்ய நாடுகிறார்கள் என்று பவுல் நமக்கு நினைப்பூட்டுகிறார். உண்மையான ஆவிக்குரிய தன்மை என்பது வெறுமனே எது சரி, எது தவறு என்பதை அறிந்து கொள்வது மட்டுமல்ல, எது மேலானது எது சிறந்தது என்பதை தீர்மானிப்பதாயிருக்கிறது. எல்லா சரியான செயல்பாடுகளும் நல்லவைகளாயிருப்பதில்லை. சில செயல்பாடுகள் தவறாக இல்லாவிட்டாலும்கூட தீமைக்கு வழிவகுத்துவிடும். ஆகவே, கிறிஸ்தவர்கள் இத்தகைய காரியங்களைத் தவிர்க்க வேண்டுமென்று சொல்கிறார். சில செயல்பாடுகள் நன்மையை ஏற்படுத்துவதற்கு அதிக வாய்ப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளபடியால் கிறிஸ்தவர்கள் அவைகளை நாடித் தேட வேண்டும்.

கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவப் பண்புகளில் வளர வேண்டும். நாம் உண்மையான நம்பத்தகுந்த குணாதிசயத்தைப் பெற்றிருக்க வேண்டும். இதன் பொருள் கிறிஸ்தவர்கள் ஒருபோதும் பாவம் செய்வதில்லையென்றோ அல்லது மற்றவர்கள் நம்மீது குற்றஞ்சாட்ட முடியாது என்றோ பொருள் படுவதில்லை. இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் கூட பாவஞ்செய்வதா அடிக்கடி குற்றஞ்சாட்டப்பட்டார்கள். நம் மார்க்கம் வெளிப்படையான காட்சிப் பொருளாக இருக்கக்கூடாது. நாம் உண்மையுள்ளவர்களாக அல்லது ஆவிக்குரியவர்களாக நடிக்கக்கூடாது. நாம் உண்மையாகவே அப்படி இருக்கவேண்டும்.

இவைகளில் நாம் வளர்கிறோமா? சில கிறிஸ்தவர்கள் தங்கள் ஜீவியங்களில் காணப்படும் சிறிய தவறை அல்லது பாவத்தைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். நம் எல்லோரிடமும் தவறுகளும், குறைவுகளும் உண்டு என்பது உண்மைதான். ஆனால், அவைகளை நாம் முக்கியமற்றவைகள் என்று சௌகரியமாக இருந்து விடக்கூடாது. நம் சிந்தனையிலும், வாழ்க்கையிலும் கிறிஸ்துவைப்போல வாழ நாம் பாடுபட வேண்டும்.

கடைசியாக, நாம் கனி கொடுப்பதில் வளரவேண்டும். கிறிஸ்து தம்முடைய ஊழியக்காரர்கள் மிகுந்த கனிகளைக் கொடுக்க வேண்டுமென்று கட்டளையிட்டார். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப் படுவார். எனக்கும் சீஷராயிருப்பீர்கள் (யோவான். 15 : 8) கிறிஸ்துவின் சீஷர்கள் கனிகளைக் கொடுப்பார்கள். உண்மையான ஆவிக்குரிய மனிதன் கனி கொடுப்பதில் தொடர்ச்சியாக வளர்ச்சியடைவதையே நாடுவான்.

ஆவிக்குரிய தன்மை என்பது வேத வசனங்களின்படி நம் செயல்களை அடிப்படையாகக் கொண்டது. நிச்சயமாகவே, நம் உணர்வுகள் அதில் ஈடுபடுத்தப் பட்டிருந்தாலும் அவைகள் பிரயோஜனமுள்ளதாயிருக்க வேண்டுமென்றால் அவைகள் கிரியைகளாக மாற்றப்பட வேண்டும். உண்மையான கிறிஸ்தவத் தன்மை கிறிஸ்தவர்களுடைய கிரியைகளில் வெளிப்படவில்லையென்றால் அது கிறிஸ்தவத்தன்மையே அல்ல. அது போலியான ஒன்றாகத்தான் இருக்கும். எப்படி போலிப் பணத்தை நாம் விரும்புவதில்லையோ, அதேபோல் போலியான அல்லது மாயையான ஆவிக்குரிய தன்மையையும் நாம் விரும்பக்கூடாது. உலகப்பிரகாரமான ஆவிக்குரிய தன்மை என்னும் வஞ்சக வலையிலும் விழுந்துவிட வேண்டாம். அதேபோல் அதிக ஆவிக்குரியவர்களாக உலகப் பிரகாரமான உபாயங்களை உபயோகிக்கவும் வேண்டாம். ✝

---

**சபையைப் பாதிக்கும்**
**ஐந்து பிரதான பாவங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | ஜெபம் இல்லாமை | I தெச. 5 : 17, 18 |
| 2. | சோம்பலான நிலை | மத்தேயு 25 : 26 |
| 3. | கலகம் | ஏசாயா 63 : 10 |
| 4. | உலகத்தன்மை | I யோவான் 2 : 15, 17 |
| 5. | வெதுவெதுப்பான நிலை | I யோவான் 2 : 15, 17 |



# தேவனைப் பற்றி பவுலின் கம்பீரமான விவரிப்பு

## *Paul's Majestic Description Of Our God*

Byron Nichols

**ப**லருக்குப் பிடித்தமான வேதவசனப்பகுதி, அப்போஸ்தலனாகிய பவுல் தேவனைப் பற்றி விவரிப்பதற்கு எடுத்துக்கொண்ட வேதவசனப்பகுதிதான். இவ்வார்த்தைகள் எல்லாம் நம் வேதாகமத்தின் ஒரு பகுதியாயிருப்பதால் நாம் உண்மையாகவே ஆசீர்வதிக்கப்பட்வர்கள்தான். ரோமர் 11 : 33 - 36 வசனங் களில் பவுல் தேவனைப்பற்றிய அந்த அழகான சித்திரத்தைத் தீட்டுகிறார்.

**ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்? தனக்குப் பதில் கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்? சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்.**

தேவ ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தைகளில் மிகவும் அழகான மற்றும் கம்பீரமான வேத வசனப்பகுதிகளில் ஒன்றாகிய இவ்வசனப் பகுதியை நாம் சிறப்பாகப் புரிந்து கொள்ள முயற்சிப்போம்.

தேவனுடைய குமாரனையும், அவருடைய சபையையும் துன்பப்படுத்திய பவுலை மீட்டெடுத்த தேவனைப் புகழ்ந்து அவர் துதிப்பாடும் இவ்வசனப் பகுதி நமக்காக பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறபடியால் நாம் சிலாக்கியம் பெற்றிருக்கிறோம்.

**வசனம் 33.** இவ்வசனத்தில் பவுல் தேவனுடைய ஞானம், அறிவு போன்ற வைகளிடத்தில் நம் கவனத்தைத் திருப்புகிறார். தேவனுடைய சிந்தையை நம்மால் புரிந்து கொள்வதற்கு வழியே இல்லையென்றும், தேவஞானம் மனிதப் புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதென்றும் இவ்வசனத்தில் பவுல்

ஒப்புக்கொள்கிறார்.

பவுலின் வார்த்தைகள் நீதிமொழிகள் 21 : 30 வசனத்தோடு முற்றிலும் ஒத்துப்போகிறது. அவ்வசனம் **கர்த்தருக்கு விரோதமான ஞானமுமில்லை, புத்தியுமில்லை. ஆலோசனையுமில்லை** என்று சொல்கிறது. I கொரிந்தியர் 1 : 20 ல் பவுல், **ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத்துத் தர்க்க சாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தை தேவன் பைத்தியமாக்க வில்லையா?** என்று கேள்வி கேட்கிறார். இந்த மாபெரும் அப்போஸ்தலன் ரோமர்களும், ஒட்டுமொத்த உலகமும் தேவனுடைய மகத்துவத்தையும், மேன்மையையும் உணர்ந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறார். அதுபோல், மனிதனால் புரிந்துகொள்ள முடியாத காரியங்களில் மனிதன் தேவனை கேள்விகேட்பது எவ்வளவு மதியீனமானது என்பதை உணர வேண்டுமென்றும் விரும்புகிறார்.

**வசனம் 34.** தேவன் எந்த அளவுக்கு தம்முடைய சிந்தையை மனிதனுக்கு வெளிப்படுத்தியிருக்கிறாரோ அந்த அளவுக்குத்தான் மனிதன் தேவனுடைய சிந்தையை அறிந்து கொள்ள முடியும். நாம் ஏற்கனவே பார்த்தபடி, தேவனுடைய ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள். அவருடைய வழிகள் ஆராயப்படாத வைகள். தேவனைக் கேள்விகேட்பதோ அவருடைய சிந்தையை மனிதனுடைய சிந்தையோடு ஒப்பிடுவதோ முட்டாள்தனமான காரியமாகும். ஏனென்றால், மனிதனை தேவனோடு ஒருபோதும் ஒப்பிடவே முடியாது. பல நேரங்களில் தேவன் செயல்படுகிற விதத்தைக் குறித்து நாம் ஆச்சரியப் படுகிறோம். அதன் காரணகாரியங்களை நம்மால் கொஞ்சம் அறிந்து கொள்ள முடிகிறதென்பதைக் குறித்து நாம் ஒருபோதும் பெருமை கொள்ள வேண்டாம். ஏனென்றால், தேவன் செயல்படும் விதத்தை நம்மால் மிகக் குறைவாகவே அறிந்து கொள்ள முடியும்.

நம் தேவனைப் பற்றியும், அவருடைய வழிகளைப்பற்றியும் புரிந்து கொள்ள முயற்சிப்பது கிட்டத்தட்ட ஒரு போராட்டமாகிறது. இன்றைய மனிதனு டைய அறிவு பழங்கால மனுதனுடைய அறிவைவிட மேலானது என்பதை நாம் அறிந்திருக்கிறபடியால் நம்மைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணி விடுகிறோம் (ரோமர் 12 : 3) சில மனிதர்கள் தங்களை அதிபுத்திசாலி களாக நினைத்துக் கொண்டு தங்களை தேவனோடு ஒப்பிடத் துணிகிறார்கள்.

**வசனம் 35.** யோபுவுடனான உரையாடலின்போது தேவன், தனக்குப் பதில் கொடுக்கப்படும்படி, முந்தி எனக்குக் கொடுத்தவன் யார்? வானத்தின்

இச்சைகளின்படி நடக்கிறவர்களுமாயிருக்கிறார்கள். இவர்களுடைய வாய் இறுமாப்பான வைகளைப் பேசும், தற்பொழிவுக்காக முகஸ்துதி செய்யும் ".

முறையிடுவது அல்லது முறுமுறுப்பது மிகப்பெரிய பாவமாகும். **சகோதரரே நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு, ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள் ; இதோ, நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார்.** (யாக். 5 : 9, 10 ) தேவன் அப்போஸ்தலனாகிய பேதுரு மூலமாக, " முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள் " என்று கட்டளையிடுகிறார் ( I பேதுரு 4 : 9 ). இங்கே, நம் ஆண்டவருக்கு செவிகொடுங்கள்; இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக, **உங்களுக்குள்ளே முறுமுறுக்க வேண்டாம்** என்று சொன்னார் (யோவான் 6 : 43).

ஒருவர் என்ன காரணத்திற்காக முறையிடுகிறார் அல்லது முறுமுறுக்கிறார் என்பது ஒரு பொருட்டே அல்ல என்பதை கவனித்தீர்களா? ஒருவர் எந்தக் காரணத்திற்காக முறுமுறுக்கிறவராக இருந்தாலும் அவர் கண்டிக்கப்படுகிறார். உபதேசப் பிழை இருந்தால் கூட அதற்கு விரோதமாக இரகசியமாக முறுமுறுப்பது கோழைத்தனமாகும். உதாரணமாக, ஆரோக்கியமான உபதேசம் சமரசம் செய்யப்படாமல் அதை எதிர்த்து உத்தரவு சொல்ல வேண்டும். ( தீத்து 1 : 9 ; ரோமர் 16 : 17 ) கிறிஸ்தவர்கள் முறுமுறுக்கிறவர்களாக முறையிடு கிறவர்களாக இருக்கக்கூடாது என்று தேவனால் போதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

நாம் கற்றுக்கொண்டவைகளை எப்படி நடைமுறைக்குக் கொண்டுவர முடியும்? ஒருவரைப் பற்றி வெளிப்படையாகப் பேசாமல் தனியாகக் கிசுகிசுப்பது கிறிஸ்துவின் சிந்தை அற்றவர்களாயிருப்பதையே குறிக்கிறது. தேசம், இனம், ஜாதி, மொழி, பொருளாதார நிலை, கல்வித்தரம் போன்றவைகளை அடிப்படையாக வைத்து கிறிஸ்தவர்கள் மத்தியில் பேதங்கள் ஒருபோதும் ஏற்படக்கூடாது. இவைகள் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கு விரோதமாக ஒருவர் விவாதிக்கும் பொருளாகவும் இருக்கக்கூடாது. ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால் சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள் " ( I பேதுரு 1 : 22 ) இந்த வசனங்களை நம் வாழக்கையில் நாம் நடைமுறைப்படுத்தினால் சக கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக நாம் ஒருபோதும் முறையிடவோ, முறுமுறுக்கவோ மாட்டோம். ✞

நன்மையானதை நேசிக்கத் தெரியாதவர்களுக்கு
தீமையானதை வெறுக்கவும் தெரியாது.

# ஏன் நீங்கள் வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்று நம்ப வேண்டும்?

## *Why You Should Believe The Bible To Be The Word Of God*

J.C. Choate

உலக முழுவதிலும் லட்சக்கணக்கான மக்கள் வேதாகமம் தேவனுடைய வார்த்தையென்று நம்புகிறார்கள். அவர்கள் வேதாகமத்தைக் குறித்து கேள்வி கேட்பதை விட்டுவிட்டு வேதாகமம் உண்மையென்று ஏற்றுக்கொள்கிறார்கள். சிலர் இதை சந்தேகிக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் வேதத்தில் பதிவு செய்யப் பட்டிருக்கிற காரியங்களைக் குறித்து ஒழுங்காக ஆராயவில்லை. இன்னும் சிலர் வேதாகமத்தை முற்றிலுமாக நிராகரிக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் உலக ஞானத்தின்படி ஏதாவது ஒன்றை ஏற்றுக் கொள்வதற்காக வளர்க்கப் பட்டிருக்கிறார்கள். மேற்சொல்லப்பட்ட இரண்டு வகைகளில் ஏதாவது ஒன்றில் நீங்கள் இருந்தால், நீங்கள் ஏன் வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்று நம்ப வேண்டும் என்பதற்கான சில காரணங்களை சுருக்கமாகச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.

### I. வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்று சொல்லிக் கொள்கிறது.

வேதாகமம் கர்த்தருடைய வார்த்தை என்று அழைக்கப்படுகிறது. (எரேமியா 14 : 1) தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் (II பேதுரு 1: 20, 21) என்று பேதுரு சொன்னார். கிறிஸ்து அடிக்கடி பழைய ஏற்பாட்டிலிருந்து வசனங்களை மேற்கோள்காட்டி அதை தேவ வசனம் என்று அழைத்திருக்கிறார் ( யோவான் 10 : 35 ) கடைசியாக, பவுல் வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்று சொன்னார். (II தீமோத் 3 : 16, 17).

### II. வேதாகமம் உண்மையான அறிவியலோடு ஒத்துப்போகிறது.

பூமி உருண்டை என்றும் கடலில் வழிகள் இருக்கின்றன என்று மனிதன் கண்டுபிடிப்பதற்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே தேவன் அந்த விஞ்ஞானப் பூர்வமான உண்மைகளையெல்லாம் தம்முடைய வார்த்தைகளில் சொல்லியிருக்கிறார். ( ஏசாயா 40 : 22 ; சங். 8 ). இந்த விஞ்ஞானப்

பூர்வமான உண்மைகள் வேதாகம எழுத்தாளர்களுக்கு அந்தக் காலத்திலேயே எப்படித் தெரியும்? தேவன்தான் அவர்களுக்கு அதை வெளிப்படுத்தினார்.

### III. பல தொல்பொருள் கண்டுபிடிப்புகள் வேதாகமத்தை ஆதரிக்கின்றன

இத்தகைய கண்டுபிடிப்புகள் கிறிஸ்துவுக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக நடந்த சம்பவங்களைத் தெளிவுபடுத்தியிருக்கின்றன. அதேநேரத்தில், வேதாகமம் எதைச் சொல்லியிருக்கிறதோ அதற்கு முழு ஆதரவைக் கொடுத்திருக்கின்றன. சில குறிப்பிட்ட வேதாகம சம்பவங்களைச் சந்தேகிக்கிற சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். குறிப்பாக, ஜலப்பிரளயத்தை சிலர் சந்தேகிக்கிறார்கள். ஆனால் 1872ல் George Smith என்பவர் சில பாபிலோனிய கற்பலகைகளைக் கண்டுபிடித்தார். அவைகள் ஜலப்பிரளயத்தைப் பற்றி அறிவித்தன. இன்னும் வேறு சில உதாரணங்களையும் கொடுக்க முடியும்.

### IV. வேதாகமமும் புவியியலும் இசைந்திருக்கின்றன

இவ்வுலகில் காணப்படும் பெரும்பாலான மலைகள், ஆறுகள், பட்டணங்கள், இன்று எந்தெந்த பெயர்களில் அழைக்கப்படுகிறதோ அந்தந்த பெயர்களிலேயே வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இது வேதாகம எழுத்தாளர்கள் ஒருபோதும் இருந்திராத கற்பனையான இடங்களை வேதாகமத்தில் பதிவு செய்யவில்லை என்பதைத்தான் காட்டுகிறது.

### V. வேதாகமமும் உலக வரலாறும் இசைந்திருக்கின்றன

உதாரணமாக, வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் சம்பவங்கள் உலக வரலாற்றிலும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஒருவர் உலகின் வெவ்வேறு வரலாறுகளை வாசிக்கும்போது இதைத் தெரிந்துகொள்ள முடியும். வேதாகமம் கட்டுக்கதைகளின் புத்தகமாயிருந்தால் இது எப்படி சாத்தியமாகும்?

### VI. வேதாகமத்தை மனிதன் மாத்திரம் எழுதியிருக்க முடியாது

ஏனென்றால், இதில் இடம்பெற்றுள்ள பல காரியங்கள் மனித அறிவுக்கு அப்பாற்பட்டவைகளாயிருக்கின்றன. மனிதன் மாத்திரம் இதை எழுதியிருந்தால் இன்றைய தேதியில் யாரோ ஒருவர் இதை விட சிறப்பான புத்தகத்தை எழுதியிருப்பார்.

### VII. வேதாகமம் ஓர் அருமையான ஒருங்கமைவுள்ள புத்தகம்

வேதாகமம் வெவ்வேறுபட்ட நாற்பது ஆசிரியர்களால், சுமார் 1600 வருடகால இடைவெளியில் பல்வேறுபட்ட இடங்களிலிருந்து எழுதப்பட்டிருந்தாலும் கூட, எல்லோ ராலும் ஒரே மாதிரியாக எழுதப்பட்ட ஒருங்கமைவுள்ள புத்தகமாயிருக்கிறது.

தேவன் வேதாகம எழுத்தாளர்களை வழிநடத்தாமல் இருந்திருந்தால் இது எப்படி சாத்தியமாயிருக்கும்.

**VIII. வேதாகமம் பல தீர்க்கதரிசனங்களை மட்டும் உள்ளடக்கவில்லை**

அவைகள் எப்படி நிறைவேறின என்பதையும் வெளிப்படுத்தியிருக்கிறது. உதாரணமாக, யோவேல் 2 : 28, 29 வசனங்களில் இதன் ஆசிரியர் மாம்ச மான யாவர் மேலும் தேவன் தம்முடைய ஆவியை ஊற்றும் காலத்தைப் பற்றி பேசுகிறார். பின்பு, அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் நாம் பார்க்கும்போது அங்கே பேதுரு தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப் பட்டபடியே இது நடந்தேறுகிறது என்று சொன்னார். பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவைப் பற்றி ஏராளமான தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாமே புதிய ஏற்பாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஏசாயா 53 : 5 மற்றும் லூக்கா 22 : 63, 64 வசனங்களை வாசிக்கவும்.

**IX. வேதாகமம் பலவிதமான சோதனைகளின் மத்தியிலும் தேவனுடைய வார்த்தையாக நிலைத்து நிற்கிறது.**

வேதாகமம் பல சத்துருக்களை சந்தித்து காலத்தால் அழியாததாக நிற்கிறது. அது பல நூற்றாண்டுகளாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. நவீனகால மொழியாக்கத்தைப் பண்டைய கால தோல்சுருள்களோடு ஒப்பிட்டுப்பார்த்தால் வேதாகமத்தின் மாறாத தன்மை மனதில் பதியும்.

**X. வேதாகமம் மனிதனுடைய மாபெரும் கேள்விகளுக்கு பதில் அளிக்கிறது**

மனிதன் எங்கே இருந்து வந்தான்? மனித வாழ்க்கையின் நோக்கம் என்ன? அவன் எங்கே போய்க்கொண்டிருக்கிறான்? இந்த கேள்விகளுக் கெல்லாம் பதில் அளிக்கும் ஒரே புத்தகம் வேதாகமம் தான். மனிதன் தன்னுடைய சிருஷ்டிகரை மகிமைப்படுத்துவதே அவனுடைய வாழ்க்கையின் நோக்கமாயிருக்கிறது. (I பேதுரு 4 : 11 ). மனிதன் நிச்சயமாக பரலோகத்திலோ அல்லது நகரத்திலோ தன்னுடைய நித்தியத்தைக் கழிப்பான் (மத்தேயு 25 : 46)

**XI. மற்றெந்த புத்தகத்தைக் காட்டிலும் இவ்வுலகில் மனிதன் மீது அதிக தாக்கத்தை ஏற்படுத்துவது வேதாகமம் மாத்திரமே**

உலகம் மிக மோசமான ஒன்றாக இருந்தாலும்கூட வேதாகமத்தின் தாக்கத்தினாலே அது ஓரளவு நல்ல இடமாக இருக்கிறது.

# யார் இந்த தேவதூதர்கள்?

## *Who Are These Angels?*

**P.C. Philemon Rajah**

ஆதியாகமம் புத்தகத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் வரை, தேவதூதர்கள், சர்வ வல்ல தேவனுக்கும் சாதாரண மனிதனுக்கும் இடையில் முழுவதும் நாம் படிக்க இயலும்.

தேவதூதர்கள் யார்? அவர்கள் எப்படிப்பட்டவர்கள்? அவர்களுடைய வேலைகள் என்ன? அதாவது அவர்கள் என்னவெல்லாம் செய்வார்கள்? அல்லது, அவர்களால் என்னவெல்லாம் செய்ய முடியும்? என தேவதூதர் களைப் பற்றி நிறைய கேள்விகளை நாம் கேட்கக் கூடும்.

இன்றைய நாட்களில் தேவதூதர்களைப் பற்றி வேதாகமம் சொல்லுகின்ற சத்தியங்களைவிட, மனித கற்பனைகளே நம்மிடத்தில் பரவலாக உள்ளது. வேதாகமம் தேவதூதர்களைப் பற்றி எந்த அளவு வெளிப்படுத்தியிருக்கிறதோ, அந்த அளவே அவர்களைப் பற்றி அறிந்துகொள்வது மிகவும் நலமானதாகும். ஏனெனில், மறைவானவைகள் தேவனுக்கு உரியவைகள் ஆகும் (உபா. 29:29).

### யார் இந்த தேவதூதர்கள்?

**I. தேவ செய்தியாளர்கள்**

தூதர்கள் என்பது " aggelos " (அக்கெலாஸ்) என்ற கிரேக்க வார்த்தை யிலிருந்து வந்தது. இதன் பொருள் செய்தியைக் கொண்டு செல்பவர் (Messenger) என்பதாகும். வேதாகமத்திலே தூதர்கள், தேவனுடைய செய்திகளை மனிதர்களுக்கு அறிவிக்கிறவர்களாக இருந்தனர்.

அச்செய்தி, தேவனுடைய வாக்குத்தத்தமாகவோ ( ஆதி. 18 : 10 ), எச்சரிப்பாகவோ ( ஆதி. 18 : 20, 19 : 12, 13 ) கட்டளையாகவோ ( எபி. 2 : 1, 2 மத். 1 : 20, 21 ) அல்லது நற்செய்தியாகவோ ( லூக். 2 : 9 – 12 ) இருக்கலாம்.

## II. தேவ ஊழியர்கள்

எபி. 1 : 7, 14 தேவதூதரைக்குறித்தோ : **தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியர்க்காரரை அக்கினி ஜுவாலைகளாகவும் செய்கிறார் என்று சொல்லியிருக்கிறது. இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும் படிக்கு, அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?"**

தேவதூதர்கள், தேவன் கட்டளையிடுகிற ஒவ்வொரு வேலையையும் அப்படியே செய்கிறவர்களாகவும் இருந்தனர். அது நீதிமான்களைக் காப்பதாகவும் (ஆதி. 19), துன்மார்க்கரை அழிப்பதாகவும் (யாத். 12), தேவசித்தம் செய்ய தூண்டுவதாகவும் (நியாதி. 6 : 11 – 16) இருக்கலாம்.

## III. தேவ எதிரிகள்

கர்த்தராகிய தேவனால் படைக்கப்பட்டவர்களாக இந்த தூதர்கள் (கொலே. 1 : 16, 17; சங். 148 : 2 – 9) இருந்தாலும், அவர்களில் கர்த்தருக்கு எதிராக செயல்படு கிறவர்களும் உண்டு. ஆகையால், அப்படிப்பட்ட தூதர்களால் தேவனுக்கு எதிராக பாவஞ்செய்ய முடியும் (II பேதுரு. 2 : 4). கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மாற்றி உபதேசிக்கவும் முடியும் (கலா. 1 : 7, 8), தங்களுடைய மேன்மையை இழக்க முடியும் (யூதா 6), புத்தியீனமாய் செயல்பட முடியும் (யோபு. 4 : 18).

தேவதூதர்கள் மனிதனைவிட சற்று உயர்வாக தேவனாலே படைக்கப் பட்டாலும், அவர்களும் மனிதர்களைப் போல தேவனுடைய வேலைக்காரர் களாக (Servants of God) இருக்கிறபடியினால், அவர்களை நாம் வழிபடக் கூடாது. வெளி 22:8 **யோவானாகிய நானே இவைகளைக் கண்டும் கேட்டும் இருந்தேன். நான் கேட்டுக் கண்டபோது, இவைகளை எனக்குக் காண்பித்த தூதனை வணங்கும்படி அவன் பாதத்தில் விழுந்தேன். அதற்கு அவன்: நீ இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் உன் சகோதரரோடும் தீர்க்கதரிசிகளோடும், இந்தப் புஸ்தகத்தின் வசனங்களைக் கைக் கொள்ளுகிறவர்களோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள் என்றான்.** மேலும், இப்படிப்பட்ட பாவம், நமது நித்தியத்தை இழக்கச் செய்யும். கொலே 2 : 19 **மாயமான தாழ்மையிலும், தேவதூதர் களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து, தன் மாம்ச சிந்தையினாலே வீணாய் இறுமாப்புக் கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப்பொருளை நீங்கள் இழந்து போகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப் பாருங்கள்.**

இறுதியாக, பிரியமானவர்களே! மனிதர்களில் நீதிமான்கள், துன்மார்க்கர் என இருப்பது போலவே, தேவதூதர்களிலும் தேவனுக்குக் கீழ்ப்படியும் நல்லவர்களும், அவரை எதிர்க்கும் தீயவர்களும் உண்டு. தேவதூதர்களுக்கு தேவன் வல்லமைகளைக் கொடுத்திருந்தாலும், எல்லாரும் தேவனுக்கு கீழானவர்களே! அவர்கள் அனைவரும் நம்மைப் போலவே தேவனை வழிபடு கிறவர்கள் (வெளி. 5 : 13, 14), மற்றும் பணிவிடை செய்பவர்கள் (மத். 4 : 11), என்பதை நினைவில் கொள்வோம்.

✝

## கிறிஸ்தவர்களும், சுவிசேஷமும்


- ☑ **கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தை** வாசித்துப் புரிந்த கொள்ள வேண்டும் (அப். 8 : 30, 31).
- ☑ **கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தைக்** குறித்து வெட்கப்படக்கூடாது. (ரோமர் 16 : 15, 16).
- ☑ **கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தை** மற்றவர்களுக்குப் பிரசங்கிக்க வேண்டும். (மாற்கு 16 : 15, 16).
- ☑ **கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தைக்** காத்துக் கொள்ள வேண்டும். ( I தீமோத்தேயு 6 : 20).
- ☑ **கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்திற்காக** உத்தரவு சொல்ல ஆயத்தமாயிருக்க வேண்டும். (பிலிப் 1 : 17).
- ☑ **கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தை** உறுதியாய்ப் பிடித்துக் கொள்ள வேண்டும். (I கொரி. 15 : 2).
- ☑ **கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்திற்குப்** பாத்திரமாக நடந்து கொள்ள வேண்டும். (எபேசியர். 4 : 1).
- ☑ **கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தைப்** புரட்டக்கூடாது. (கலாத்தியர் 1 : 7).
- ☑ **கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தை** மறைத்து வைக்கக்கூடாது. ( II கொரிந்தியர் 4 : 3).
- ☑ **கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தை** மற்றவர்களுக்கு விவரித்துச் சொல்ல வேண்டும். (கலா 2 : 2).

# கர்த்தருடைய ஊழியக்காரன் எப்படியிருக்கவேண்டும்?

## *How Should Be The Lord's Servant?*

B. Arjunan

கர்த்தருக்கு ஊழியம் செய்ய சிலர் ஒப்புக்கொடுக்கிறார்கள். நல்லது தான். ஆனால், அவர்கள் எப்படியிருக்க வேண்டுமென வேதாகமம் போதிக்கிறது. **மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ் செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். அடிமையானவனானாலும், சுயாதீனமுள்ளவனானாலும், அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து, மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ் செய்யுங்கள்** என அப்போஸ்தலனாகிய பவுல் எபேசிய கிறிஸ்தவர்களுக்கு எழுதின நிருபத்தில் வாசிக்கிறோம் (எபே. 6 : 6 – 8 ). உலக வேலை செய்கிறவர் களுக்கும் கர்த்தருக்கு ஊழியஞ்செய்கிறவர்களுக்கும் அநேக வித்தியாசங்கள் உண்டு. கர்த்தருடைய ஊழியத்தை உலக வேலையோடு ஒப்பிட முடியாது. உலகவேலையில் மனுஷரை பிரியப்படுத்த வேலை செய்வார்கள். கர்த்தருடைய ஊழியம் அப்படிப்பட்டது அல்ல. கர்த்தருக்கென்று நல்மனதோடே செய்ய வேண்டும். ஒரு ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவனாய் இருக்கக் கூடாது என படிக்கிறோம். **கர்த்தருடைய ஊழியக்காரன் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும்** (II தீமோ. 2 : 24). சமாதானத்தை போதிக்கிறவன் சண்டைபண்ணிக் கொண்டிருந்தால் அவன் எப்படி கர்த்தருடைய வசனத்தை மற்றவர்களுக்கு போதிப்பான்.




**ஊழியக்காரன் போதகசமர்த்தனுமாயிருக்கவும் தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும்.**

அப்படிப்பட்டவர்களே கர்த்தருடைய ஊழியத்தை செய்யத் தகுதியுடையவர்களாயிருக்கிறார்கள். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது: நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு என எழுதுகிறார் ( II தீமோ. 2 : 15 ). வெட்கப்படக் கூடிய ஒரு

நபர் கர்த்தருக்கு ஊழியம் செய்யமுடியாது. சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படுவதற்கு என்ன இருக்கிறது? அது இரட்சிப்பை உலகமக்களுக்கு கொடுக்கக் கூடியது. அதைக்குறித்த வைராக்கியம், வல்லமையுள்ள சுவிசேஷத்தை எடுத்துச் சொல்வதில் ஆர்வம் வெளிப்படவேண்டும். **சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு** என காண்கிறோம் (II தீமோ. 4 : 2). சுவிசேஷத்தை சொல்லுவதற்கு நேரத்தையோ காலத்தையோ நோக்கிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. சமயம் கிடைக்கும் போதெல்லாம் அவன் வாயிலிருந்து வெளிப்படுவது இயேசுவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலின் செய்தியாகிய சுவிசேஷமாக இருக்கவேண்டும். மேலும் **உன்னைக்குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய்** என்கிறார் பவுல் (I தீமோ. 4 : 16). வேதாகமம் இருபுறமும் கருக்குள்ள பட்டயம் அதைப்பயன்படுத்துவது அவ்வளவு எளிதானதல்ல. கர்த்தருடைய உபதேசத்தைப் போதிக்கும்போது ஒரு ஊழியக்காரன் மிகவும் அந்த உபதேசத்தைக்குறித்து எச்சரிக்கையுள்ளவனாக இருக்க வேண்டும்.

**கர்த்தர், ஊழியக்காரர்களை சும்மா வேலைவாங்க விரும்பமாட்டார்.**

**அவர்களுக்கு அதினால் பிழைப்பு உண்டாக்கி வைத்திருக்கிறார். அந்தப்படி சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்** (I கொ. 9 : 14). வேலை செய்கிறவன் கூலிக்கு பாத்திரனாயிருக்கிறான். உலக எஜமான்களுக்கு வேலை செய்கிறவர்களுக்கு அன்றாட படி கொடுக்கப்படுகிறது. அதைப்போல கர்த்தரும் எவரையும் வெறுமனே வேலைகொள்ள விரும்பவில்லை. ஆக, சுவிசேஷத்தை அறிவிக்கிற அவர்களுக்கு அந்த சுவிசேஷத்தினாலே பிழைப்பை ஏற்படுத்தியிருக்கிறார் என்று படிக்கிறோம். ஒரு சுவிசேஷகன் பலவந்தமாக ஏற்படுத்தப்படுவதில்லை. அதை அவன் கடமையாகக் கொள்ளவேண்டும். **சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ** என்கிறார் பவுல் (I கொ. 9 : 16). கடமைக்காக செய்கிறவர்கள் உண்டு. அந்தவிதமாக கடமைக்காக செய்வதைப்பற்றி இவ்வசனம் நமக்கு போதிக்கவில்லை. அதை நான் தான் செய்யவேண்டும். ஏனெனில், அது எனக்குதான் தெரியும். அந்த சுவிசேஷம் எப்படிவந்தது? அது எதற்காக வந்தது? அதன் பயன் என்ன? போன்ற வினாக்களுக்கு விடையளிக்க முடியும்.

கடமைக்காக செய்கிறவர்கள் அதனுடைய விலைமதிப்பை அறியார்கள். இந்த சுவிசேஷம் யாருக்கு சொல்லப்படவேண்டும் என்ற கேள்வியை எழுப்புவோமானால்; வேதம் சொல்லுகிறது **அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசிங்கிக்கப்பட்டுவருகிறது; அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக்காரனானேன்** ( கொலோ. 1 : 23 ). **ஆண்டவரும், நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்றார்.** அந்தப்படியாக இன்றுவரை சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாருக்கும் பலவகையில் எடுத்துச் செல்லப்படுகிறது. அதற்கென்றே பவுல் தன்னை சுவிசேஷத்தில் ஈடுபடுத்திக் கொண்டார் எனக் காண்கிறோம். இந்த சுவிசேஷ ஊழியம் அன்பின் ஊழியம். இது கட்டாயத்தின் பேரில் செய்யக்கூடிய ஊழியம் அல்ல என்பதை நாம் முதலாவது புரிந்து கொள்ளவேண்டும். **சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள். இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்** (கலா. 5 : 13). மேலும், **இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே** (கலா. 1 : 10). ஒவ்வொரு ஊழியனும் கர்த்தரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்துகொண்டு ஊழியத்தை செய்ய வேண்டும். மனுஷரைப்பிரியப்படுத்தி ஊழியஞ்செய்கிறதினாலே அவன் கர்த்தருக்கேற்ற ஒரு ஊழியக்காரனாக இருக்கமுடியாது.

**ஒரு ஊழியன் தர்ம பணத்தை குறித்த விஷயத்தில் உண்மையுள்ள வனாயிருக்க போதிக்கப்படுகிறான்.**

பவுல் இந்த விஷயத்தில் **எங்கள் ஊழியத் தினாலே சேர்க்கப்படும் இந்த மிகுதியான தர்மப்பணத்தைக்குறித்து ஒருவனும் எங்களைக் குற்றப்படுத்தாதபடிக்கு நாங்கள் எச்சரிக்கையாயிருந்தது** என குறிப்பிடுகிறார் ( II கொ. 8 : 20 ). ஊழியத்தில் நற்சாட்சி மிகவும் அவசியம். மற்றவர்கள் நம்மீது நம்பிக்கையற்றவர்களாக இருக்கும்போது நாம் சொல்லக் கூடிய சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்வது கடினம். இதனால் சுவிசேஷம் தடைபடும். ஒவ்வொரு சுவிசேஷகனும் தன்னைப் பற்றிய கதைகளைச் சொல்லாமல் சுவிசே ஷத்தை அறிவிக்கிறவனாக இருக்க பிரயாசப்படவேண்டும். பவுல் சொல்லுகிறார்; **நாங்கள் எங்களையே பிரசங்கியாமல் கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசிங்கிக்கிறோம்** என்கிறார் ( II கொரி. 4 : 5). ஒரு சுவிசேஷகன் இயேசுவின் நிமித்தமாக ஜனங்களுக்கு ஊழியக்காரனாக இருக்கிறான். அதற்கேற்ற கூலியை அவன் கர்த்தரிடத்தில் பெறுவான். மேலும் பவுல்; **வெட்கமான அந்தரங்க காரியங் களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப்புரட்டாமலும், சத்தியத்தை**

வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய **மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப் பண்ணுகிறோம்** என்கிறார் ( II கொ. 4 : 2 ). கிறிஸ்தவம் உண்மையின் மார்க்கம். அதில் கூட்டிச் சொல்வதற்கோ, அல்லது குறைத்து சொல்வதற்கோ இடமில்லை. அநேக மார்க்கங்கள் உலகத்தில் இருக்கிறது. அவைகளை சிலர் கூட்டியும், குறைத்தும், திரித்தும் கூறுவர். வேதாகமத்தைப் பொறுத்தவரை சத்தியத்தை சத்தியமாகவே சுவிசேஷகர்கள் பிரசங்கித்து வருகிறார்கள். தந்திரமாகவும் வேத வசனத்தை புரட்டியும் சொல்லவேண்டிய அவசியமில்லை. உண்மை சத்தி யத்தை எடுத்துரைக்கும்போது தேவனால் உண்டானவர்கள் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறார்கள். தேவனால் உண்டாகாதவர்கள் தேவனுடைய வசனங்களுக்கு எதிர்த்து நிற்கிறார்கள். அதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும் பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் அறிந்துகொள்கிறோம்.

**மேலும் ஓர் ஊழியன் கர்த்தருக்கு ஊழியக்காரனாயிருக்கிறான் என்பதை அவன் ஒருபோதும் மறந்துபோகாதிருக்கவேண்டும்.**

ஏனெனில் பவுல் கொரிந்துசபைக்கு எழுதும்போது; **உங்கள் விசுவாசத்திற்கு நாங்கள் அதிகாரிகளாயிராமல், உங்கள் சந்தோஷத்திற்குச் சகாயராயிருக்கிறோம்; விசுவாசத்தினாலே நிலைநிற்கிறீர்களே** என்கிறார் ( II கொரி.1 : 24). சில சபை போதகர்கள் தாங்கள் அதிகாரிகள்போல விசுவாசிகளிடம் நடந்து கொள்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் அந்தவிதமாக நடந்துகொள்ளவில்லை. அவர்களுடைய சந்தோஷத்திற்குச் சகாயராக இருந்திருக்கிறார். அவரவர் விசுவாசத்தினால் நிற்கிறார்கள். கிறிஸ்துவானவர் நமக்கு என்ன கட்டளை கொடுத்திருக்கிறாரோ அவைகளைச் செய்து நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அதை விட்டு விட்டு நாம் மற்றவர்கள் மீது துரைத்தனம் பண்ணுவது நல்லதல்ல. அவன் நின்றாலும் விழுந்தாலும் தேவன் ஒருவருக்கே கணக்கு ஒப்புவிக்க வேண்டியவனாயிருக்கிறான். நாம் நம்முடைய கணக்கை தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகையால் **ஊழியஞ் செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்தி சொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்** (ரோம. 12 : 7, 8). அவரவருக்கு கொடுக்கப்பட்ட வேலையை செய்வார்களேயானால் கர்த்தருடைய சபை வளர்ச்சிப் பாதையில் இருக்கும். தேவையில்லாமல் மற்றவர்களுடைய வேலையில் தலையிடும்போது கர்த்தருடைய ஊழியம் பாதிக்கப்படுகிறது.சபையிலே அவரவருடைய

தாலந்துகளுக்கு ஏற்றவாறு தேவன் வேலையைக் கொடுத்திருக்கிறார். இதில் தாலந்து குறைவாக இருக்கிறவன் நிறைவாக இருக்கிறவனைப் பார்த்து பொறாமை கொண்டு அவனைப்போல நான் செயல்படவேண்டும் என்று நினைத்து அந்த பதவிக்கு முயற்சிப்பது பலன் அளிக்காது. தனக்கு என்ன வேலையைக் கொடுத்திருக்கிறாரோ அதை அவன் சிறப்பாக தேவனுடைய சமூகத்தில் செய்து நிறைவேற்றும்போது, தேவன் அதற்கு மேலான பதவிகளை அவனுக்குக் கொடுப்பார். ஆகையால் நீங்கள் ஒரு சபைப் போதகராக இருந்தால் அவைகளில் இன்னும் தேர்ச்சியடைய முற்படுங்கள் அல்லது நீங்கள் ஒரு சுவிசேஷ ஊழியராக இருந்தால் உங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையை சிறப்புடன் செய்து அதை நிறைவேற்றுங்கள். எதுவாக இருந்தாலும் கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினாலே வாய்க்கும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கவேண்டும். **அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்** (ரோம. 12 : 11). கர்த்தருடைய ஊழியக்காரன் கர்த்தருக்கு ஊழியஞ்செய்யவேண்டும். அப்பொழுது தேவனால் அவன் கனத்தைப் பெற்றுக்கொள்ளுவான்.

**ஓர் ஊழியக்காரன் சுவிசேஷத்தினிமித்தமாக தீங்கு அநுபவிக்கவேண்டுமா?**

ஆம். ஒரு ஊழியக்காரன் சுவிசேஷத்தினிமித்தம் தீங்கு அநுபவிக்க வேண்டும். அப்படியானால் யார் இந்த வேலைக்கு வருவார்கள் என்ற கேள்வி உங்களுக்குள் எழும்பும். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் இவைகளை ஏற்றுக்கொண்டு கர்த்தருக்கு ஊழியம் செய்வார்கள். இயேசு சொல்கிறார்; **ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன். நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்** (யோவா. 12 : 26). இயேசுவைப் பின்பற்றி அவருக்கு ஊழியஞ்செய்கிறவன் பிதாவினால் ஆசீர்வதிக்கப்படுகிறான். மனிதர்களைப் பின்பற்றி ஊழியஞ் செய் கிறவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள். உண்மையான ஒரு ஊழியன் சுவிசேஷத்தின் நிமித்தமாக தீங்கு அநுபவிக்கவேண்டும். இதையே பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; **நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு. தீங்க நுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய். உன் ஊழியத்தை நிறைவேற்று** என்றார் (II தீமோ. 4 : 5). ஒரு உண்மையுள்ள ஊழியக்காரனுக்கு அநேக பொறுப்பு இருக்கிறது. அவன் மனத்தெளிவுள்ளவனாயிருக்க வேண்டும். தீங்க நுபவித்துக்கொண்டு சுவிசேஷக வேலையைச் செய்யவேண்டும். அத்தோடு நின்றுவிடாமல் அவனுடைய ஊழியத்தை அவன் நிறைவேற்ற வேண்டும். பாதி யிலே விட்டு விட்டுச் செல்லும் வேலையில்லை இது. நீங்கள் எப்படிப்பட்டவர்கள்?

✞

# வசனமே வழி

## The Word Is The Way

Bro. Benny Martin

உங்கள் யாவருக்கும் வல்லவராம் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! இந்த இதழின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. வாலிப வயது வழிதவறிப் போகிற வயது, விளைவுகளைப் பற்றி விவாதிக்காமல் விரைந்து சென்று செயலாற்றுகிற வயது. இன்று உலகத்தில் நாம் பார்க்கும் போது வன்முறை மற்றும் பெருங்குற்றங்களில் வாலிபர்களின் பங்கு அதிமாக இருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. வாலிபர்கள் வளர்க்கப்பட்ட விதம், குடும்பப் பின்னணி போன்றவைகள் அவர்கள் குற்றங்களில் ஈடுபடுவதற்கு காரணிகளாக அமைவதாக உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால், அது ஓரளவுக்குத் தான் உண்மை. ஏனென்றால், சிறுவயதில் நன்றாக வளர்க்கப்பட்டவர்களும், நல்ல குடும்பப் பின்னணியைச் சேர்ந்தவர்களும் சில சந்தர்ப்பங்களில் மிக மோசமான காரியங்களில் ஈடு படுவதை நாம் பார்க்கிறோம். எனவே, வாலிபர்களைப் பாவம் செய்யாதபடி முழுமையாகத் தடுப்பது வளர்ப்போ அல்லது குடும்பப் பின்னணியோ அல்ல. தேவனுடைய வார்த்தை மட்டுமே தடுக்கும். தேவனுடைய வார்த்தை மட்டுமே வாலிபர்களைப் பாவ வழியில் விழுந்து போகாதபடிக்குப் பாதுகாக்கிறது.

பிரியமானவர்களே! இக்கட்டுரையை வாசித்துக் கொண்டிருக்கும் போது, உங்களில் சிலர் என்னுடைய இந்த மோசமான சூழ்நிலைக்குக் காரணம் என் குடும்பப் பின்னனி மட்டும் தான் என்று நினைத்தால் அந்தத் தவறான எண் ணத்தை உங்கள் மனமெனும் நந்தவனத்திலிருந்து வேரறுத்துப் போடுங்கள். ஏனென்றால், இதுவே உங்கள் வளர்ச்சியை ஓரளவிற்காகிலும் தடுக்கும் ஒரு களையாக முளைத்து விடும். தேவனுடைய வார்த்தை என்னும் விதையானது நம் இருதயமாகிய நிலத்தில் விதைக்கப்பட்டால் அது வளர்ந்து, நம் வளமான வாழ்விற்கு வழி கோலும். சுருக்கமாக சொல்லப்போனால் தேவனுடைய வார்த் தையை நம் இருதயத்தில் வைத்து வைத்தால் நாம் பாவம் செய்யாதபடிக்கு அது நம்மைப் பாதுகாக்கும் (சங். 119 : 11). இப்போது தேவனுடைய வார்த்தை நம்மை வாழ்க்கையின் எந்தெந்த நிலைகளில் எல்லாம் பலப்படுத்துகிறது என்பதைக் காண்போம்.

### I. எல்லாம் முடிந்து விட்டது என்ற நிலையில் (சங். 119 : 25)

நம் எல்லோருக்கும் வாழ்க்கையில் எல்லாமே முடிந்து விட்டது. இனி அவ்வளவுதான் என்கிற நிலை ஒரு கட்டத்தில் ஏற்படுகிறது. சங்கீதகாரனுக்கும் இதுபோன்ற ஒரு நிலை ஏற்படுகிறது. மண்ணைக் கவ்வுகிற ஒரு நிலைக்குத் தள்ளப்படுகிறார். அப்போது அவர் தேவனுடைய வசனத்தின்படி தான் உயிர்ப்பிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறார். தேவனுடைய வார்த்தை மட்டுமே விழுந்து கிடக்கின்ற நம்மை உயிர்ப்பிக்கும் வல்லமை பெற்றிருக்கிறது. சங்கீதம் 119-ல் தேவனுடைய வார்த்தை மிக நேர்த்தியான முறையில் விவரிக்கப்பட்டிருக்கிறது. வேதாகமத்திலேயே மிக நீளமான அதிகாரத்தைக் கொண்டது இந்த 119 ஆம் சங்கீதம் தான். இந்த அதிகாரத்தில் தேவனுடைய வார்த்தை கட்டளை, பிரமாணம், வேதம், சாட்சி போன்ற பல்வேறுபட்ட வார்த்தைகளால் விவரிக்கப்பட்டிருக்கிறது. பிரியமானவர்களே! நமக்குப் பெலன் தேவைப்படும் போது நாம் தேவனுடைய வார்த்தைக்குத் திரும்புகிறோமோ? நாம் பெலனற்றுப்போகும்போது தேவனுடைய வார்த்தை மட்டுமே நம்மை எடுத்து நிறுத்தும் (119 : 28). பெரும்பாலான வேளைகளில் நாம் பெலனற்றுப் போகும் போது நம் உறவினர்களிடம், நண்பர்களிடம் திரும்புகிறோம். அவர்கள் இருக்கின்ற கொஞ்ச பெலனும் அற்றுப்போகிற அளவுக்குச் செய்து விடுகிறார்கள். இதே அதிகாரத்தில் 92 ஆம் வசனத்தில் சங்கீதக்காரன் வேதம் என் மன மகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன் என்று சொல்கிறார். இவ்வுலகத்தின் தத்துவ ஞானங்கள், பொன்மொழிகள் போன்றவைகள் எவ்விதத்திலும் நமக்கு ஆறுதலைத் தரவே முடியாது. நாம் எந்த கேள்விக்கு விடை தேடுகிறோமோ அதற்கான விடை தேவனுடைய வார்த்தையில் தான் உள்ளது. உலகில் வேறெங்குமில்லை. எனவே தான், வாழ்க்கையே வெறுத்துவிட்டது, கசந்து விட்டது என்கிற நிலைக்குத் தள்ளப்படும்போது, தேனிலும் இனிய தேவனுடைய வார்த்தைகளை உட்கொண்டு பெலனை பெற்றுக்கொள்ள வேண்டும்.

### II. சஞ்சலத்தால் நாம் கரைந்து விட்டோம் என்ற நிலையில் ( சங். 119 : 28 )

சஞ்சலம் என்கிற வார்த்தையை நாம் கேட்கும்போதே நம் இருதயம் சஞ்சலப்படுகிறது. அவ்வார்த்தையை நாம் காதுகொடுத்து கேட்கவே விரும்பு வதில்லை. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அது அழையா விருந் தாளியாக வந்து நம்மை அலக்கழிக்கிறது. அப்படிப்பட்ட கசப்பான வேளை களில் தேவனுடைய வார்த்தையை நாம் உட்கொள்ளும் போது நம் வாழ்க்கையை அது இனிமையாக்குகிறது. சங்கீதக்காரன் சங். 119 : 103ல் உம்முடைய வார்த்தைகள் என் காதுக்கு இனிமையானவைகள் என்று சொல்ல


வில்லை. மாறாக, உம் வார்த்தைகள் என் நாவுக்கும், வாய்க்கும் இனிமை யானவைகள் என்று சொல்கிறார். அப்படியென்றால், வார்த்தைகளை நாம் ருசிக்க முடியுமா? அவைகளை நாம் உட்கொள்ள முடியுமா? நம் சரீரத்தால் வார்த்தைகளை உட்கொள்ள முடியும்.வேறு விதமாகச் சொன்னால், நம் உள்ளார்ந்த மனுஷனால் முடியும். தேவனுடைய வார்த்தை ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது. நாம் ஆவிக்குரிய பிரகாரமாக பசியுள்ள வர்களாயிருந்தால் தேவனுடைய வார்த்தைகளை உட்கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தையை ருசித்து, அதன் இனிமையை ரசித்தவர்கள் வாழ்க்கையில் ஏற்படுகிற கசப்பை ஒரு பொருட்டாகவே எண்ணமாட்டார்கள். இன்று அநேக வாலிபர்கள் சஞ்சலம் ஏற்படும் போது நண்பர்களின் ஆலோசனைகளை, உறவினர்களின் அறிவுரைகளை நாடுகிறார்கள். இன்னும் சிலர் உலகத்தின் தத்துவ ஞானங்களுக்கும், பொன்மொழிகளுக்கும் செவிகொடுக்கிறார்கள். ஆனால், அவைகளால் தங்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டிருக்கிறார்களா? இல்லை. ஒரு பிரச்சனைக்காகப் போய் ஒன்பது பிரச்சனைகளை வாரிக் கொண்டு வந்திருக்கிறார்கள். தேவனுடைய சாட்சிகள் ( வசனங்கள் ) நமக்கு இன்பமும் ஆலோசனைக்காரருமாயிருக்கிறது என்று (சங். 119 : 24)ல் நாம் வாசிக்கிறோம். தேவனுடைய வார்த்தைகளை நாம் தியானித்து வாசிக்கும் போது, தேவன் நம்மோடு தம்முடைய வார்தகளினால் பேசுகிறார் என்று உணர்கிறோம். பிரியமானவர்களே, தேவன் யாரிடமும் நேரடியாகப் பேசுவதில்லை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

எனவே, சஞ்சலம் வந்து நம்மைத் தாக்கும் போது, நாம் துன்பத்தில் துவண்டு போகாதபடி, இனிய தேவனுடைய வார்த்தையைத் தேடி உட்கொண்டால், அதை ருசித்தால், அதை அசைபோட்டால் கசப்பான அனுபவங்கள் நம்மை விட்டு அகன்று போய் இனிய தருணங்கள் நம்மைப் பின் தொடரும். பிரியமானவர்களே! உங்கள் வாழ்க்கையை வளமாக்க தேவனுடைய வார்த்தை என்னும் பொக்கிஷத்தை உங்கள் இருதயங்களில் சேர்த்து வைத்தால், வைத்து வைத்தால் இவ்வுலகில் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடிக்கு நம்மைக் காப்பது மட்டுமின்றி, அது பரலோகத்தில் நமக்கு ஓர் இடத்தையும் நிச்சயப்படுத்தும் என்பதை நாம் அறியும் போது நம் உள்ளம் பரவசமடைகிறது. தேவனுடைய வார்த்தை நம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் போதுமானது, நமக்கு பெலனைத் தருகிறது. அந்த வார்த்தைகளை தியானித்துப் படிப்பதை நாம் பழக்கமாக்கிக் கொண்டால், பரவசமடைந்து அவைகளைப் பற்றிக் கொள்வோம். தேவன் தாமே உங்களை அபரிதமாக ஆசீர்வதிப் பாராக! ஆமென்.

✝

# நம்மால் காண முடிந்தால்
# If We Could See

Mike Ireland



**அவரைச் சிலுவையில் அறைந்தபோது மூன்றாம் மணி வேளையாயிருந்தது** (மாற்கு 15 : 25) இயேசு கிறிஸ்து வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு சிலுவையில் அறையப்பட்டார். இந்த ஒட்டு மொத்த சம்பவமும் நடந்தேற அதிகநேரம் பிடித்திருக்காது. இயேசுவை சிலுவை யிலறந்தைவர்கள் சிலுவையில் அறைவதில் கை தேர்ந்தவர்கள். அவர்கள் இந்த செயல்முறையில் கைத்தேர்ந்தவர்கள். அவர்களுக்கு பலரை சிலுவையில் அறைந்த அனுபவம் உண்டு. அந்தப் போர்ச் சேவகர்கள் அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டு ஒவ்வொருவன் ஒவ்வொரு பங்கை எடுத்துக் கொள்ளும்படி அவைகளைக் குறித்து சீட்டுப் போட்டார்கள். அதற்கு அப்பால், அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் உட்கார்ந்து, ஆக்கினைக்குட்படுத்தப்பட்ட மனிதன் மரிப்பதை காத்திருந்து பார்ப்பதுதான்.

அந்நேரத்தில் அவர்களால் நம்பமுடியாத காரியம் நடைபெற்றது. ஆனால், கொல்கொதா மலையில் இருந்தவர்களுக்கு அதைப்பற்றி எதுவும் தெரியா மலிருந்தது. ரோமர்களுக்கும் இந்த சம்பவத்தைக் குறித்து எந்த அறிவும்

இல்லாமல் இருந்தது. உலகத்தை மாற்றப்போகும் இச்சம்பவத்தில் அவர்கள் என்ன பங்கு வகிக்கப் போகிறார்கள் என்பதைக் குறித்து எந்த அறிவும் அவர் களுக்கு இருக்கவில்லை. தேவன் தன்னலமற்ற நிலையில் இப்பூமியில் மனிதனாக அவதரித்ததைக் குறித்து அவர்களால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை. அவர்களுக்கு மேசியாவைக் குறித்து எந்த அறிவும் இல்லை அதேபோல் தங்களுக்கு ஓர் இரட்சகர் தேவை என்பதைப் பற்றிய விழிப்புணர்வு கூட இல்லை. எனவே, அவர்கள் எதைச் செய்தார்களோ, அதை அறியாமையில் செய்தார்கள். எனவேதான், இயேசு கிறிஸ்து அவர்களுக்காக ஜெபித்தார்.

யூதர்கள்கூட இக்காரியத்தில் குழப்பமான சூழ்நிலையில் தான் இருந்தார்கள். அவர்கள் அப்படிக் குழம்ப வேண்டிய தேவை இல்லை. வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும் வாய்ப்பு அவர்களுக்கு இருந்த போதிலும், இயேசுவைப் பற்றிய ஏராளமான தீர்க்கதரிசனங்கள் பழைய ஏற்பாட்டில் இடம் பெற்றிருந்த போதிலும் அவரைப் பற்றி குழப்பமான பார்வைதான் அவர்கள் மத்தியில் காணப்பட்டது.

தேவன் மனிதராவார் என்பதையும், மேசியா பாடுபடும் தாசனாக இருப்பார் என்பதையும் அவர்களால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை. அவர்கள் வேறுவிதமான மேசியாவை எதிர்பார்த்தார்கள். அவர்கள் என்ன செய்தார்களோ, அதை அவர்கள் அறியாமையில் செய்தார்கள். எனவே, இயேசு கிறிஸ்து அவர்களுக்காக ஜெபித்தார். இங்கே ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் இயேசு தம்மை சிலுவையில் அறைந்தவர்களுடைய மன்னிப்புக்காக விண்ணப்பம் பண்ணுகிறார். ஆனால், அவர்களோ இயேசுவினுடைய வஸ்திரங்களைப் பங்குபோடுவதில் குறியாக இருந்தார்கள். இங்கே இயேசுவுக்கும் அவர்களுக்குமுள்ள வித்தியாசத்தைப் பாருங்கள். அவரோ அவர்களுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தார்; அவர்களோ சீட்டு போட்டுக் கொண்டிருந்தார்கள்.

இதைக்குறித்து நாமும் வெட்கப்படவேண்டும். ஏனென்றால், நாமும் அவர் களைப்போல் தான் இருக்கிறோம்! உண்மையான மதிப்பை உடைய காரியங் களைக் காணும்படி உண்டாக்கப்பட்டிருக்கிற நாம் மதிப்பற்ற காரியங்களின் மீது நம் கண்களை பதித்த வாழ்க்கையை பெரும்பாலான நேரங்களில் நாம் வாழு கிறோம். அதேபோல் தேவனுடைய நித்திய ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ளும்படி உண்டாக்கப்பட்டிருக்கிற நாம் இவ்வுலகில் நிரந்தரமில்லாத காரியங்களின் பின்னே செல்கிறோம். அவரைப் போலிருக்கும்படி தேவனால் உண்டாக்கப்பட்டிருக்கும் நாம் தரம் தாழ்த்தி முக்கியமற்ற காரியங்களுக்காக

உளையான சேற்றில் சிக்கித் தவிக்கிறோம். நாம் அற்பமான காரியங்களின் மீது சிந்தை வைத்து தேவன் நம்மைச் சுற்றிலும் என்ன செய்து கொண்டிருக்கிறாரோ அவைகளைக் காணத் தவறி விடுகிறோம்.

இந்த போர்ச்சேவகர்களெல்லாம் இப்பூமியில் வாழ்ந்த மிகப்பெரிய மனிதனிடமிருந்து ஒரு சில அடி தூரத்தில்தான் இருந்தார்கள். ஆனால், அவர்களுடைய சிந்தையெல்லாம் அவர் அணிந்திருந்த வஸ்திரங்கள் மீது தான் இருந்தது. உலகம் இரட்சிக்கப்பட்ட அவ்வேளையில் அவர்கள் சீட்டு போட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இயேசுவை காணவேண்டிய அளவுக்கு காணவில்லை. நாம் அவரை நன்றாக அறிந்திருந்தாலும் கூட போர்ச் சேவகர்கள் செய்த அதே தவறை செய்வதற்கு வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. பரபரப்பான வாழ்க்கைமுறை, கவனக்குறைவு, தடங்கல்கள், கலாச்சார ஈடுபாடுகள் போன்றவைகள் கிறிஸ்துவின் மீதான நம் சிந்தையை சிதைத்து விடுகின்றன.

நாமெல்லாரும் செய்யும் மாபெரும் தவறு, எது முக்கியமானது என்பதைத் தவற விடுவதுதான். ✝

---

## சக கிறிஸ்தவர்களுக்கான கிறிஸ்தவப் பொறுப்புகள்

☑ அன்புகூர வேண்டும் (I பேதுரு 1 : 2)

☑ பக்திவிருத்தியை உண்டாக்கவேண்டும் (எபேசியர் 4 : 16)

☑ போதித்துப் புத்தி சொல்ல வேண்டும் (கொலோ 3 : 16)


☑ ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்க வேண்டும் (கலாத் 6 : 8)

☑ தேவனுடைய வார்த்தைகளினாலே தேற்றவேண்டும் (I தெச 4 : 18)

☑ மற்றவர்களை மனதார மன்னிக்கவேண்டும் ( எபேசியா 4 : 32 ; மத்தேயு 6 : 14 , 15)

☑ இணைந்து ஒரே ஆவியிலே உறுதியாய் நிற்கவேண்டும் (பிலிப் 1 : 27)

# தேவத்துவம்
# The God Head
The Jean Gnifes Barker



கீழ்க்காணும் வசனப் பகுதிகள் தேவத்துவம் மூன்று ஆனந்தத்துவகளை உள்ளடக்கியது என்பதைக் காட்டுகின்றன.

யோவான் 1 : 1 - 2 வசனங்களில், வார்த்தைக்கும் (இயேசுவுக்கும் ) தேவனுக்கு மிடையே உள்ள உறவைப் பற்றி விவரிக்கப்பட்டிருக்கிறது.

யோவான் 1 : 1 - 2, ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். இந்த வசனத்தில் உடன் என்று பயன்படுத்தப்பட்டிருப்பது வார்த்தை இயேசு கிறிஸ்து தேவனோடு இருந்ததை குறிக்கிறபடியால், தேவனும், வார்த்தையும் தனித்தனி என்பதை நமக்கு அடையாளப்படுத்துகிறது.

சிருஷ்டிப்பு விவரிப்பில் பெயர்ச்சொல் பன்மையில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இது சிருஷ்டிப்பில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் ஈடுபடுத்தப் பட்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது.

ஆதியாகமம் 1 : 1, ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். இங்கே தேவன் என்பதற்கான எபிரெய பதம் பன்மை பெயர்ச்சொல்லாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது ஒன்றுக்கும் மேற்பட்டவர்களைக் குறிக்கிறது.

கீழ்க்காணும் வசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிற பன்மை பெயர்ச்சொல் தேவத்துவத்தில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது.

ஆதியாகமம் 1 : 26 ல் நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக என்று தேவன் சொன்னார்.

ஆதியாகமம் 3 : 22 ல் இதோ, மனுஷன் நம்மில் ஒருவரைப்போல் ஆனான் என்று தேவன் சொன்னார்.

ஆதியாகமம் 11 : 7 ல் நாம் இறங்கிப்போய் என்று தேவன் சொன்னார்.

ஏசாயா 6 : 8 ல் யார் நமது காரியமாய்ப்போவான் என்று தேவனாகிய கர்த்தர் சொன்னார்.

இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தின்போது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் மூவரும் தனித்தனியாக வெளிப்படுத்தப் பட்டிருக்கிறார்கள்.

மத்தேயு 3 : 16, 17 வசனங்களில் இயேசு ஞானஸ்நானம் பெற்று ஜலத்திலிருந்து கறையேறினவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது என்று நாம் வாசிக்கிறோம்.

இங்கே ஒரே நேரத்தில் தேவத்துவம் தனித்தனியாக வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது.

★ இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றார்.

★ பரிசுத்த ஆவியானவர் புறாவைப்போல் இறங்கினார்.

★ பிதா வானத்திலிருந்து பேசினார்.

பிரதானகட்டளையில் பிதா, குமாரன் பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

மத்தேயு 28 : 19 ல் இயேசு கிறிஸ்து ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து என்று சொன்னார்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மோசேயின் பிரமாணத்தை தம்முடைய போதனைகள் உண்மையென்று நிரூபிப்பதற்கு சாட்சியாகப் பயன்படுத்

தினார். அதில் அவர் இரண்டு சாட்சிகள் தம்முடைய போதனைகளுக்கு இருப்பதாக அவர் குறிப்பிடுகிறார். உபாகமம் 19 : 15 ல் மோசேயின் பிரமாணம் ஒருவன் எந்த அக்கிரமத்தையாவது எந்தப் பாவத்தையாவது செய்தான் என்று சொல்லப்பட்டால், ஒரே சாட்சியினால் நியாயந்தீர்க்கக்கூடாது. இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே காரியம் நிலைவரப்படவேண்டும் என்று சொல்கிறது.

யோவான் 8 : 17, 18 வசனங்களில் இயேசு கிறிஸ்து இரண்டு பேருடைய சாட்சி உண்மையென்று உங்கள் நியாயப்பிரமாணத்திலும் எழுதியிருக்கிறதே. நான் என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவனாயிருக்கிறேன் என்றார். இயேசு கிறிஸ்துவும் பிதாவாகிய தேவனும் ஒன்றாக இருந்தால் இயேசுவின் விவாதம் இங்கே அர்த்தமற்ற ஒன்றாக இருந்திருக்கும்.

யோவான் பதினேழாம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து விசுவாசிகளின் ஒற்றுமைக்காக ஜெபித்தபோது போல என்று அவர் பயன்படுத்திய வார்த்தைகள் அவருக்கும் பிதாவுக்கும் இடையே காணப்பட்ட உறவை அடையாளப் படுத்துகிறது. அதாவது, அது இருவருக்குமிடையே காணப்படும் உறவைத்தான் நிச்சயமாகக் குறிக்கிறது.

யோவான் 17 : 20 - 22 வசனங்களில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல் இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும், வேண்டிக்கொள் கிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும் பிதாவே, நீர் என்னை அனுப் பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்கிறேன் என்று ஜெபித்திருக்கிறார்.

★ நாமெல்லாரும் தனித்தனி நபர்களாயிருக்கிறோம் என்பதை அறிந்திருக்கிறோம்.

★ இயேசு கிறிஸ்துவும், பிதாவும் ஒன்றாயிருப்பது போல நாமெல்லாரும் ஒன்றாயிருக்க வேண்டும் என்று விரும்புகிறார். அதன் பொருள் நாம் எண்ணத்திலும், நோக்கத்திலும் ஒன்றாயிருக்க வேண்டும் என்பது தான்.

★ ஆகவே, இயேசுவுக்கும் பிதாவுக்கும் இடையிலான ஒருமைத் தன்மை எண்ணத்திலும், நோக்கத்திலும் இருக்க வேண்டுமென்பதுதான் அதன் பொருளாயிருக்கிறது.

I தீமோத்தேயு 2 : 5 தேவனும், கிறிஸ்துவும் தனித்தனியானவர்கள் என்பதைக் காட்டுகின்றன.

I தீமோத்தேயு 2 : 6 ல் தீமோத்தேயு, தேவன் ஒருவரே. தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே என்று சொல்கிறார். பொதுவாக மத்தியஸ்தர் என்பவர் இரண்டு நபர்களுக்கு இடையில் இருந்து காரியங்களை ஆற்றுபவர். ஆகவே, இயேசு கிறிஸ்து தேவ னுக்கும், மனிதனுக்கும் இடையே மத்தியஸ்தராக இருக்க வேண்டுமென்றால் பிதாவும், இயேசுவும் ஒரே நபராக இருக்க முடியாது. தனித்தனி நபர் களாகத்தான் இருக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனிடம் வேறொரு தேற்றரவாளனுக்காக ஜெபித்த போது மூன்று நபர்கள் அதில் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். யோவான். 14 : 16, 17 வசனங்களில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அப்போஸ் தலர்களிடம் பேசிக்கொண்டிருக்கும்போது, நான் பிதாவை வேண்டிக் கொள்ளுகிறேன். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் என்று சொன்னார்.

➡ இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனிடம் ஜெபித்தார் என்பது இருவரும் தனித்தனி என்பதைக் காட்டுகிறது.

➡ இங்கே இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனிடம் வேறொரு தேற்றர வாளனுக்காக ஜெபித்திருப்பதை நம்மால் காணமுடிகிறது. எனவே, இயேசு கிறிஸ்துவின் ஜெபத்தில் மூன்று வெவ்வேறு நபர்களை நாம் காண்கிறோம்.

- குமாரனாகிய இயேசு கிறிஸ்து
- பிதாவாகிய தேவன்
- தேற்றவாளனாகிய பரிசுத்த ஆவியானவர்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்.

✞

# வேதாகமத்தை நம்புவதற்கான காரணங்கள்

## *Reasons To Trust The Bible*

Gerry C. Hampton

**வே**தாகமம் தேவ ஆவியினால் ஏவப்பட்டதென்று தன்னைப் பற்றி சொல்லிக்கொள்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது **வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவயினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும், இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது.** (II தீமோத் 3 : 16, 17). பவுல் **தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது** என்பதற்கு " **Theopnenustos** " என்னும் கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். " **Theo** " என்றால் தேவன் என்றும் "**Pnenustos** " என்றால் தேவன் மூச்சு விட்டார் என்றும் பொருள்படும். இங்கே கருத்து என்னவென்றால் நாம் பேசுவதற்கு குரல் **நாண்கள்** மூலமாக மூச்சை வெளியே விடுவது போல் தேவன் பேசினார் என்பதாயிருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பேதுரு தேவ அவியினால் ஏவப்படுவது பற்றி இவ் விதமாக எழுதினார். **தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித் தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்** (IIபேதுரு 1 : 21) புதிய ஏற்பாட்டு எழுத் தாளர்களைப் போலவே பல பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் தங்களை தேவ ஆவியினால் ஏவப்பட்டவர்களாக சொல்லிக் கொண்டார்கள். ( ஏசாயா 1 : 1,2, 10, 24 ; எரேமியா 1 : 1, 2 ; 2: 1 ; II தெசலோ 2 : 13; II பேதுரு 3 : 2) இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டு வசனங்களை தேவ ஆவியினால் ஏவப்பட்ட வைகள் என்று கருதி அவைகளை அதிகாரத்தோடு பயன்படுத்தினார். (மத். 4 : 4, 7, 10) பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுவதினால் தேவ னுடைய சித்தத்தை நிறைவேற்றுவதே கிறிஸ்து இப்பூமிக்கு வந்ததற்கான ஒட்டுமொத்த நோக்கமாயிருக்கிறது. (மத்தேயு 5 : 7 – 18 ; யோவான் 15 : 25) புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்களை தேவ ஆவியினால் ஏவப் பட்டவர்களாகத்தான் கருதினார்கள். (அப். 1 : 15, 16 ; 4 : 25 ; கலா. 3 : 16 – 19)

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் மற்ற புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தேவ ஆவி யினால் ஏவப்பட்டு எழுதியதாகச் சொல்கிறார்கள். இயேசு கிறிஸ்து, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினவரால் வழிநடத்தப்படுவார்கள் என்று சொன்னார். (யோவான் 14 : 25, 26 ; 16 : 12, 13) (எபிரெயர் 2 : 1 - 4). இவை எல்லாவற்றிலும் தெளிவானதும், கவனிக்கத்தக்கதும் எதுவென்றால், பேதுரு பவுலின் எழுத்து களைப் பற்றி சொன்ன காரியங்கள்தான். **மேலும் நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள் நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்; எல்லா நிருபங்களிலும் இவைகளைக் குறித்துப் பேசியிருக்கிறான்; அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும்** மற்ற **வேதவாக்கியங் களைப்** புரட்டுகிறது **போலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும்** புரட்டுகிறார்கள் என்று ( II பேதுரு 3 : 15, 16)

இருந்தபோதிலும், வேதாகமம் தன்னைப் பற்றி சொல்லிகொள்ளுகிற காரியங்களுக்கெல்லாம் விஞ்ஞானப்பூர்வமான சாட்சியங்கள் இல்லையென்றால் உலகத்தின் மக்களால் அர்த்தமற்றதாக கருதப்படும். உண்மையில் சொல்லப் போனால், வேதாகமம் சொல்லிக்கொள்கிற காரியங்கள் அவைகளின் உண்மை தன்மையை நாம் சோதிக்க நம்மை உந்துகிறது. வேதாகமம் தேவனிடத் திலிருந்து வந்த புத்தகம் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். ஏனென்றால், அதில் இடம்பெற்றுள்ள விஞ்ஞானப் பூர்வமான உண்மைகள் மனிதன் அவை களை அடையாளம் கண்டு கொள்வதற்கு முன்பாகவே அல்லது அவைகளை அறிந்து கொள்வதற்கு முன்பாகவே வேதாகமத்தில் அவைகள் தேவனால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆதியாகமம். 1 : 11, 12, 21, 24, 25 வசனங்களில் தங்கள் தங்கள் ஜாதியின்படியே என்னும் சொற்றொடரைக் காண்கிறோம். இது புல்களையும், பூண்டுகளையும், மச்சங்களையும், பறவைகளையும், நாட்டு மிருகங்களையும் குறிக்கிறது என்றும் அவைகள் தங்கள் தங்கள் ஜாதியின் படியே கனிகளைக் கொடுக்கிறது, சந்ததியைப் பெருக்குகிறது என்று பொருள்படுகிறது. இந்த விஞ்ஞானப்பூர்வமான உண்மைகளெல்லாம் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு தான் மனிதர்களால் அறியப்பட்டது. அதற்கு முன்பு மனிதர்கள் உயிரற்ற பொருள்களிடமிருந்து ஜீவராசிகள் உருவாகின என்று தவறாக நினைத்துக் கொண்டார்கள்.

சில வருடங்களுக்கு முன்பு மருத்துவர்கள் ஓர் ஆண்குழந்தை பிறந்து எட்டாவது நாளில் அக்குழந்தையின் இரத்தத்தில் ஏதோ ஒரு விசேஷித்த பொருள் இருப்பதாகவும் அது காயங்களை குணப்படுத்தும் தன்மை பெற்றி

ருப்பதாகவும் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் மோசே பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே தேவ ஆவியினால் ஏவப்பட்டு எட்டாம் நாளிலே ஆண் பிள்ளையினுடைய நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம் பண்ணப்படக்கடவது என்று சொல்லியிருந்தார் ( லேவியராகமம் 12 : 3 ). தொற்றுவியாதி உடையவர்களைத் தனியாக வைக்க வேண்டுமென்று நவீன மருத்துவம் நினைப்பதற்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே லேவியராகமம் 13 : 45 - ல் தேவனுடைய வசனம் இஸ்ரவேல் புத்திரர் குஷ்டரோகிகளை பாளையத்துக்கு புறம்பே குடியிருக்கச் செய்ய வேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறது. **அந்த வியாதி உண்டாயிருக்கிற குஷ்டரோகி வஸ்திரம் கிழிந்தவனாயும், தன் தலையை மூடாதவனாயும் இருந்து அவன் தாடியை மூடிக்கொண்டு, தீட்டு, தீட்டு என்று சத்தமிட வேண்டும்.** அமெரிக்கா ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டனுடைய நாட்களில் மருத்துவர்கள் ஒரு நோயாளியின் சரீரத்திலிருந்து இரத்தத்தை அகற்றிவிடுவதன் மூலம் சரீரத்திலிருந்து எல்லாவித அசுத்தங்களையும் நீக்கிவிடலாம் என்று நினைத்தார்கள். இதன்மூலம் மருத்துவர்கள் மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது என்பதை உணர்ந்திருக்கிறார்கள். இதைத்தான் மோசே பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே தேவ ஆவியினால் ஏவப்பட்டு சொன்னார். (ஆதி. 9 : 4 ; லேவியராகமம் 17 : 11, 14)

**Thompson** மற்றும் **Jackson** போன்ற வேத வல்லுநர்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் பாயும் மிசிசிபி நதி விநாடிக்கு லட்சக்கணக்கான லிட்டர் தண்ணீர் களை மெக்சிகோ வளைகுடாவுக்குள் கொண்டு செல்கிறது. எனவே, ஒருவர் இவ்வளவு தண்ணீர் பாய்ந்தும் ஏன் நிலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட வில்லை? என்று கேட்கக் கூடும். இதற்கான பதில் தேவனால் சாலமோன் ஞானி மூலமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. **எல்லா நதிகளும் சமுத்திரத்திலே ஓடி விழுந்தும் சமுத்திரம் நிரம்பாது. தாங்கள் உற்பத்தியான இடத்திற்கே நதிகளும் மறுபடியும் திரும்பும்** ( பிரசங்கி 1 : 7). பிரசங்கி 11 : 3ல் மேலும் ஞானி **மேகங்கள் நிறைந்திருந்தால் மழையை பூமியின்மேல் பொழியும்** என்று சொன்னார். ஆமோஸ் தீர்க்கதரிசி தேவனைப் பற்றி விவரிக்கும்போது சாலமோன் ஞானியின் கருத்தை ஒத்துக்கொள்கிறார். **அவர் சமுத்திரத்தின் தண்ணீர்களை வரவழைத்து, அவைகளைப் பூமியினுடைய விசாலத்தின் மேல் ஊற்றுகிறவர்; கர்த்தர் என்பது அவருடைய நாமம்** (ஆமோஸ் 9 : 6). வேதாகமத்தில் நிகழ்த்தப் பட்டிருக்கிற அற்புதங்கள் எல்லாம் அதை நிகழ்த்தியவர்கள் தேவனிடத்திலிருந்து வந்தவர்கள் என்பதை நிரூபிப்பதற்காக நிகழ்த்தப்பட்டன. இஸ்ரவேலர்களுக்கு முன்பாக மோசே தேவனிடத்திலிருந்து வந்தவர் என்பதை நிரூபிப்பதற்காக

தேவன் மோசேக்கு அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமையைக் கொடுத்தார். (யாத்திரகமம் 4 : 1 – 5) எகிப்தின் பத்து வாதைகளைக் கொண்டு நடத்திய அற்புத அயையாளங்கள் ஒட்டுமொத்த உலகத்திற்கும் யெகோவா ஒருவரே தேவன் என்பதை நிரூபிப்பதற்காகத்தான் செய்யப்பட்டன. யாத்திராகமம் (7 : 5, 17 ; 8 : 10, 22 : 9 ; 14, 29 ; 11 : 7 ; 13 : 3 ; 14 : 14). கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று பலமாய் ரூபிக்க அவர் மரித்தோரிலிருந்து, உயிரோடு தேவனால் எழுப்பப்பட்டார் (ரோமர் 1 : 4) அப்போஸ்தலர்கள் பேசின தேவனுடைய வார்த்தைகள் அவர்கள் செய்த அற்புத அடையாளங்களினால் உறுதி செய்யப்பட்டது (மாற்கு 16 : 14 – 20 ; எபிரெயர் 2 : 3, 4).

வேதாகமம் பூகோள ரீதியாக மிகத்துல்லியமாக இடங்களைப் பதிவு செய்திருக்கிறது. வேதாகமம் ஒரு தனி மனிதனோ அல்லது ஒரு குழுவோ மேலே சென்றார்கள் என்று சொன்னால், அவர்கள் தாழ்வான பகுதியிலிருந்து மேடான பகுதிக்கு பயணிக்கிறார்கள் என்று அதை வாசிப்பவர் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். உதாரணமாக, நல்ல சமாரியனுடைய உவமையில், இயேசு கிறிஸ்து, **ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான் ; அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்து கொண்டு அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப்போனார்கள்** ( லூக்கா 10 : 30 ) என்று சொன்னார். ஓர் இடத்தைப் பற்றி வேதாகமம் கொடுக்கும் வரைபடம் அலாதியானது. எருசலேம் ஒரு மலைப்பிரதேசமாகும். ஒலிவ மலையே கடல் மட்டத்திலிருந்து 2680 அடி உயரத்தில் உள்ளது. ஆனால், எரிகோ சவக்கடலின் முகத்துவாரத்தின் அருகில் உள்ளது. உண்மையாகச் சொன்னால் எரிகோ கடல் மட்டத்திலிருந்து தோராயமாக 500 அடி தாழ்வாக உள்ளது. எனவே, ஒருவர் எருசலேமிலிருந்து எரிகோவுக்கு கீழே இறங்கித்தான் வர வேண்டும்.

இன்னும் வேதாகமத்தின் வரலாற்றுப் பூர்வமான துல்லியம்; நாற்பது ஆசிரியர்களால் சுமார் 1600 ஆண்டுகளாக பல்வேறுபட்ட மொழிகளில் எழுதப்பட்ட 66 புத்தகங்களின் ஒருங்கமைவு; வேதாகமச் செய்தியின் மகத்துவம் போன்றவைகளைக்கூட ஆதாரமாக எடுத்துக் கொள்ளலாம். இருந்தபோதிலும் வேத வாக்கியங்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டது என்பதற்கு மறுக்க முடியாத ஆதாரங்கள் போதுமானதாக இருக்கின்றன. ✝

## பொறுப்பு

நமக்கு நடக்கும் எல்லாவற்றுக்கும் நாம் ஒவ்வொருவரும் பொறுப்பல்ல. ஆனால், சம்பவங்கள் நமக்கு எதிராக நடக்கும்போது நாம் எப்படி நடந்து கொள்ளுகிறோம் என்பதற்கு நாம் தான் பொறுப்பு.

# உம்முடைய வசனமே சத்தியம்

# Thy Word Is Truth

*Hugo MC Cord*

**யோ**வான் 14 : 6ல் இயேசு கிறிஸ்து தம்மைப் பற்றி சொல்லும்போது சத்தியம் என்று சொல்கிறார். ஆனால், யோவான் 17 : 17 ல் அன்பின் மொத்த உருவமான இயேசு கிறிஸ்து உம்முடைய வசனமே சத்தியம் என்று சொல்கிறார். பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் சத்திய வசனத்தால் நிறைந்திருக்கின்றன. (சங். 119 : 43 ; II கொரி. 6 : 7 ; எபே. 1 : 13 ; கொலோ 1 : 5 ; II தீமோ. 2 : 15 ; யாக். 1 : 18) தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இரு புறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையையும், ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும் இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது ( எபி. 4 : 12 ). தேவனுடைய வார்த்தைகள் கீழ்காணும் காரியங்களை செய்ய வல்லமையுள்ளது.

1. **நம் இருதயங்களில் விசுவாசத்தை உண்டாக்குகிறது :** " ஆனால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் " ( ரோமர் 10 : 17 ).

2. **நம்மை பரிசுத்தமாக்குகிறது :** " உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும் உம்முடைய வசனமே சத்தியம் " (யோ. 17 : 17).

3. **நம் ஆத்துமாக்களை உயிர்ப்பிக்கிறது :** " கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது ; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது " (சங். 19 :7).

4. **நம் ஆத்துமாக்களை இரட்சிக்கிறது :** " உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுங்கள் " (யாக்கோபு 1 : 21).

5. **மறுபிறப்புக்கு காரணமாகிறது ;** " அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தி னாலே ஜெநிப்பித்தார் " (யாக்கோபு 1:18).

6. **புதிதாய்ப் பிறந்தவர்கள் வளரக் காரணமாகிறது.** " நீங்கள் வளரும் படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல திருவசனமாகிய களங்க மில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள் " (I பேதுரு 2:2).

7. **நமக்குள் நிலைத்திருக்கிறது :** " நீங்கள் பலவான்களாயிருக்கிற தினாலும், தேவவசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும் உங்களுக்கு எழுதியிருக்கிறேன் " (I யோவான் 2:14).

8. **நமக்குள் கிரியை செய்கிறது :** " அது மெய்யாகவே தேவ வசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது " (I தெச. 2:13)

9. **நம்மை வழி நடத்துகிறது :** " உமது வெளிச்சத்தையும் உமது சத்தி யத்தையும் அனுப்பியருளும் ; அவைகள் என்னை நடத்தி " (சங். 43:3).

10. **நம்மை பாவஞ்செய்யாதபடிக்குத் தடுக்கிறது :** " நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன் " (சங்கீதம் 119:11).

11. **நம்மை சுத்தமாக்குகிறது :** " வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிற தினால்தானே " (சங்கீதம் 119:9).

12. **நம்மை ஞானியாக்குகிறது :** " கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது " சங்கீதம் (19:7).

13. **நம்மை உணர்வடையச் செய்கிறது :** " உமது கட்டளைகளால் உணர்வ டைந்தேன் " (சங்கீதம் 119:105).

14. **நம்மை ஆறுதல்படுத்துகிறது :** " அதுவே, என் சிறுமையில் எனக்கு ஆறுதல் " (119:50).

15. **நம்மைப் போஷிக்கிறது :** " மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவ

னுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே " (மத்தேயு 4 : 4).

16. **நமக்கு பயத்தை ஏற்படுத்துகிறது :** " உமக்குப் பயப்படுகிறதற்கு உமது வாக்கை உமது அடியேனுக்கு உறுதிப்படுத்தும் " (சங்கீதம் 119 : 38).

17. **நமக்கு ஆலோசனை கொடுக்கிறது :** " உம்முடைய சாட்சிகள் எனக்கு இன்பமும் என் ஆலோசனைக்காரருமாயிருக்கிறது " (சங்.119 : 24).

18. **நம்மை எச்சரிக்கிறது :** " அன்றியும் அவைகளில் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன் " (சங்கீதம் 19 : 11).

19. **நம்மை எழுதப்பட்ட வார்த்தைகளுக்கு கட்டுப்படுத்துகிறது :** " சகோதரனே எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டாமென்று நீங்கள் எங்களாலே கற்றுக்கொள்ளவும், ஒருவனும் ஒருவனிமித்தம் மற்றொருவனுக்கு விரோதமாய் இறுமாப்படையாதிருக்கவும் திருஷ்டாந்தமாக வைத்து இவைகளை எழுதினேன் " (I கொரிந்தியர் 4 : 6).

20. **நமக்கு அறிவைத் தருகிறது :** " உம்முடைய சாட்சிகள் என் தியானமாயிருக்கிறபடியால் எனக்கும் போதித்தவர்களெல்லாரிலும் அறிவுள்ளவனாயிருக்கிறேன் " (சங்கீதம் 119 : 99).

21. **நம் துக்கத்தில் உதவுகிறது :** " உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால் என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன் " (சங்கீதம் 119 : 92).

22. **நம் தேவைகளைச் சந்திக்கிறது :** " தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும், நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி " (II பேதுரு 1 : 3).

23. **நம்மை முற்றிலும் தகுதிப்படுத்துகிறது :** " வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும் கடிந்து கொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது " ( II தீமோத்தேயு 3 : 16, 17).

24. **நமக்கு சமாதானத்தைத் தருகிறது :** " உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு " (சங்கீதம் 119 : 165).

25. **நம் இருதயங்களை சந்தோஷிப்பிக்கிறது :** " கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும் இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது " (சங்கீதம் 19 : 8).

26. **நம்மை மரணவேளையிலே தேற்றுகிறது :** " ஆகையால் இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள் " (I தெச 4 : 18).

27. **நமக்கு நம்பிக்கையைத் தருகிறது :** " நீர் என்னை நம்பப்பண்ணின வசனத்தை உமது அடியேனுக்காக நினைத்தருளும் " (சங்கீதம் 119 : 49).

✝

# ஜக்கிரதையாயிருங்கள்

உங்கள் எண்ணங்களைக் குறித்து **ஜாக்கிரதையாயிருங்கள்**
ஏனென்றால், அவைகள்தான் வார்த்தைகளாகின்றன.

உங்கள் வார்த்தைகளைக் குறித்து **ஜாக்கிரதையாயிருங்கள்**
ஏனென்றால், அவைகள்தான் செயல்களாகின்றன.

உங்கள் செயல்களைக் குறித்து **ஜாக்கிரதையாயிருங்கள்**
ஏனென்றால், அவைகள்தான் பழக்கங்களாகின்றன.


உங்கள் பழக்க வழக்கங்களைக் குறித்து **ஜாக்கிரதையாயிருங்கள்**
ஏனென்றால், அவைகள் தான் குணாதிசயங்களாகின்றன.

உங்கள் குணாதிசயங்களைக் குறித்து **ஜாக்கிரதையாயிருங்கள்**
ஏனென்றால், அவைகள்தான் உங்கள் நித்தியத்தைத் தீர்மானிக்கின்றன.

# சிலுவையை ஒன்றுமில்லாமல் செய்தல்

# Nullifying the cross

*Bobby Dockery*



மனித வரலாற்றின் மையச் சம்பவம் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதுதான். சிலுவையில் தேவன் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்த மனித இனத்தின் நம்பிக்கையற்ற நிலைமையை மாற்ற வரலாற்று செயல்பாட்டில் ஈடுபட்டார். **அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும் போதே குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்** (ரோமர் 5:6).

சிலுவைதான் நமக்கு இரட்சிப்பை சாத்தியமாக்குகிறது (எபே. 1: 7) பாவத்தினால் பிறந்த பகைக்கு அருமருந்தை அளித்து தேவனோடு நம்மை ஒப்புரவாக்கியது. இச்சிலுவைதான். (எபேசியர் 2 : 16). பாவப்படுக்கையில் கிடந்து சந்தேகத்தால் உருக்குலைந்து போன இவ்வுலகத்திற்கு உண்மையான ஆவிக்குரிய சமாதானத்தை சாத்தியமாக்கியதும் சிலுவைதான் (கொலோ 1:20).

அப்போஸ்தலனாகிய பவுல் சிலுவையின் முக்கியத்துவத்தை இந்த வார்த்தைகளில் சுருக்கமாகச் சொல்கிறார். சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது (I கொரி. 1 : 18). ஆனால், அதே நேரத்தில் சிலுவையின் வல்லமையை வியர்த்தமாக்க முடியும் என்றும் பவுல் சொல்கிறார். ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவிஷேசத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார்.

கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப்போகாதபடிக்கு சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார் ( I கொரி. 1 : 17 ). சிலுவையின் ஆச்சரியமான வல்லமை மனிதர்களுடைய உண்மையற்ற தன்மையினால் எப்படி அவமாக்கப்படுகிறது என்று பவுல் சொல்கிறார். இது எந்தெந்த வழிகளில் சாத்தியமாகிறது என்று கவனியுங்கள்.

**1. அதைக் கண்டு கொள்ளாமல் இருப்பதினால்**

சிலுவையை ஒரு போதும் சந்தித்திராதவர்களை சிலுவையால் இரட்சிக்க முடியாது. ரோமர் 10 : 14 ல் பவுல் **அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படு வார்கள்?** என்று கேட்கிறார். சிலுவையைக் குறித்து நாம் மௌனமாயிருக் கும்போது, அதன் இரட்சிக்கும் வல்லமையை நாம் இல்லாமல் செய்கிறோம். சில சபைகள் சிலுவையைப் பற்றிய உபதேசத்தை இழந்துபோன உலகிற்கு அறிவிக்காமல் இருப்பதைத் தெரிந்து கொண்டிருப்பது நம் இரத்தத்தை உறையச் செய்கிறது. அவர்கள் சிலுவையின் வல்லமையை இல்லாமல்போகச் செய்கிறார்கள்.

**2. அதைத் திரித்துவிடுவதினால்**

சிலர் சிலுவையின் போதனைக்கு தவறான விளக்கம் கொடுப்பதினால் அவர்கள் தங்கள் உபதேச முறைமைக்கு தகுந்தாற்போல சிலுவையை வளைத்து உருமாற்ற முயற்சிக்கிறார்கள். உதாரணமாக **வரையறுக்கப்பட்ட பாவநிவர்த்தி** என்னும் தவறான உபதேசம் பலரால் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அந்த உபதேசம் இரட்சிக்கப்படுவதற்கு உலகத் தோற்றத்துக்கு முன்பே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு மட்டுமே சிலுவையின் வல்ல மையை உணரமுடியும் என்று தவறாகப் போதிக்கிறது. ஆனால், வேதாகமம் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்ன மாகி என்றும் ஒவ்வொருவருக்காக, இயேசு கிறிஸ்து மரணத்தை ருசி பார்த்தார் என்றும் சொல்கிறது ( தீத்து 2 : 11 ; எபிரெயர் 2 ; 9 ) திரிக்கப்பட்ட சிலுவையை அறிவிக்கும் தவறான சுவிசேஷம் இரட்சிக்காது. கிறிஸ்துவினிடத்திலும் அவரு டைய உபதேசத்தினிடத்திலும் நம்பிக்கை வைக்கிறவர்கள் சிலுவையின் வல்லமையை இல்லாமல் போகச் செய்கிறார்கள்.

**3. அதை நிராகரிப்பதினால்**

இயேசு கிறிஸ்து ஒவ்வொருவருக்காக மரணத்தை ருசிபார்த்திருந்தாலும் கூட, கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் பலனை எல்லோரும் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். சிலுவைக்கு தங்களை கீழ்ப்படுத்தாததினால் பலர் நித்திய நித்திய மாக இழந்து போவார்கள். ரோமர் 6 : 3 ல் அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்து

**இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?** என்று கேட்கிறார். நாம் ஞானஸ்நானம் பெறும்போது கிறிஸ்துவின் மரணத்தில் பங்குபெற்று கிறிஸ்து எந்த ஜனங்களுக்காக மரித்தாரோ அவர்களில் ஒருவராகி விடுகிறோம்! சிலுவையின் உபதேசத்தை நாம் மறுக்கும்போது கிறிஸ்து நமக்காக மரிக்காமல் இருந்திருந்தால் நாம் எந்த இடத்தில் இருப் போமோ அந்த இடத்தில் நம்மை வைத்துக்கொள்கிறோம். சுவிசேஷத்தை நாம் நிராகரிக்கும்போது அது நம் ஜீவியங்களில் சிலுவையின் வல்லமையை இல்லாமல் போகச் செய்து விடுகிறது.

சிவவையின் வல்லமை மறுக்க முடியாதது, ஆனால், அதன் தாக்கத்தை இல்லாமல் போகச் செய்ய முடியும். சிலுவையால் நம் பாவங்களை ரத்து செய்ய முடியும். அல்லது நம் பாவங்களால் சிலுவையை ரத்து செய்ய முடியும். இதில் உங்களுக்கானது எது?

✝

---

## தேவனுக்கு மாத்திரமே

- ☑ **தேவனுக்கு மாத்திரமே** கடந்த காலம் பற்றி முழுமையாகத் தெரியும்
- ☑ **தேவனுக்கு மாத்திரமே** நிகழ்காலத்தைப்பற்றி முழுமையாகத் தெரியும்
- ☑ **தேவனுக்கு மாத்திரமே** எதிர்காலம் பற்றி முழுமையாகத் தெரியும்
- ☑ **தேவனுக்கு மாத்திரமே** குறிப்பிட்ட சூழ்நிலைகளில் என்ன நடந்திருக்கும் என்பது நிச்சயமாகத் தெரியும்.
- ☑ **தேவனுக்கு மாத்திரமே** எல்லையில்லா ஞானம் உண்டு.

# மரணம் என்பது...
# Death is...

Kevin L. moore

**மரணம் நிச்சயமானது.**

இத்தற்காலிகமான உலகில் நம் சரீர வாழ்க்கை நிரந்தரமாக இருக்கும்படியாக வடிவமைக்கப்படவில்லை. ஆகவே, இவ்வுலகை விட்டுப் பிரிந்து செல்வது ஒவ்வொருவருக்கும் தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது (II கொரிந்தியர் 5 : 1 - 10). உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்கள்... ( பிரசங்கி 9 : 5 ).

**மரணம் நிச்சயமற்றது.**

அது எப்போது வருமென்று நமக்குத் தெரியாது. பலர் தன்னுடைய செழிப்பினால் மகிழ்ச்சி கொண்டாட்டத்தில் திகைத்துப் போயிருந்த அந்த ஐசுவரியவானுடைய ஜீவன் எதிர்பாராத விதமாக எடுக்கப்பட்டது போல் தங்கள் ஜீவன் எடுக்கப்படுவதைக் கண்டு ஆச்சரியத்தால் திக்குமுக்காடிப் போவார்கள். ( லூக். 12 : 16 - 21) யாக்கோபு ஆசிரியர் நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது ? கொஞ்சக் காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே என்று எச்சரிக்கிறார் (யாக்.4:14).

**மரணம் பட்சபாதம் பார்ப்பதில்லை.**

வாலிபர்களும், வயதானவர்களும், ஏழைகளும் ஐசுவரியவான்களும் நீதிமான்களும் துன்மார்க்கரும் எல்லோருமே மரண அழைப்புக்கு கீழ்ப்பட்டுத் தான் இருக்கிறார்கள் ( சங்கீதம் 49 : 10 ). ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின் மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை. மரண நாளின் மேலும் அவனுக்கு அதிகாரமில்லை (பிரசங்கி 8 : 8).

**மரணம் அதைப்பற்றிய அறிவில்லாதவர்களுக்கும் ஆயத்தமில்லாதவர்களுக்கும் அச்சுறுத்தலாயிருக்கிறது.**

அறியாத காரியங்களைக்குறித்த பயம் மனிதனுக்கு இயல்பாக இருக்கிற ஒன்றாக இருந்தாலும் கூட சம்பவிக்கப் போவதை அறிந்து அதற்காக ஆயத்தமில்லாமலிருப்பது கொடுமையானதாகும். நீதிமான்கள்

இப்பொழுது நாம் கர்த்தருடைய கையிலே விழுவோமாக; அவருடைய இரக்கங்கள் மகா பெரியது ( II சாமுவேல் 24 : 14 ) என்று ஜெபிக்க முடியும். ஆனால், நித்தியத்திற்கு ஆயத்தமில்லாதவர்களுக்கு, ஜீவனுள்ள தேவ னுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்கும் (எபிரேயர் 10 : 31).

**மரணம் இவ்வாழ்க்கைக்கு அப்பால் நம்பிக்கை இல்லாதவர்களுக்கு துக்ககரமானது.**

நமக்குப் பிரியமானவர்கள் மரிக்கும்போது, வேதாகமம் காட்டும் வேறுபாடு துக்கிப்பவர்களுக்கும், துக்கிக்காதவர்களுக்கும் இடையில் இல்லை. ஆனால், நம்பிக்கையற்றவர்களுக்கும், நம்பிக்கை உள்ளவர்களுக்கும் இடையில் தான் இருக்கிறது (I தெசலோனிக்கேயர் 4 : 13 ). மேலும், அப்போஸ்தலனாகிய பவுல் இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம் என்று சொல்கிறார் (I கொரிந்தியர் 15 : 19).

**மரணம் தேவனோடு காரியங்களை சரி செய்து கொள்வதற்கு வாய்ப்புகளின் முடிவாயிருக்கிறது.**

ஐசுவரியவான் லாசரு உவமையிலிருந்து நாம் கற்றுக்கொண்ட மிகப் பெரிய பாடம் (லூக்கா 16 : 19 – 31). தேவன் இவ்வாழ்வில்தான் அவரோடு காரியங்களை சரி செய்து கொள்வதற்கு வாய்ப்புகளைக் கொடுக்கிறார். கல்லறைக்கு அப்பால் சூழ்நிலைகளை நம்மால் மாற்றமுடியாது.

**மரணம் வாசலாயிருக்கிறது.**

ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பித்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன் ( ரோமர் 8 : 18 ). நாம் இவ்வாழ்க்கையை விட்டுக் கடந்து அடுத்த வாழ்க்கைக்குள் பிரவேசிக்க மரணவாசல் வழியாய்தான் கடந்து போகவேண்டும் ( I கொரிந்தியர் 15 : 50 ). துரதிஷ்டவசமாக பலர் இப்பாழாய்ப்போன வாழ்க்கையை விட்டுப் பிரியப் பிரியமில்லாமல் இருக்கிறார்கள். ஆனால், தேவன் தமக்கு கீழ்ப்படிபவர்களுக்கு இதை விட மேலான காரியங்களை வைத்திருக்கிறார்.

**மரணம் ஒரு பயணமாயிருக்கிறது.**

நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம். இந்தத் தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோம். நாம் தைரியமாயிருக்கிறோம். நாம் தைரியமாகவேயிருந்து இந்த தேகத்தை விட்டுக்குடி போகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்

(IIகொரி. 5 : 6 - 8). அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்.. தேகத்தை விட்டுப்பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும் என்று முடிக்கிறார் (பிலிப் 1:21-23).

**மரணம் இளைப்பாறுதலாயிருக்கிறது**

பின்பு பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன். அது **கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் என்றும் அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள். அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்** ( வெளிப்படுத்தல் 14 : 13 ). தேவன் இவ்வுலகில் உள்ள எல்லாவற்றையும் உண்டாக்கிவிட்டு ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் என்பது சிருஷ்டிப்பு காரியங்களிலிருந்து அவர் இளைப் பாறினார் என்றுதான் பொருள்படும், ( ஆதியாகமம் 2 : 2 ) பழங்கால யூதர் களுக்கு கட்டளையிடப்பட்ட ஓய்வு நாள் அவர்கள் எகிப்தின் அடிமைத்தனத்தில் பட்ட பாடுகளுக்கு முடிவாயிருந்தது ( உபாகமம் 5 : 15 ). **கானான் தேசத்தில் இஸ்ரவேலின் சுதந்திரம் வனாந்திரப் பாடுகளிலிருந்து இளைப்பாறு தலாயிருந்தது** ( யோசுவா 21 : 43 - 45 ). அதேபோல் நம் பரலோக இளைப் பாறுதல் செயல்பாடற்ற ஒரு நித்தியமாக இருக்காது. ஆனால், இவ்வாழ்க்கையின் வருத்தம் பாடுகள், உபத்திரவம் போன்றவைகளிலிருந்து விடுபடுகிற ஓர் அனுபவமாகத்தான் இருக்கும் (எபிரெயர் 4 : 1 - 11).

**மரணத்திற்காக நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும்.**

மனுஷன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? ஆயுள் காப்பீடு, உயில் மற்றும் அடக்கத் திற்கான ஆயத்தம் போன்றவைகளுக்கு அப்பால் ஒருவர் மரணத்திற்காக எப்படி ஆயத்தமாகிறார்? சுருக்கமாகச் சொன்னால் **அதினிமித்தம் நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களா யிருக்க நாடுகிறோம்** (II கொரிந்தியர் 5 : 9). ✝

---

**சிலுவையால்** நம் பாவங்களை ரத்து செய்ய முடியும்

( அல்லது )

நம் பாவங்களால் **சிலுவையை** ரத்து செய்யமுடியும்

இதில் உங்களுக்கானது எது?

# இருதயத்தை கீழ்ப்படிதலின் ஆதாரமாக்குதல்

# Making The Heart The Source Of Obedience

*Michael L. King*

ஒவ்வொரு உண்மையுள்ள தேவனுடைய பிள்ளையும் பின்பற்றத்தக்க பாத்திரமான வார்த்தைகளைப் பேசும்படியாக ஆவியானவர் அப்போஸ் தலனாகிய பவுலை ஏவினார் ( ரோமர் 6 : 16 - 18 ). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மத். 7 : 13, 14 வசனங்களில் இரண்டு வாசல்கள், இரண்டு வழிகள், இரண்டு விளைவுகளைப் பற்றி விவரிப்பதுபோல் இரண்டு தெரிந்து கொள்ளுதல்களை விவரிக்கிறார். இங்கே பவுல், நாம் தேவனுக்கு மனதாரக் கீழ்ப்படியவில்லையென்றால் அது மதிப்பற்றதாகவும், தேவனால் ஏற்றுக் கொள்ளப்படாததாகவும் இருக்கும் என்னும் உண்மையை வலியுறுத்துகிறார். நமக்குத் தரப்படும் பரிசு கடமைக்காக தரப்படும் பரிசு என்றும் நம்மை ஊக்கப்படுத்தும்படியாக கொடுக்கப்படும் அன்பான வார்த்தைகள் மனதாரக் கொடுக்கப்படவில்லையென்பதை ஒருவர் அறிந்து கொண்டால் அதைப் பெற்றுக்கொள்ள எப்படி விரும்புவார்? அதேபோல் தேவனும் நாம் சரியான நோக்கமில்லாமலும் வார்த்தைக்கும் வாழ்க்கை முறைமைக்கும் சம்பந்தம் இல்லாத நிலையில் அவருக்கு உண்மையற்ற முறையில் கீழ்ப்படி வதை விரும்புவதில்லை.

இருதயத்தில் கீழ்ப்படிதல் விவேகமுள்ள இருதயத்தால் வெளிப்படுத்தப் படுகிறது. இப்பிரச்சனைக்கு தீர்வுகாணும் முக்கியமான வசனப்பகுதிகளைக் கவனியுங்கள். அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான் ( நீதிமொழிகள் 23 : 7 ). நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படிச் சிந்திக்கிறதென்ன? (மாற்கு 2 : 8); மரியாளோ அந்தச் சங்கதிகளை யெல்லாம் தன் இருதயங்களில் வைத்து, சிந்தனை பண்ணினாள் ( லூக்கா 2 : 19 ) நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் (ரோமர் 10 : 10).

நாம் தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடு அன்புகூர வேண்டும் ( மத்தேயு 22 : 37 ) இருதயத்திலிருந்து வரும் கீழ்ப்படிதல் தான்

விசுவாசத்தின் கீழ்ப்படிதலாயிருக்கிறது. இருதயத்திலிருந்து வரும் கீழ்ப்படி தலுக்கு தீர்மானம் அவசியமாகிறது, அதுவும் குறிப்பாக, கீழ்ப்படிதலுள்ள விசு வாசத்தைப் பொறுத்தவரை மனதில் தீர்மானிப்பது மிகவும் அவசியமாகிறது. **அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமா யிருக்கிறார்** ( II கொரிந்தியர் 9 : 7 ). நாம் தேவனுக்குக் கீழ்ப்படிகிற எல்லா விஷயத்திலும் தீர்மானமும், உள்நோக்கமும் அவசியமாகிறது.

தேவனுடைய போதனைக்கு இரட்சிக்கும் விசுவாசம் ஓர் அன்புள்ள பதிலாயிருக்கிறது (ரோமர் 10 : 10). யாக்கோபு ஆசிரியர் இவ்விதமாகச் சொல்லி தன் வாசகர்களை உற்சாகப்படுத்துகிறார் **சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான் ; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கத்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்** ( யாக். 1 : 12 ) தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படிவதின் முக்கியத்துவம் நிலங்களின் உவமையில் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது (மத். 13 : 5 ). அதுபோல் விதைக்கிறவனுடைய உவமையிலும் விதை தேவனுடைய வார்த்தையாயிருக்கிறது. **சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன, நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர் களாயிருக்கிறார்கள்** (லூக்கா 8 : 15). பெந்தேகொஸ்தே நாளில் இரட்சிக்கப்பட்டு புதிய ஏற்பாட்டு சபையில் சேர்க்கப்பட்டவர்களெல்லாருமே வசனத்தைக் கேட்டு **இருதயத்திலே குத்தப்பட்டு அதைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்றார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்.** (அப்போஸ்தலர் 2 : 36 - 41, 47).

ஒருவர் சுவிசேஷத்திற்கு அறிவுப்பூர்வமாகக் கீழ்ப்படிவதைவிட மனப்பூர்வ மாகக் கீழ்ப்படிவதுதான் ஏற்றதாயிருக்கிறது. இருதயத்தினால் உண்டாகும் ஆவிக்குரிய தன்மை அவசியமானதுதான். ஆனால், இதயத்தின் உணர்வுகள் தேவனுடைய ஜனங்கள் இதற்கு முந்தைய நூற்றாண்டுகளில் வாழ்ந்த கிறிஸ் தவர்களைப் போல் பொதுவாக சில காரியங்களைச் செய்யத் தூண்ட விசுவாசிக்க வேண்டும். இரட்சிக்கப்பட வேண்டும். ஏனென்றால் இப்படிப்பட்ட காரியங்களில் தேவனுடைய நிலை மாறாமல் அப்படியேத்தான் இருக்கிறது. தேவன் எப்போதுமே நாம் மேல்நோக்கிப் பார்க்க வேண்டுமென்று எதிர் பார்க்கிறார். இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்

(எபி. 13 : 8). தேவனும் மாறாதவராகவே இருக்கிறார். அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை ( யாக். 1 : 17 ). இது தேவனுடைய பராமரிப்பைப் பற்றியும், அவர் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேறுவது பற்றியும் பேசுகிறது. ஆனால், அவருடைய வசனங்கள் மாறாமல் அப்படியே தான் இருக்கின்றன.

அடுத்த வசனப்பகுதியில், அதாவது யாக்கோபு 1 : 18 ல் யாக்கோபு **அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்தியவசனத்தினாலே ஜெநிப்பித்தார்** என்று சொல்கிறார். இப்பகுதியில் நம் ஆவிக்குரிய திசைகாட்டும் கருவியின் காந்தமாக தேவனுடைய சித்தம் இருக்கிறதென்ற உண்மையை நாம் கண்டறிய முடியும். இதேவிதமான உண்மையை எழுதும்படி பவுல் ஏவப்பட்டார். **முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம், பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்** (ரோமர் 6 : 17, 18).

கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு கீழ்ப்படிதலின் அடிப்படை உபதே சத்தை உறுதியாய்ப் பிடித்துக்கொள்ள வேண்டியதாயிருந்தது. ரோமர் 6 : 17, 18 வசனங்களில் குறிப்பிட்டிருக்கிறபடி அவர்கள் அந்த உபதேச சட்டத்திற்கு கீழ்ப் படிந்ததால் இரட்சிப்பு அவர்களுக்கு சொந்தமாகும் என்று பவுலால் உறுதி செய்யப்பட்டது. மனந்திரும்புதலின் தன்மையும், முக்கியத்துவமும் ஞானஸ் நானத்தின் மூலமாக கிறிஸ்துவுக்குள் வருவதும் ஸ்திரப்படுத்தப்பட்ட உண்மையாயிருக்கிறது (ரோமர் 6 : 15). மனந்திரும்பிய ஒருவர் கிறிஸ்து இயேசு வுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறும்போது அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறார் ( வசனங்கள் 3 – 5 ). மேலும், மனப்பூர்வமாக ஒருவர் கீழ்ப்படியும்போது பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரி லிருந்து எழுப்பப்பட்டது போல, புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்படுகிறார் (வசனம் 4). ஒருவர் மனப்பூர் வமாக உபதேச சட்டத்திற்குக் கீழ்ப்படியும்போது பாவத்திற்கு மரித்து நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத் திருக்கிறார். எனவே, நாம், **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்** (I கொரி 15 : 57 ).

✝

## எங்களை உயிரற்றவர்களாக அறிவிப்பதற்கு முன்னே...

## Before You Pronounce Us Dead...

*Dalton Key*

சில வருடங்களுக்கு முன்பு ஒரு சிறிய நகரத்தைச் சார்ந்த பத்திரிக்கை நிருபர் தன்னுடைய சுருக்கமான கட்டுரைக்காக வழக்கத்திற்கு மாறான சாக்கு போக்கைச் சொன்னார். முதலாவது ஒன்றும் நடக்கவில்லை. இரண்டாவது நடந்தவைகள் எல்லோரும் அறிந்து கொள்ள விரும்பாதவைகளாக நடந்தது என்று விநோதமாகச் சொன்னார்.

சபையில் எப்போதுமே ஒரு சாரார் சபை துடிப்புள்ள ஒன்றாக இல்லை. சபையில் எந்த கிரியைகளும் நடப்பதில்லை என்று துரிதமாகத் தமது விரலை சபையின் மீது காட்டி விடுகிறார்கள். ஆனால், உண்மையில் சபைக்காக பல உண்மை யுள்ள பரிசுத்தவான்கள் யாருக்கும் தெரியாமல் பல காரியங்களைச் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். பொதுவாக, சபையில் கடினமாக உழைப் பவர்கள் தங்கள் நற்கிரியைகளைக் குறித்து விளம்பரப்படுத்தாதவர்கள் தான். அவர்கள் கிறிஸ்துவைப் போன்ற தாழ்மை குணத்தை உடையவர்களாயிருப் பதினால் நடக்கின்ற காரியங்களை எல்லோரும் அறிய வேண்டுமென்று விரும்புவதில்லை.

உள்ளூர்சபை உயிரற்ற செத்த சபையாக இருக்கிறது என்று விமர்சிக்கும் அந்த முறுமுறுப்பாளர்கள் பெரும்பாலும் உண்மையான நிலவரத்தைக் காணத்த வறுகிறார்கள். அவர்கள் சபையில் தேவபக்தியுள்ள ஒரு தம்பதி பல வருடங் களாக ஒரு வயதான சகோதரிக்கு ஆகாரம் கொண்டு செல்வதைக் காணத்தவறி விட்டார்கள். அவர்களுக்கு, மருத்துவமனைகளுக்குச் சென்று நோயாளிகளை சந்திக்கும் நல்ல சபை அங்கத்தினர்களைப் பற்றித் தெரியாது. அந்த விமர்சகருக்கு, நீண்ட மாலை நேரத்தையும், அதிகாலைப் பொழுதையும், தங்கள் அயலகத்தாருக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிப்பதில் செலவழிக்கும் வயதான தம்பதியினரைப் பற்றித் தெரியாது.

இதுமட்டுல்லாமல், வேறு எண்ணற்ற நற்கிரியைகள் நம் கண்களுக்கு அப்பால் நடந்தேறுகின்றன. ஆனால் சபையின் பணிகள் பரபரப்பாக வெளியில்

பேசப்படவேண்டுமென்றும், அவைகள் விளம்பரப்படுத்தப்பட வேண்டுமென்றும் நாம் விரும்புகிறோம்.

சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (மத்தேயு 10:42)

அருமையான கிறிஸ்தவ சகோதர, சகோதரிகளே! தீர்ப்பு நாற்காலியில் உட்காருவதற்கு முன்பாக, உள்ளூர் சபை உயிரற்ற செத்த சபை என்று குற்றஞ் சாட்டுவதற்கு முன்பாக சற்று ஆழமாக உற்றுப் பாருங்கள். உயிரற்ற நிலையில் சபையில் இருப்பது நீங்கள் தான் என்பதைக் கண்டறிவீர்கள்! ✝

---

## இயேசு நம் சிறந்த நண்பர்

- **அவர் எப்போதும் நம்மை நேசிக்கிறார்.**

  " ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக்கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை " (யோவான் 15:13)

- **அவர் ஒருபோதும் நம்மை விட்டு விலகுவதில்லை.**

  " உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவது மில்லை" (எபிரெயர் 13:5)

- **அவர் நமக்குத் தேவையான எல்லாவற்றையும் நமக்கு அறிவிக்கிறார்.**

  " நான் உங்களைச் சிநேகிதர் என்றேன். ஏனெனில், என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன். (யோவான் 15:15)

- **அவர் நம்மிடமிருந்து சிறந்ததை வெளியேகொண்டு வருகிறார்.**

  " என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு " (பிலிப்பியர் 4:13)

# சபையை ஆளுகை செய்பவர்கள்

# CHURCH RULERS

*Robert Rawson*

கர்த்தருடைய சபையின் மூப்பத்துவப் பணியில் ஆளுகை என்னும் ஓர் அம்சம் இடம் பெற்றிருக்கிறது. மூப்பர்களை சபை அங்கத்தினர்கள் கனம் பண்ணவேண்டும் (எபி. 13 : 17). இந்த ஆளுகைத் தன்மை ஒரு மனைவி எப்படி கணவனுக்கு கீழ்ப்படியவேண்டுமோ அப்படிப் புரிந்து கொள்ளப்பட வேண்டும் (எபே. 5 : 25 - 28). பொதுநலனுக்காக இணைந்து பாடுபடுபவர்கள் தங்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைத் தாண்டி தன்னலமற்ற தொண்டு செய்ய அன்பினால் இயக்கப்பட வேண்டும். தேவனுடைய மந்தையை மேய்ப்பது சம்மந்தமாக பேதுருவால் எச்சரிப்பும் விடப்பட்டிருக்கிறது (I பேதுரு 5 : 1 - 4).

நாம் கடுஞ்சொற்களை மற்றவர்கள் மீது வீசி ஆதிக்கம் செலுத்த முடியும் என்பது உண்மையாக இருந்தாலும் ( நீதி. 15 : 1 ), கோபத்தை எழுப்பும் கடுஞ்சொற்களை நாம் பயன்படுத்தக்கூடாது. நம் இருதயத்தில் பொல்லாத நினைவு கொண்டு, ஏழைச் சகோதரனுக்குக் கொடாமல் மறுத்து அவன்மேல் வன்கண் வைக்கக்கூடாது ( உபாகமம் 15 : 9 ). தெய்வீக போதனை நாம் கோபக்காரர்களுடன் இருப்பதை தவிர்க்க வேண்டுமென்று நம்மை எச்சரிக்கிறது ( நீதி. 22 : 24, 25 ). சிலர் எதற்கெடுத்தாலும் யோசனையின்றி துரிதமாக கோபப்படுவதை நாம் பார்க்கிறோம் ( நீதி. 14 : 17 ), இருந்தபோதிலும் சில வேளைகளில் இப்படிப்பட்ட முற்கோபிகள் கூட மூப்பர்களாகி விடுகிறார்கள்.

மேற்சொல்லப்பட்ட வசனங்களெல்லாம் பழைய ஏற்பாட்டில் இருக்கின்றன. ஆனால் அதற்கு இணையான வசனங்கள் புதிய ஏற்பாட்டிலும் இருக்கின்றன. அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து தம்மைத் தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் (எபே. 5: 25 - 27) போன்ற வசனங்கள் அன்பான இரட்சகர் மற்றும் அன்பான மேய்ப்பர்களின் உண்மையான தன்மையைக் காட்டுகிறது. சோர்வு என்பது பல இல்லங்களில், சபைகளில் கொள்ளை நோயாகப் பரவி வருகிறது. யார் இந்த கொள்ளை நோயைப் பரப்பி விடுகிறார்கள்? இது அங்கத்தினர்களிடமிருந்து வந்து சபையின் தலைமைத்துவத்துக்கு எழும்பு

கிறதா அல்லது சபையை உற்சாகப்படுத்த தலைமைத்துவம் தவறியதால் அங்கிருந்து வந்ததா?

பயம் மற்றும் சந்தேகத்தின் பிடியிலிருந்து மந்தையை திருப்பி வழி நடத்துவது சிறந்த தேவ பக்தியுள்ள மூப்பர்களின் பணியாயிருக்கிறது. சபை அங்கத்தினர்கள் எதிர்கொள்ளும் ஆபத்துக்களைக் குறித்த ஒரு தொலை நோக்குத் திட்டம் மூப்பர்களுக்கு இருக்க வேண்டும். அந்த ஆபத்துகளைக் குறித்து வேதபாட வகுப்புகளில் விவாதித்து, அதற்குத் தீர்வு காண வெளியிலிருந்து போதகர்களையும், பிரசங்கியார்களையும் கொண்டு வரலாம். உற்சாக மூட்டும் வார்த்தைகளால் நிரப்பப்பட்ட கட்டுரைகள் அந்நேரத்திற்கேற்ப எழுதப்பட வேண்டும். கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை சகோதர, சகோதரிகளுக்கு நினைப்பூட்ட வேண்டும் (மத்தேயு 28 : 20, ரோமர் 8 : 28). அவர் நம்மோடு சதாகாலங்களிலும் இருப்பதையும் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்றும் தொடர்ந்து நினைப்பூட்டிக் கொண்டே இருக்க வேண்டும். ஆம் பெரும்பாலும் நாம் மூப்பர்கள் கைகளால் செய்யப்படும் நற்கிரியைகளைக் கண்டுதான் அன்புக்கும், நற்கிரியைகளுக்கும் ஏவப்படுகிறோம் (எபிரெயர் 10 : 24). ✝

---

## ஒரு கிறிஸ்தவராக நாம் கீழ்க்காண்பவைகளைப் பெற்றிருக்கிறோம்

- *இரட்சிப்பைப்* **பெற்றிருக்கிறோம்.** *(மாற்கு 16 : 16)*
- *கர்த்தருடைய சபையில் அங்கம் வகிக்கும் தகுதியைப்* **பெற்றிருக்கிறோம்** *(அப்போஸ்தலர் 2 : 47)*
- *பரிசுத்த ஆவியின் வரத்தைப்* **பெற்றிருக்கிறோம்** *(அப். 2: 38)*
- *பாவ மன்னிப்பைப்* **பெற்றிருக்கிறோம்** *(அப் 22 :16)*
- *கிறிஸ்தவ ஐக்கியத்தைப்* **பெற்றிருக்கிறோம்** *(I பேதுரு 2 : 17)*

# ஞானஸ்நானமும் சிலுவைக் கள்ளனும்
# Baptism and the Thief on the Cross

*A.L. Franks*

**ஞா**னஸ்நானம் தேவையில்லை. ஏனென்றால், இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் இல்லாமல் சிலுவையில் தொங்கின கள்வனை இரட்சித்தார்.

**வாக்குவாதம் :**

சிவவையில் தொங்கிக் கொண்டிருந்த இயேசுவுக்கு அடுத்த சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த கள்ளன் அவரை நோக்கி **ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்** (லூக்கா 23 : 43). அப்போது இயேசு கிறிஸ்து அக்கள்ளனிடம் ஞானஸ்தானத்தைப் பற்றி எதுவுமே பேசவில்லை. அவர் அக்கள்வனிடம் **இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்** என்று வெளிப்படையாகச் சொன்னார். இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் அவசியமில்லை என்று வாதாடுபவர்கள் இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் இல்லாமலேயே அந்த சிலுவைக்கள்ளனை இரட்சித்தாரே, எனவே, நாமும் ஞானஸ்நானம் இல்லாமல், இரட்சிக்கப்பட முடியும் என்று வாதிடுகிறார்கள்.



**பதில்:**

ஞானஸ்நானம் இல்லாமல் அத்திருடன் இரட்சிக்கப்பட்டதற்கும், இன்றைய நாட்களில் இழந்துபோனவர்கள் இரட்சிக்கப்படும் விதத்திற்கும் எந்த சம்மந்தமுமில்லை. அத்திருடன் மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தான், மரித்தான். முதல் நூற்றாண்டிலிருந்து இன்று வரை இப்பூமியில் வாழ்பவர்கள்

கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். புதிய ஏற்பாடு (உடன்படிக்கை) பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றால் தான் இரட்சிக்கப்பட முடியுமென்று கட்டளையிடுகிறது. (அப்போஸ்தலர் 2 : 38 ; மாற்கு 16 : 16 ). கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கை அவருடைய மரணத்திற்குப்பிறகு உயிரோடிருப்பவர்களைத்தான் கட்டுப்படுத்தும். ஏனென்றால், எங்கே மரண சாசனமுண்டோ அங்கே அந்தச் சாசனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும்; எப்படியெனில் மரண முண்டான பின்பே மரணசாசனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே (எபிரெயர் 9 : 16, 17).

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் அவர் கொடுத்த புதிய உடன்படிக்கை நடைமுறையில் இல்லை. அவருடைய மரணத் திற்குப் பிறகுதான் அவருடைய புதிய பிரமாணம் நடைமுறைக்கு வந்தது. இங்கே சிலுவையில் தொங்கிய கள்ளன் பழைய ஏற்பாட்டின் காலத் தில்தான் வாழ்ந்தான். எனவே, புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானம் அவனைக் கட்டுப்படுத்த வில்லை. அது மாத்திரமல்ல, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு பாவங் களை மன்னிக்கும் அதிகாரம் இருந்தது. ஆனால், இன்று ஒருவர் பாவங்களி லிருந்து இரட்சிக்கப்படவேண்டுமென்றால் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டின்படி அந்த நபர் இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள தனது உண்மையான விசுவாசத்தை ஞானஸ்நானம் பெறுவதினால் வெளிப்படுத்தினாலொழிய இரட்சிக்கப்பட முடியாது; (அப்போஸ்தலர் 22 : 16 ; I பேதுரு 3 : 21; அப். 2: 38; மாற்கு 16 : 16). ✝

---

* நாம் தேவனைப் பிரியப்படுத்த விரும்பினால், அவரோடு நடக்க விரும்பினால் அவருடைய கட்டளைகளின்படி நடக்க நாட வேண்டும்.

* நாம் தேவனுடைய அளவுகோலுக்கேற்ப வாழ முயற்சிக்கும்போது நம் குணாதிசயம் தன்னைத்தானே காத்துக் கொள்ளும்.

* நாம் மற்றவர்களைப் பிரியப்படுத்த வாழ மாட்டோம். நாம் தேவனைப் பிரியப்படுத்தவே வாழுவோம்.


* நாம் அதை மட்டும் சரியாகச் செய்து விட்டால், மீதி எல்லாமே சரியாகிவிடும்.

# கிறிஸ்தவ ஒழுக்க நெறிகளா அல்லது சத்தியமா?

# Christian Values OR Truth?

*Justin A. Hopkins.*

இன்றைய சமுதாயத்தில் பலர் கிறிஸ்தவ ஒழுக்க நெறிகளை அல்லது யூத கிறிஸ்தவ ஒழுக்க நெறிகளின் முக்கியத்துவம் பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள். இப்பதம் அதாவது கிறிஸ்தவ ஒழுக்க நெறிகள் என்னும் பதம் அரசியல் விவாதங்களின்போது அதிகமாகப் பேசப்பட்டு வேதாகமத்தை ஆதாரமாகக் கொண்ட இந்நெறிகளை சட்டமாக இயற்றவேண்டுமென்று கூட ஒரு சாரார் கூக்குரலிடுவதுண்டு. ஒரு வியாபார அகராதி ஒழுக்க நெறிகளுக்கான விளக்கத்தைக் கொடுக்கும்போது ஒரு தனிப்பட்ட நபரையோ, ஓர் அமைப் பையோ அல்லது ஒரு சமுதாயத்தையோ எல்லாச் சூழ்நிலைகளிலும் ஒழுக்க ரீதியாக வழிநடத்தும் அளவுகோல்தான் ஒழுக்க நெறிகள் என்று விளக்கம் கொடுக்கிறது.



சில ஒழுக்க நெறிகள் தனிப்பட்ட நபரால் பின்பற்றப்படலாம் அல்லது ஒட்டுமொத்த சமுதாயத்தால் அல்லது ஒரு கலாச்சாரத்தால் தழுவப் படலாம். சில ஒழுக்க நெறிகள் மதங்கள் மற்றும் தத்துவ ஞானங்களை அடிப்படையாகக் கொண்டு அமையும். ஒவ்வொரு ஒழுக்கநெறியும் அதைப் பின்பற்று பவர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

**நாம் கிறிஸ்தவ ஒழுக்க நெறிகளை மற்றவர்கள் மீது திணிக்கலாமா?**

நாம் நம் கிறிஸ்தவ ஒழுக்க நெறிகளை ஒழுக்க நெறிகள் என்னும் கண்ணோட்டத்தில் பார்த்தால் இதை மற்றவர்கள் மீது திணிப்பதற்கு நமக்கு என்ன உரிமை இருக்கிறது? அவர்களுடைய ஒழுக்க நெறிகளின்படி அவர்கள் வாழ்ந்து நியாயந்தீர்க்கப்பட வேண்டாமா?

**கிறிஸ்தவமுறை என்பது வெறுமனே ஒழுக்கநெறிகளை மாத்திரம் கொண்டதா?**

கிறிஸ்தவ முறை என்பது நமக்கான தனிப்பட்ட ரீதியான நடத்தை நெறி களை மாத்திரம் உண்டாக்குகிறதா? அல்லது வேதாகமத்தின் போதனைகள் நம்மையும் தாண்டி மற்றவர்களிடத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறதா? சத்தியம் என்னும் போதனைகள் நம்மையும் தாண்டி மற்றவர்களிடத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறதா? சத்தியம் என்னும் விஷயத்தை நாம் கருத்தில் கொள்ளும்போது பிலாத்து கேட்ட கேள்வியை நாமும் கேட்க வேண்டும் **சத்தியமாவது என்ன?** (யோவான் 18 : 38) என்று.

சத்தியம் என்பது எல்லாக் காலத்திலும், எல்லா இடங்களிலும் எல்லா மக்க ளாலும் நம்பத்தகுந்த அளவில் மிகத் துல்லியமானதாக இருக்க வேண்டும். சத்தி யத்திற்கான இந்த அளவுகோலுக்குப் பொருத்தமானது எது என்று ஒருவர் எப்படித் தெரிந்து கொள்ள முடியும்? சத்தியம் என்பது உலகளாவியதா அல்லது வெறு மனே உங்களுக்கும் எனக்குமானதா? உலகளாவிய சத்தியத்திற்கு ஒரே ஆதாரம் அது நித்தியமானவரிடமிருந்து வரவேண்டும். சர்வஞானியும் சர்வ வல்லவரு மானவரிடத்திலிருந்து அது வரவேண்டும். இவைகளை வைத்து நாம் பார்க்கும் போது வேதாகமத்தின் தேவனிடத்திருந்திருந்து மாத்திரமே நாம் சத்தியத்தை கண்டடைய முடியும். **உம்முடைய வசனமே சத்தியம்** என்று இயேசு கிறிஸ்து சத்தியத்திற்கு சுருக்கமான விளக்கத்தைக் கொடுத்தார் ( யோவான் 17 : 17).

எல்லா சத்தியமும், அது மத சம்மந்தமான சத்தியமாக இருந்தாலும் சரி, ஒழுக்க ரீதியான சத்தியமாக இருந்தாலும் சரி எல்லாமே தேவனிடத்திலிருந்து தான் வருகிறது! இரண்டு கூட்டல் இரண்டு எப்போதுமே நான்குதான். ஏனென்

றால் தேவன் அவ்விதமாக அமைத்திருக்கிறார். அதேவிதமாக யெகோவா தேவனால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற மத சம்மந்தமான சத்தியங்களும், ஒழுக்க ரீதியான சத்தியங்களும் வெறுமனே ஒழுக்க ரீதியான நெறிகளோ அல்லது தனிப்பட்ட தெரிந்து கொள்ளுதலோ அல்ல, எல்லா காலத்துக்கும் எல்லா மக்களுக்கும் சமமாகப் பொருந்துகிற உலகளாவிய சத்திய மாயிருக்கிறது.

இது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்னைத் தள்ளி என் வார்த்தை களை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும். நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேச வேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் எனக்குக் கட்டளையிட்டார் (யோவான் 12 : 48, 49) என்று சொன்னது போன்றதாகும்.

கிறிஸ்தவம் வெறுமனே ஒழுக்க நெறிகளின் மார்க்கம் மாத்திரமல்ல அது சத்தியத்தின் மார்க்கமும்கூட என்பதை உணரவேண்டும். இந்த உண்மையை மனதில் கொண்டு, இந்த சத்தியங்களை மற்றவர்களுக்குப் புரிய வைப்பது நம் தார்மீக கடமையாகும். ஏனென்றால், இந்த சத்தியங்கள் தான் மற்றவர்களை நியாயந்தீர்க்கும்.

ஊழியம் செய்வது அல்லது வேதாகம ஒழுக்க நெறிகளை மற்றவர்கள் பின்பற்றும்படியாகச் செய்வது என்பது ஒருதலைப்பட்சமாக உங்கள் கருத்துக் களை மற்றவர்கள் மீது திணிப்பதாக இருக்கக்கூடாது. மாறாக, வரவிருக்கும் நியாயத்தீர்ப்பு நாளுக்காக உங்களைச் சுற்றி இருப்பவர்களிடத்தில் அக்கறை கொண்டு அவர்களுக்கு உதவி செய்கிறதா இருக்க வேண்டும்!

ஏனென்றால் கிறிஸ்தவர்களின் சத்தியம் உலகளாவியது. நாம் பிரதான கட்டளையை இவ்வுலகிற்கு அறிவிக்கும்படி கட்டளை பெற்றிருக்கிறோம். பின்பு அவர் அவர்களை நோக்கி ; நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற்கு 16 : 15, 16). நாம் இம்முழு உலகத்திற்கும் போக வேண்டும். ஏனென்றால், நாம் பற்றி கொண்டிருக்கும் சத்தியத்தால் இம்முழு உலகமும் தாக்கத்திற்கு உட்படுத்தப்படுகிறது.

சுவிசேஷத்தை ஒழுக்கநெறிகள் என்னும் நிலையில் வைத்துப் பார்ப்பது அதைத் தரம் தாழ்த்துவதற்கும், அதன் வல்லமையை கொள்ளையிடுவதற்கும் சமமாகும். இல்லை! கிறிஸ்தவம் ஒழுக்க நெறிகளை விட மேலானது, அது சத்தியமாயிருக்கிறது! ✞

# அழியாமை
# *Immortality*

Perry N. Hall

கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம். ஆகிலும் சரீரத்தில் பிழைத்திருக்கிறதினாலே என் கிரியைக்குப் பலனுண்டாயிருப்பதால் நான் தெரிந்து கொள்ளவேண்டியது இன்னதென்று அறியேன். ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன் ; தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும் (பிலிப் 1 : 21 – 23). பவுல் உண்மையாகவே தன்னுடைய சிந்தையை மேலான காரியங்களின் மீது வைத்தார் (கொலோ 3 : 1 –3). காலங்காலமாக அழியாமைக்கான மனிதனுடைய ஏக்கம் மனிதர்கள் மத்தியில் பொதுவான ஒன்றாக இருந்து வருகிறது.

எல்லாக் காலத்திலும், எல்லா இடங்களிலும் எல்லா மக்கள் மத்தியிலும் மரணத்திற்குப் பிறகு ஒரு வாழ்க்கை உண்டு என்னும் நம்பிக்கை இருந்திருக்கிறது. பழங்கால எகிப்தியர்கள் நியாயத்தீர்ப்புக்கு பிறகு ஆவி சரீரத்தோடு இணையத்தக்கதாக இறந்தவர்களின் சரீரம் கெட்டுப் போகாதபடி பலவிதமான மருந்துகளைப் போட்டு அதைப் பேணிக்காத்தார்கள். கிரேக்கப் புராணத்தில் சரோன் என்னும் படகோட்டி பாதாளத்தில் மரித்தோருடைய உலகத்தையும், உயிரோடிருக்கிறவர்களுடைய உலகத்தையும் பிரிக்கிற STYX என்னும் நதியிலிருந்து ஆவிகளை வேறு இடத்திற்கு கடத்துவான் என்றும், ஐதீகத்தில் இறந்த பிணத்தின் வாயில் காசை வைப்பது கூட இதன் கூறுகளில் ஒன்று தான் என்று நம்பப்படுகிறது. அமெரிக்க இந்தியர்கள் தங்கள் வம்சத் தலைவன் இறக்கும் போது அவனுடைய ஆவி வேட் டையாடும் பூமியில் சுதந்திரமாக சுற்றித் திரியத்தக்கதாக அவனுடைய குதிரை யைக் கொன்று அவனுடைய வில் அம்பு போன்றவைகளை முறித்துப் போட்டதாக புராணக் கதை உண்டு. இன்று இலக்கியவாதிகள், தத்துவஞானிகள், விஞ்ஞானிகள் அழியாமையைக் குறித்த தங்கள் நம்பிக்கையை எழுதி வைத்திருக்கிறார்கள். வீட்டிலிருந்து பறந்து சென்ற புறா எப்படி எவ்வித இடையூறுமின்றித் தன் சிறகுகளை விரித்துப் பறந்து மறுபடியும் வீட்டிற்கு அல்லது கூட்டிற்கு வருகிறதோ, தேனீக்கள் எப்படி நேராக, சீராக தங்கள் கூட்டிற்கு வருகிறதோ அதேபோல் அழியாமை மனித ஆத்துமாவை அழைக்கிறது.



நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்தக் கிருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது ; அவர் மரணத்தைப் பரிகரித்து ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார் (I தீமோ. 1:10 ; கொரி. 15:1-58).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து லாசருவின் கல்லறை அருகே நின்று நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் ; என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் ; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான் என்றார் (யோவான் 11:25, 26).

## வேதாகமம் பற்றி நெப்போலியன்...

‘ வேதாகமம் வெறுமனே ஒரு புத்தகம் அல்ல, இது தன்னை எதிர்ப்பவர்கள் எல்லோரையும் மேற்கொள்ளும் வல்லமை பெற்ற ஒரு ஜீவனுள்ள படைப்பாகும் ”

# சத்தியமா அல்லது பைத்தியமா?

# Truth Or Madness

*Maxie B. Boren*

ரோம அதிபதியாகிய பெஸ்து அப்போஸ்தலனாகிய பவுலைப் பார்த்து நீ பிதற்றுகிறாய் என்று குற்றஞ்சாட்டியபோது அதற்குப் பதிலளித்துப் பேசிய பவுல் கனம் பொருந்திய பெஸ்துவே நான் பயித்தியக்காரனல்ல, சத்தியமும் சொஸ்த புத்தியுமுள்ள வார்த்தைகளைப் பேசுகிறேன் " என்று சொன்னார் (அப். 26 : 25) ஆம் பவுல் பைத்தியக்காரன் அல்ல. சத்தியத்தை நிராகரித்தவர்கள்தான் பைத்தியக்காரர்கள்!

இன்றும் நிலைமை அப்படித்தான் இருக்கிறது. 1. இவ்வுலகம், தேவனை விசுவாசிப்பவர்களை. 2. வேதாகமத்தை தேவனுடைய வார்த்தையாக விசுவாசிப்பவர்களை. 3. ஆதியாகமம் 1 ஆம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிற சிருஷ்டிப்பின் விவரிப்பை விசுவாசிப்பவர்களை. 4. எபேசியர் நான்காம் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள ஒற்றுமையின் ஏழு அடிப்படைகளை விசுவாசிப்பவர்களை. 5. ரோமர் 1 : 16 ல் பதிவு செய்யப்பட்டிருக்கிற இரட்சிப்பின் திட்டத்தை விசுவாசிப்பவர்களை 6. புதிய ஏற்பாட்டுப் பக்கங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிற உயரிய ஒழுக்க நெறிகளை விசுவாசிப்பவர்களை பைத்தியக்காரர்கள் என்றும் நிஜவாழ்க்கையோடு சம்மந்தம் இல்லாதவர்களாகவும் பார்க்கிறது. உண்மையில், உலகம்தான் பலவிதமான குழப்பங்களில் சிக்கி சரியான புரிந்துகொள்ளுதல் இல்லாமல் தவிக்கிறது.

பெரும்பாலான ஜனங்கள் எளிமையான சத்தியத்தை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக தவறைத் தழுவியிருப்பது குறித்து சிந்திக்கும் போது எனக்கு எப்போதும் குழப்பமாயிருக்கிறது. காரியங்கள் ஏன் இப்படியாக இருக்கிறதென்று எனக்குப் புரியவில்லை. சொல்லப்போனால், இது எனக்கு புரியாத புதிராகவே இருக்கிறது. எல்லோரும் தங்கள் ஆத்தும இரட்சிப்பு சம்மந்தமாகவும், தங்கள் நித்தியத்தை எங்கே கழிக்கப் போகிறார்கள் என்பது பற்றியும் சத்தியத்தை அறிய விரும்புகிறார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால், நடைமுறையில் அது உண்மையல்ல. இவ்வுலகம் பொய்யை நம்புவதில் தீவிரமாக, தீர்மானமாக இருக்கிறது (II தெச. 2 : 1 - 12).

வேண்டுமானால் இவ்வுலகம் நம்மை பைத்தியக்காரர்கள் என்று அழைக்கட்டும், கள்ளப்போதகர்கள் தங்கள் விருப்பப்படி குமுறட்டும். நீதியின்மேல் பசிதாகமுள்ள இருதயங்களால் ஏற்றுக் கொள்ளும்படி சத்தியத்தின் குரல் ஒலித்துக் கொண்டேதான் இருக்கும் என்று நம்புகிறேன் ( மத். 5 : 6 ) சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிற கர்த்தருடைய மெய்யான சபை சத்தியத்தோடு எவ்வித சமரசமும் செய்து கொள்ளாமல் தொடர்ந்து தேவனுடைய வார்த்தையை அறிவித்துக்கொண்டே தான் இருக்கும்! சத்தியம் தனித்துவம் வாய்ந்தது, அது அப்படித்தான் இருந்து வருகிறது, அது அப்படியே தான் தொடர்ந்து இருக்கும்.

**பவுல் பைத்தியக்காரன் அல்ல. மாறாக, சத்தியத்தை நிராகரித்தவர்கள் தான் பைத்தியக்காரர்கள்!**

கிறிஸ்தவ சகோதரர்களைக் குறித்த என் ஜெபம் என்னவென்றால், நாம் அறிவுப்பூர்வமாக, மனித ஞானத்தின் மதிகேடான நிலையையும், பைத்தியக்காரதனத்தையும் நிராகரித்து, தேவ சித்தத்தின் வெளிப்பாட்டைப் பற்றிக் கொண்டு அன்புடன் தைரியமாக அதைப் பிரசங்கிக்க வேண்டும் (எபே. 4:15).

✞

## ஞானஸ்நானத்திற்குப் பிறகு இவைகளை நினைவில் கொள்ளுங்கள்

- **நீங்கள்** கடந்த கால பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் (அப்போஸ்தலர் 2:38)
- **நீங்கள்** புதுசிருஷ்டிகளாயிருக்கிறீர்கள் (II கொரிந்தியர் 5:17)
- **நீங்கள்** கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாயிருக்கிறீர்கள் (I பேதுரு 2:8)
- **நீங்கள்** எல்லாவற்றைப் பார்க்கிலும் கிறிஸ்துவை அதிகம் நேசிக்க வேண்டியவர்களாயிருக்கிறீர்கள் (மத்தேயு 23:27)
- **நீங்கள்** மற்றவர்கள் இரட்சிக்கப்பட உதவி செய்ய வேண்டியவர்களாயிருக்கிறீர்கள் (மத்தேயு 28:19, 20)

# அது எப்படி விருத்தியடைந்தது?

# How Did it Increase?

*Bruce Buckley*

தேவ வசனம் விருத்தியடைந்தது என்று சொல்லி (அப்போஸ்தலர் 6 : 7) ல் நாம் வாசிக்கிறோம். தேவனுடைய வார்த்தை விருத்தியடைந்தது என்பதை சிலர் தவறாகப் புரிந்து கொண்டிருப்பதைப்போல் தெரிகிறது.

சிலர், இதன்பொருள் தேவனுடைய வார்த்தையோடு சில காரியங்கள் கூட்டப் பட்டதால் அது விருத்தியடைந்தது என்று தவறாகப் புரிந்துகொண்டு, தேவ னுடைய கூடுதலான வெளிப்பாடு தேவனுடைய வார்த்தையோடு சேர்க்கப்பட்ட தால் அது விருத்தியடைந்தது என்று சொல்லிக் கொள்கிறார்கள். இது பரிசுத்த வான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்தோடு ஏதோ ஒன்று கூட்டப்பட்டிருக்கிறது என்று சொல்வதாக உள்ளது. சுவிசேஷத்தைப் பிரசிங்கிப் பதற்கு அப்போஸ்தலர்களை ஆயத்தப்படுத்துவதற்குத்தான் தேவனுடைய வெளிப்பாடு கொடுக்கப்பட்டது. மார்மன் புத்தகமோ அல்லது அது போன்று வேறு மனிதனுடைய கொள்கைப் புத்தகங்களோ தேவனுடைய வார்த்தை விருத்தி யடைந்ததாகப் பொருள்படாது. ஆனால், அது மனிதனுடைய வார்த்தைகள் விருத்தியடைந்ததாகத்தான் பொருள்படும். பரிசுத்த ஆவியானவர் தனது வெளிப்பாட்டை எப்போது நிறுத்த வேண்டுமென்பதை அறிந்திருந்தார்.

எனவே, தேவனுடைய வார்த்தை விருத்தியடைந்தது என்பதன் பொருள் தேவனுடைய வார்த்தை பரவலாகப் பிரசங்கிக்கப்பட்டது என்பதாயிருக்கிறது.

தேவனுடைய வார்த்தை ஏற்றுக்கொள்ளப்பட்டதிலும் விருத்தி காணப்பட்டது. விதை தேவனுடைய வார்த்தையாகக் காணப்பட்டபடியால் அதில் பெரிய இரகசியம் ஒன்றுமில்லை. விதைகள் விதைக்கப்படும்போது அங்கே விருத்தி உண்டாகும். எந்த அளவுக்கு விதைக்கப்பட்டதோ அந்த அளவுக்கு அறு வடையும் இருக்கும். விதைக்கவில்லையென்றால் அறுக்கவும் முடியாது. சில

விதிவிலக்குகள் மாத்திரமே உள்ளன.

*பந்தி விசாரணை செய்வதற்கு ஏழுபேரை தெரிந்து கொண்ட பிறகு அவர்கள் ஜெபம் பண்ணுவதிலும், தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் அதிகமான நேரத்தை செலவிட்டார்கள். பந்தி விசாரணை செய்ய ஏழுபேர் தெரிந்துகொள்ளப்பட்டபடியால், அப்போஸ்தலர்களுக்கு தேவனுடைய வார்த்தையை அறிவிக்கும் முக்கியமான பணியைச் செய்ய அதிக நேரம் கிடைத்தது.*

மாசில்லாத சுத்தமான பக்தியை மற்றவர்களுக்கு சேவை செய்வதினால் நாம் வெளிப்படுத்தினால் விதைக்காமலேயே நாம் அறுவடை செய்யலாம். முறுமுறுப்பு, வம்பளப்பு, வேலை செய்வதற்கு மனமில்லாமை போன்றவைகள் காணப்பட்டால் தேவவசனம் விருத்தியடையாது.

முன்பெல்லாம் சுவிசேஷத்தைக் கேட்க ஜனங்களை சபைக்கட்டிடத்திற்கு அழைத்துவருவது சுலபமாயிருந்தது. இப்பொழுதெல்லாம் அது கடினமாகி விட்டது. இப்போது அவர்கள் சுவிஷேத்தைக் கேட்க வரவேண்டுமென்றால் நாம் அவர்களிடத்தில் போவது அவசியமாயிருக்கிறது. அப்போதுதான் தேவ வசனம் விருத்தியடைந்தது என்று நம்மால் சொல்ல முடியும்.

✝

## நம் ஜெபங்களுக்கு தேவன் ஐந்து விதங்களில் பதில் தருகிறார்

- ஆம் என்று சொல்வதன் மூலமாக (யாக்கோபு 5:17)
- இல்லை என்று சொல்வதன் மூலமாக (மத்தேயு 26:39-44)
- கொஞ்சம் காத்திருங்கள் என்று சொல்வதன் மூலமாக ( எரேமியா 42:4-7)
- மாற்றாக வேறொன்றை நமக்கு தருவதன் மூலமாக (கொரிந்தியர் 12:7-9)
- நாம் ஜெபிப்பதற்கும் அதிகமாக நமக்குத் தருவதன் மூலமாக (எபேசியர் 5:20)

# மரணத்தின் முத்தம்

( ஊழியத்திற்குத் தடை )

## *The Kiss of Death*

*Lewis G. Hale*

அநேகமாக முதல் நூற்றாண்டு சபைக்கும் நம்முடைய நாட்களில் இருக்கும் சபைக்கும் இடையே காணப்படும் மிகப்பெரிய வித்தியாசம் ஊழியக் காரியங்களில்தான். சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள் (அப்பேஸ்தலர் 8 : 4). அதை இன்றைய நாட்களில் நம்மால் காணமுடிவதில்லை. அன்றைய நாட்களில் சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கிப்பதற்கு அவர்களிடம் இருந்த அந்த உணர்வை இந்த நாட்களில் நாம் பிரதிபலிக்க காரணிகளாக இருக்கும் சில காரியங்களை நாம் பார்க்கலாம்.

ஊழியஞ்செய்யும் தன்மை இயற்கையாகவே நம்மிடத்தில் இல்லை. ஊழிய உணர்வு வளர்க்கப்பட வேண்டும். நாம் பலவிதமான வேலைகளை செய்து கொண்டு பரபரப்பாக இருப்பதாகச் சாக்குபோக்கு சொல்லிக் கொள்கி றோம். நித்தியமே நமக்கு ஆபத்தில் இருக்கும்போது நேரத்தைப் பற்றி நினைத் துக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு போதுமான அளவு அறிவில்லை என்று சொல்கிறோம். இரட்சிக்கப்படுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டுமென்பதை அறிந்திருந்தோமானால் இரட்சிக்கப்படுவது எப்படி என்பதை மற்றவர்களுக்கு சொல்ல நாம் போதுமான அளவுக்கு தெரிந்தவர்களாயிருப்போம். அது எப்படி செய்யலாம் என்று அறிந்து கொள்ள உதவுகிறது. செய்ய விருப்பப்படுவது மிகவும் முக்கியமானதாகும். ஆத்துமாக்களை குறித்த நம் ஆசை கொளுந்து விட்டு எரியும்போது வேலை சுலபமாகச் செய்து முடிக்கப்படும். அக்கறை யின்மை ஆத்தும ஆதாயத்தில் மிகப்பெரிய தடைக்கல்லாக இருந்து வருகிறது. அவர்களுக்குத் தேவை ஏற்பட்டால் அவர்கள் வரட்டும் என்று சில வேளைகளில் சொல்கிறோம். இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதை ஜனங்கள் அறிந்திருக்கிறார்கள் என்று நினைத்து ஏமாந்து போகிறோம்.

பல வருடங்களாகத் தங்களை கிறிஸ்தவர்கள என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் மத்தியில் காணப்படும் கள்ள உபதேசத்தோடு சமரசம் செய்து கொள்ளும் பிரச்சனையை எதிர்கொண்டு வருகிறோம். நம் பிரசங்கியார்களில் சிலர் ஜனங்கள் பக்தியுள்ளவர்களாகவும், உண்மை யுள்ளவர்களாகவும், இருக்கிறபடியால் அவர்கள் உண்மையாக சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாமல் போனாலும் தேவன் அதை கண்டுகொள்ளமாட்டார் என்று நினைக்கிறார்கள். அவர்களுடைய கீழ்ப்படியாமை மன்னிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஜனங்கள் தங்கள் தவறுகளில் இழந்து போகவில்லையென்றால், அவர்களிடத்தில் எதற்காக ஊழியம் செய்ய வேண்டும் என்று சில பிரசங்கியார்கள் கேட்கிறார்கள்!

இப்படிப்பட்ட மனோபாவம் இவர்களுடைய ஊழியம் வளராமல் அதை நெருக்கிப்போடுவதற்குப் போதுமானதாயிருக்கிறது, அதன் விளைவாக, சுவிசேஷம் மிகப்பெரிய தோல்வியை சந்திப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இன்று நம் மத்தியில் யூதமார்க்கத்தின் மூலமாகக் கூட தேவனிடத்தில் சேர முடியும் என்று சொல்லும் சகோதரர்கள் இருக்கிறார்கள். இன்று நம் மத்தியில் புத்தமதத்தைத் தழுவியிருக்கிற அயலகத்தார், நண்பர்கள் இருக்கிறார்கள். ஒருவேளை உங்கள் நண்பர்கிளில் சிலர் நாத்திகர்களாக இருக்கலாம். அவர்கள், நல்லவர்களாகவும் இருக்கலாம். அப்படிப்பட்டவர்களை அவர் களுடைய தவறான உபதேசத்திலிருந்து சத்தியத்தின் மூலமாக வெளியே கொண்டு வர வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து **என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்** என்று சொல்லியிருக்கிறார் (யோவான் 14 : 6). இவ்வசனத்தை நீங்கள் விசுவாசித்தால் நாம் ஏன் ஊழியஞ்செய்ய வேண்டுமென்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

---

**இரட்சிக்கப்படுவதற்கு** நாம் என்ன செய்ய வேண்டுமென்பதை அறிந்திருந்தோமானால், **இரட்சிக்கப்படுவது** எப்படி என்பதை மற்றவர்களுக்குச் சொல்ல நாம் போதுமான அளவுக்கு தெரிந்தவர் களாயிருப்போம்.

# ஆராதனைக் கூடுகை

## ( இரண்டு காரியங்கள் அங்கே நடக்கவேண்டும் )

# The Worship Assembly

## *(Two Things Must Happen there)*


*Jack Harriman*

முதலில் தேவன் ஏற்றுக்கொள்ளத்தக்கதான ஆராதனை அவருக்கு ஏறெடுக்கப்படவேண்டும். தேவனை தொழுதுகொள்ளுகிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் அவரை தொழுதுகொள்ள வேண்டும் (யோவான் 4 : 24). அதன்பொருள் ஆராதனை முறை தேவனுடைய போதனையின்படியும் (சத்தியம்), சரியான மனநிலையின்படியும் (ஆவி) இருக்க வேண்டும். ஆராதனை அனுபவமானது ஆராதிப்பவர் மீது நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் தேவனால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதை நிறைவேற்ற இரண்டு காரியங்கள் உதவும்.

ஆராதிப்பவர் பார்வையாளராக அல்ல, செயல்படுகிறவராக இருக்க வேண்டும். பார்வையாளருடைய மனநிலை என்னவென்று நமக்குத் தெரியும். அவர் வேடிக்கைப் பார்க்கிறவராகத்தான் இருப்பார், செயல்படமாட்டார். நாம் பொழுதுபோக்குக்காக விளையாட்டுப் போட்டிகளைக் காணவும், நாடகங் களைக் காணவும் சென்றிருப்போம். அந்த விளையாட்டு வீரர்களோ அல்லது நடிகர்களோ சிறப்பாக தங்கள் திறமையை வெளிப்படுத்தியிருந்தால் நாம் புன்னகை பூரிப்போம். இல்லையென்றால், முகத்தைச் சுளிப்போம். அதேபோல் அவர்களுடைய செயல்பாட்டைப் பொறுத்து நாம் சிரிக்கவோ அல்லது அழவோ செய்வோம். எல்லா நிகழ்ச்சிகளும் முடிந்த பிறகு அந்த நிகழ்ச்சியைப் பற்றிய விமர்சகர்களாக கடந்து செல்வோம்.

ஆராதனையில் தேவன் பார்வையாளராக இருக்கிறார். நாம் செயல் படுகிறவர்களாயிருக்கிறோம். ஆராதிக்கிற ஒவ்வொருவரும் பாடகராக, ஜெபிக்கிற வராக கொடுக்கிறவராக, பந்தியில் பங்குபெறுகிறவராக இருக்க வேண்டும். ஒருவர் பாடல் பாடவில்லையென்றால் அவர் அராதிக்கவில்லை என்று பொருள்.

ஒருவர் இருதயத்திலிருந்து ஆராதனையை ஏறெடுக்கவில்லையென்றால் அவர் ஆராதிக்கவில்லை என்று பொருள். ஆராதனை என்பது ஒவ்வொரு தனிப்பட்ட நபராலும் தேவனுக்கு ஏறெடுக்கப்படவேண்டிய ஒன்றாகும். இது தேவன் நமக்கு செய்யும் ஒன்றல்ல, நாம் ஒருவருக்கொருவர் செய்யும் ஒன்றுமல்ல.



நாம் தேவனை ஆக்கப்பூர்வமாக ஆராதித்து அதன் முழுப்பயனை எப்படி அடைய முடியும்? ஆயத்தம் தான் முக்கியமான ஒன்றாக இருக்கிறது. வாரத்தின் ஆறு நாட்களும் தேவனுக்கும், தங்களுக்கும் சம்மந்தமில்லாத வாழ்க்கையை வாழ்ந்து விட்டு ஞாயிற்றுக்கிழமை தேவனை ஆராதிக்கக் கூடி வருபவர்கள் அவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ள முடியாது. ஆனால், அவர்கள் விழித்திருந்து ஜெபித்து தேவனுடைய வார்த்தைகளை தியானித்து, சாத்தானோடு போராடி பாவத்தை வென்று ஆறு நாட்களும் தங்கள் பரிசுத்தத்தைக் காத்துக்கொண்டு ஞாயிற்றுக்கிழமை தேவனை ஆராதிக்கக் கூடி வந்தால், தங்கள் இருதயத்தை ஊற்றி தேவனை ஆராதித்து விட்டு அதன்விளைவாக புது பெலனடைந்து வெளியே கடந்து செல்ல முடியும். ✝

---

## வேதாகமம் பற்றி
## ஜார்ஜ் வாஷிங்டன்

**தேவனும் வேதாகமமும் இல்லாமல் இவ்வுலகை சரியாக ஆளுவது என்பது முடியாத காரியமாகும்.**

# பிசாசு களிகூருகிறான்

# *The Devil Is Rejoicing!*

Bonnie Rushmore

ஒருவர் பாவமன்னிப்புக்காக முழுக்கு ஞானஸ்நானம் பெற்று தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதற்கு முன்பாக (அப்போஸ்தலர் 2 : 38) பிசாசின் பிள்ளையாக இருக்கிறார். அந்த நபர் ஞானஸ்நானத்திற்குப் பிறகு தேவனுடைய பிள்ளையாகிறார் (அப்போஸ்தலர் 22 : 16). ஒருவர் பாவத்தில் வாழும்போது சாத்தான் சந்தோஷப்படுகிறான். ஒருவர் தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியும்போது, தேவன் களிகூருகிறார்.

இப்பூமியில் வாழும் மக்களின் செயல்பாடுகளைக் கண்டு பல நேரங்களில் பிசாசு குதூகலத்தில் குதிப்பதாக நான் கருதுகிறேன். பிசாசின் பிள்ளை இரட்சிப்பின் திட்டத்தைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படியாதபோது, பிசாசு களிகூருகிறான். இரட்சிக்க வல்லமையுள்ள கிறிஸ்துவின் இரத்தத்திற்கு ஒரு பாவி கீழ்ப்படியத் தவறும்போது தேவன் துக்கக்கண்ணீர் வடிக்கிறார் (II பேதுரு 3:9).

ஆயினும், ஒரு தேவனுடைய பிள்ளை பாவம் செய்யும்போதுதான் பிசாசு அதிகமாக மகிழ்ச்சி அடைகிறான். அப்போஸ்தலனாகிய பேதுரு **தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள். விழித்திருங்கள். ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித் திரிகிறான்** என்று எழுதினார் (I பேதுரு 5 : 8). இவ்வார்த்தைகள் எல்லாம் கிறிஸ்தவர்களுக்குத்தான் எழுதப்பட்டது. பசியான ஒரு சிங்கம் எப்படி தன் ஆகாரத்திற்காக அலைந்து திரிகிறதோ அதுபோல் பிசாசு எவனை விழுங்கலாமோ என்று அலைந்து திரிகிறான். மேலும், பேதுரு தொடர்ந்து ஒன்பதாம் வசனத்தில் சொல்லும்போது உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறி வருகிறதென்று அறிந்திருக்கிறபடியால் விசுவாசத்தில் உறுதியாயிருந்து பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் என்று சொல்கிறார். இவ்வுலகத்தின் பிள்ளைகள் ஏற்கனவே பிசாசின் பிள்ளைகளாகத்தான் இருக்கிறார்கள். எனவே, அவர்கள் தொடர்ந்து உலகத்தின்

வழிகளில் நடக்கும் போது சாத்தான் களிகூருகிறான். ஆயினும், தேவனுடைய பிள்ளையை பாவம் செய்ய வைக்க அவன் பல்வேறுபட்ட சோதனைமுறைகளை மிக ஜாக்கிரதையாகக் கையாண்டு கொண்டிருக்கிறான். அவனுடைய கண்ணியில் கிறிஸ்தவர்கள் சிக்கிக்கொண்டால் அவன் மிகவும் களிகூருகிறான். நாம் பாவம் செய்து அந்த பாவத்திலிருந்து மனந்திரும்பாத போது சாத்தான் மிகவும் களிகூருகிறான்.

கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதர சகோதரிகள், சிறிய காரியங்களை பெரிதாக்கி கூச்சல் குழப்பம் போட்டு, சண்டையிட்டுக் கொள்ளும்போது சாத்தான் அதிகமாக மகிழ்ச்சி அடைகிறான். நாம் கர்த்தருடைய கிரியையில் காணப்படும் அதிகமான நன்மைகளை விட நம் சொந்த விருப்பங்களுக்கு, தேவைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும்போது, சாத்தான் அதிகமாக களிகூருகிறான். மத்தேயு 7: 12 **ஆதலால் மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்** என்று தெளிவாகச் சொல்கிறது. இங்கே இயேசு கிறிஸ்து மற்றவர்களை நம்மைவிட மேலாகக் கருத வேண்டும் என்று தெளிவாகப் போதிக்கிறார். மேலும், (மாற்கு 12 : 31)ல் கிறிஸ்து நாம் நம்மிடத்தில் அன்பு கூருவதுபோல் பிறரிடத்திலும் அன்பு கூர வேண்டும். இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார். அப்போஸ்தலனாகிய யோவான் **நான் சபைக்கு எழுதினேன் ஆனாலும், அவர்களில் முதன்மையாயிருக்க விரும்புகிற தியோத்திரேப்பு எங்களை ஏற்றுக் கொள்ளவில்லை ஆனபடியால், நான் வந்தால் அவன் எங்களுக்கு விரோதமாய்ப் பொல்லாத வார்த்தைகளை அலப்பி, செய்துவருகிற கிரியை களை நினைத்துக்கொள்வேன். அவன் இப்படிச் செய்து வருவதும் போதாமல், தன் சகோதரரை ஏற்றுக்கொள்ளாமலிருக்கிறதுமன்றி ஏற்றுக் கொள்ள மனதாயிருக்கிறவர்களையும் தடைசெய்து சபைக்குப் புறம்பே தள்ளுகிறான்** (III யோவான் 9, 10). இந்த தியோத்திரேப்பு சபையில் எல்லோரையும் விட தன்னை மேலாக வைத்திருக்க முயற்சித்தான்; சபைக்காக இவனே சில முடிவுகளை எடுத்திருக்கிறான். அது அவனுடைய வேலையாயிருக்கவில்லை. அப்போஸ்தலனாகிய யோவான் அந்த சபையாரைப் போய் சந்திக்கும்போது தியோத்திரேப்பின் செயல்பாடுகளை அவர்களிடத்தில் தெரியப்படுத்தி அவனை கடிந்துகொள்ள திட்மிட்டிருந்தார். பதினொன்றாம் வசனத்தில் யோவான் இந்த தியோத்திரேப்புவை தீமையோடு ஒப்பிட்டு காயுவையும், நம்மையும் நன்மையானதைப் பின்பற்றும்படியாக உற்சாகப்படுத்துகிறார். அதே நேரத்தில் தீமைசெய்த தியோத்திரேப்புவைப் பின்பற்றக்கூடாது என்றும் எச்சரிக்கிறார்.

கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதர சகோதரிகள் சிறிய விஷயங்களைப் பெரிதாக்கி ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்ளும்போது சாத்தான் களிகூருகிறான். ஆனால், தேவனுடைய பிள்ளைகள் ஒருவருக்கொருவர் ஒத்துப் போகாத போது தேவன் துக்கக்கண்ணீர் வடிக்கிறார். கிறிஸ்துவின் சரீரத்துக்குள் சண்டை, சச்சரவுகள் ஏற்படும்போது சபையின் பணிகள் முடங்கிப் போகிறது. தேவனுடைய பிள்ளைகள் வேலை செய்யாதபோது சாத்தான் களிகூருகிறான். தேவனுடைய பிள்ளைகள் ஒருவருக்கொருவர் அன்புகாட்டாத கிறிஸ்துவக் கூட்டத்தில் யார்தான் அங்கம் வகிக்க ஆசைப்படுவர்? I கொரிந்தியர் 13 : 4, 5 வசனங்கள் அன்பிற்கான விளக்கத்தை கொடுக்கிறது. **அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்குப் பொறாமை இல்லை; அன்பு தன்னைப் புகழாது; இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது. நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால் நாம் பொறுமையாயிருப்போம், தாழ்மையாயிருப்போம்.** நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால் கிறிஸ்து ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கொடுத்த ஒரே பணியாகிய ஆத்தும ஆதாயப் பணியில் அதாவது கிறிஸ்துவின் இரத்தத்தின் இரட்சிக்கும் வல்லமையைப் பற்றி மற்றவர்களுக்குப் போதிக்கிற காரியத்தில் பெருமை வந்து தலையிட அனுமதிக்க மாட்டோம் (மத்தேயு 28 : 18 – 20).

உலக முழுவதிலுமுள்ள கிறிஸ்தவர்கள் தாங்கள் அங்கம் வகிக்கும் சபையின் நலனுக்கு மேலாக தங்கள் விருப்பங்களை வைக்கும்போது பிசாசு மகிழ்ந்து களிகூருகிறான். கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதர, சகோதரிகள் சுவிசேஷத்தைப் பரப்பும் வேலையை நிறுத்திவிட்டு, ஒருவருக்கொருவர் சண்டை யிட்டுக்கொள்ளும்போது தேவன் துக்கக்கண்ணீரை விடுகிறார். இதைக்குறித்து நாம் வெட்கப்பட வேண்டும். நாம் அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தை களைப் பின்பற்றுவோமாக ஒருவரையொருவர் தாங்கி ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால் கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின் மேலும் பூரண சற் குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள் (கொலோ 3 : 13,14).

**உலக முழுவதிலுமுள்ள கிறிஸ்தவர்கள் தாங்கள் அங்கம் வகிக்கும் சபையின் நலனுக்கு மேலாக தங்கள் விருப்பங்களை வைக்கும்போது பிசாசு மகிழ்ந்து களிகூருகிறான்.**

# ஏன் போய் சந்திக்க வேண்டும்?

## *Why Visit?*

*Bobby wheat*

நான் கடந்த வாரம் ஒருவரை சந்திக்கப் போயிருந்தேன். உண்மையில் பலமுறை நான் மக்களை சந்திக்கப் போயிருக்கிறேன். ஆனால் இக்கட்டுரையை நான் எழுதிக் கொண்டிருக்கும்போது இரண்டு சந்திப்புகள் என் மனதைத் தொட்டன. அவைகளை நான் இங்கே பதிவு செய்திருக்கிறேன். முதலில் நான் சந்திக்கப்போன மூத்த விசுவாசி கொஞ்ச நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்தார். அதன் காரணமாக, சில வாரங்கள் ஆராதனையிலும் அவரால் கலந்து கொள்ள முடியவில்லை. நான் அவருடைய நன்மைக்காக உற்சாகமான வார்த்தைகளை அவரிடம் பேசும்படியாகவும், அவரோடு சேர்ந்து ஜெபிக்கும்படியாகவும் அவரை சந்திக்கப் போனேன். பின்பு, அதே நாளில் ஒருமுறை ஆராதனைக்குப் பார்வையாளராக வந்திருந்த ஒரு பெண்மணியை சந்திக்கப் போயிருந்தேன். இந்தச் சந்திப்பிலும் அப்பெண்மணியின் நன்மைக்காக உற்சாகமான வார்த்தைகளை அவரிடம் பேசும்படியாகவும் கிறிஸ்தவ அன்பை வெளிப் படுத்தும்படியாகவும் நான் அங்கே சென்றிருந்தேன்.

இந்த இரு சந்திப்புகளிலும் ஆச்சரியமான காரியங்கள் நடந்தேறின. நான் யாரைப் போய் சந்தித்தேனோ அவர்கள் உற்சாகமடைந்தார்கள். உண்மை யாகவே, சில நன்மைகளையும் பெற்றார்கள், ஆனால் மிகப்பெரிய உற்சா கமும், நன்மையும் அவர்களைப் போய் சந்தித்த எனக்கு தான் உண்டானது என்று நினைக் கிறேன். நான் போய் அவர்களை சந்தித்ததினால் ஒரு நல்ல காரியத்தைச் செய்தேன் என்ற திருப்தி எனக்கு ஏற்பட்டு புத்துணர்வுடன் அவ்விடத்தை விட்டுக் கடந்து சென்றேன். ஆனால், சந்திப்பின்போது எனக்கு கிடைத்த அன்பும், நன்றி உணர் வும் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. கொடுக்கிறவர்தான் பெற்றுக் கொள்பவரைவிட அதிகமாகப் பெற்றுக் கொள்கிறார் என்பது எவ்வளவு விநோதமாக உள்ளது!

இங்கே கருத்து என்ன? கருத்தென்னவெனில் மற்றவர்களைப் போய்

சந்திப்பது நமக்கு நல்லது. ஏனென்றால், அது சபையைக் கட்டுகிறது. அது நமக்கு நல்லது ஏனென்றால், தேவன் நமக்குத் தந்திருக்கிற ஆசீர்வாதங்களை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்க அது வாய்ப்பைத் தருகிறது. அது நமக்கு நல்லது. ஏனென்றால், மற்றவர்களிடத்தில் அன்பாயிருக்க வேண்டும் என்னும் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிய நமக்கு உதவுகிறது. அது நமக்கு நல்லது. ஏனென்றால், நாம் குறுகிய வட்டத்தைவிட்டு வெளியேறி தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறவைகளை பகிர்ந்து கொடுக்க வாய்ப்பளிக்கிறது.

மத்தேயு 25ஆம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து நியாயத்தீர்ப்பின் உண்மை நிலையை விவரிக்கும் வகையில் ஓர் உவமையைச் சொன்னார். அங்கே அவர் நீதிமான்களையும், துன்மார்க்கரையும் ஒரு மேய்ப்பன் செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் பிரிக்கிறது போலப் பிரிப்பார். நியாயத்தீர்ப்பின் நாளில் ஆண்டவருடைய வலது பக்கத்தில் நிற்பவர்கள் யார் என்று பார்க்கிறோம். இங்கே செய்தி மிகத் தெளிவாக இருக்கிறது. நாம் தேவனுடைய மந்தையில் ஆடுகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்றால் நம்முடைய நலனில் நாம் அக்கறை படுவதைப் போல் மற்றவர்களுடைய நலனிலும் நாம் அக்கறை உள்ளவர் களாய் இருக்க வேண்டும்.

நாம் மற்றவர்களைப் போய் சந்திப்பதற்கு இரண்டு வேதாகமக் காரணங்கள் இருக்கின்றன. முதலாவது காரணம், மத்தேயு 22 ஆம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது. **அங்கே நியாயசாஸ்திரி ஒருவன் இயேசு கிறிஸ்துவினிடத்தில் வந்து போதகரே நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது என்று கேட்டான். இயேசு அவனை நோக்கி உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத் தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுமனதோடும் அன்பு கூரு வாயாக இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால் உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே** என்றார் (மத்தேயு 22 : 36 - 39 ) உற்சாகப்படுத்தப்படுவதின் மதிப்பை நீங்கள் எவ்வளவாய் அறிந்திருக்கிறீர்கள்? மற்றவர்கள் உங்களை வந்து சந்தித்தது தனிமையிலிருந்தும் வியாதி யிலிருந்தும் பாவத்திலிருந்தும் கூட உங்களை விடுவித்திலிருக்கலாம் அதன் மதிப்பை நீங்கள் நன்றாய் உணர்வீர்கள். மற்றவர்களை நீங்கள் எவ்வளவாய் நேசிக்கிறீர்கள்?

இரண்டாவது வேதாகமக்காரணம், மத்தேயு 28 : 19 ல் இடம் பெற்றுள்ளது.

ஆகையால், நீங்கள் புறப்பட்டுபோய், சகல ஜாதியாரையும் சீஷராக்கி என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னார். சீஷராக்குவதற்கான ஒரு அருமையான வழி ஜனங்களை போய் சந்திப்பது தான், அதிலும் குறிப்பாக, நமக்குத் தெரிந்தவர்களை வேத பாட வகுப்புகளுக்கும் ஆராதனைக்கும் அழைக்கலாம் அல்லது அவர்கள் இல்லங்களிலோ, உங்கள் இல்லங்களிலோ வேதாகமத்தை படிக்க அழைப்பு விடுக்கும்படி அவர்களைப் போய் சந்திப்பதன் மூலமாக சீஷராக்க முடியும்.



சபை வளர வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். தேவனுடைய ராஜ்யத்தின் எல்லை விரிவாக வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். கிறிஸ்துவுக்குள் கிடைக்கும் இரட்சிப்பு, சந்தோஷம். சமாதானம் போன்றவைகளை மற்றவர்களும் அறிய வேண்டுமென்றும் விரும்புகிறோம். இவைகளெல்லாம் நடக்க வேண்டு மென்றால், நாம் போய் அவர்களை சந்திக்க வேண்டும். ஆம், அதன் பொருள் நாம் சில காரியங்களை விட வேண்டும்.

- ஒரு மணிநேர தொலைக்காட்சி நிகழ்ச்சி
- நல்ல நாவலில் இரண்டு பக்கங்கள்
- அரை மணி நேர தூக்கம்
- இரண்டாவது அல்லது மூன்றாவது கப் காபி
- விளையாட்டு அல்லது அதுபோன்று ஏதாவது ஒன்று
- இணையதளத்தில் இணைவது

மேற்சொல்லப்பட்ட காரியங்களை நாம் விட்டுவிட்டு, அன்றாட செயல் திட்டத்தில் மக்களைப்போய் சந்திப்பதற்கென்று நேரத்தை ஒதுக்க வேண்டும். ஒருவரைப் போய் சந்திப்பதற்கு நாம் செய்யும் தியாகத்தோடு ஓர் ஆத்துமாவுடைய மதிப்பை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

முன்னேறிச் செல்லுங்கள், முயற்சி எடுங்கள், வீட்டைவிட்டு இறங்கிப்போய் யாரையாவது சந்தியுங்கள். அது உங்களை இன்னும் அதிகமாக உற்சாகப்படுத்தும் என்று நான் உங்களுக்கு உறுதி அளிக்கிறேன்.

✝

# வேலையாட்களுக்கு அழைப்பு
# A CALL FOR SERVANTS

*Dwight Fuqua*

இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனாகிய பவுல் (ரோமர் 1:1) தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு ( யாக்.1 : 1 ) இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனுமாகிய சீமோன் பேதுரு (II பேதுரு1 : 1 ) ஊழியக்காரனாகிய யோவான் (வெளி. விசேஷம் 1 : 1 ) மேற் சொல்லப்பட்ட எல்லோருக்கும் பொதுவாயிருப்பது எது? சீஷர்கள் வேலைக்காரர்களாயிருக்கிறார்கள்.

நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தாசனாக இருந்தார்! ஏசாயா அவர் தாசனாக இருப்பார் என்பதை முன்னறிவித்தார். மத்தேயு ஆசிரியர் அதன் நிறைவேறுதலை அறிவித்தார்: **இதோ, நான் தெரிந்து கொண்ட என்னுடைய தாசன்** ( மத். 12 : 18 ) இயேசு கிறிஸ்து **அடிமையின் ரூபமெடுத்தார்** ( பிலி. 2 : 7 ) நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் சொந்த வார்த்தைகளையே கவனியுங்கள் **அப்படியே, மனுஷ குமாரனும் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்** என்றார் ( மத். 20 : 28 ). அவர் நடந்தபடியே நாமும் நடக்க வேண்டாமா? (I யோவா 2 : 6).

ஆம், கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவின் வேலைக்காரர்களாயிருக்கிறார்கள்! நாம் அவரிலும் மேற்பட்டவர்களல்ல, நாம் அவரைப் போலிருப்பதே போதுமானதென்றும் அவர் ஊழியம் செய்ததுபோல நாமும் செய்ய வேண்டுமென்றும் இயேசு கிறிஸ்து போதித்தார். ***சீஷன் தன் போதகனைப்*** **போலவும் வேலைக்காரன் தன் எஜமானைப் போலவும் இருப்பது போதும்** ( மத்தேயு 10 : 24, 25 ). **ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால் நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்தது போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியை**

**காண்பித்தேன். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல, அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல** (யோவான் 13 : 14 - 16). **உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்** (மத்தேயு 23 : 11 ). ஊழியக்காரனாக அல்லது வேலைகாரனாக இருக்க வேண்டும்! புரிந்ததா? இதைவிடத் தெளிவாக எப்படிச் சொல்ல முடியும்?

நமக்கு இப்போது எஜமான்கள் தேவையில்லை! கிறிஸ்து நம் எஜமானாயிருக்கிறார்! ஆனால் ஊழியக்காரர்கள் அல்லது வேலைக்காரர்களுக்கான தேவை அதிகமாக இருக்கிறது ! **இன்றைய நாட்களில் ராஜ்யத்தில் கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்** என்று சொல்லக்கூடிய ஆட்கள்தான் தேவைப்படுகிறார்கள் ( I சாமுவேல் 3:9). ராஜ்யத்தில் நீதியின் வேலைக்காரர்கள் அல்லது அடிமைகள் அதிகமாகத் தேவைப்படுகிறார்கள் (ரோமர் : 18 ). இன்று ராஜ்யத்தில் இயேசுவினிமித்தம் ஊழியக்காரர்கள் தேவைப்படுகிறார்கள் ( II கொரி 4 : 4 ). ராஜ்யத்தில் இன்று மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யும் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் தேவைப்படுகிறார்கள் (எபே. 6 : 6). பரலோகம் வேலை செய்கிற ஊழியக்காரர்களை எதிர்பார்க்கிறது! உண்மையும் உத்தமுமான வேலைக்காரர்களே எழும்புங்கள்!

நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் அருமையான வாக்குத்தத்தத்தைக் கவனியுங்கள் **ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்கிறவனானால் என்னைப் பின் பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான். ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார்** (யோவான் 12 : 26). பரலோகத்தில் அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவிக்கும் அந்த நாளை எதிர்நோக்குங்கள் ( வெளி. விசேஷம் 22 : 3 ). அவருக்கு ஊழியஞ்செய்யுங்கள் ! தொடர்ந்து ஊழியஞ் செய்து கொண்டே இருங்கள்.

✞

---

**வேதாகமத்தை பற்றி**
**ஆபிரகாம் லிங்கன்**

தேவன் மனிதனுக்கு தந்திருக்கிற பரிசுகளில் மிகச் சிறந்த பரிசு வேதாகமம் என்று நான் நம்புகிறேன். இவ்வுலக இரட்சகரிடமிருந்து வரும் எல்லா நன்மைகளும் இப்புத்தகத்தின் மூலமாகவே நமக்கு அறிவிக்கப்படுகிறது.

# ஆளும் அதிகாரத்திற்கு கீழ்ப்படிதல்

# *Submission To Governing Authority*

*Wayne Barrier*

**வா**னத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை கிறிஸ்தவர்கள் முழுமையாக அறிந்திருக்கிறார்கள். மத்தேயு 28 : 18 வசனங்களில் அவர் **வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது** என்று சொல்கிறார். இயேசு நமக்கு ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாக இருக்கிறார் (Iதீமோ. 6 : 15). நம் இரட்சகராக இருக்கிறார் (தீத்து 2 : 13). நமக்காகப் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார் (I யோவான் 2 : 1). நம் மீட்பராயிருக்கிறார் (எபேசியர் 1 : 7). நம் சகோதரராயிருக்கிறார் (ரோமர் 8 : 17). நம்முடைய ஒரே நம்பிக்கையாயிருக்கிறார் (I தீமோ. 1 : 1). நாம் இயேசு கிறிஸ்துவுக்கு முழுவதுமாக என்றென்றும் கடன்பட்டிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், நாம் அவரிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் முழுவதுமாக அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். கிறிஸ்துவின் ராஜ்யம் ஆவிக்குரியதாயிருக்கிறது. இவ்வுலகத்திற்குரியதல்ல (யோவான் 18 : 36).

நாம் வேதாகமத்தைப் படிக்கும்போது, கிறிஸ்துவைப் பின்பற்றினவர்கள். அவருடைய ராஜ்யமாகிய சபையின் பிரஜைகளாக இருந்துகொண்டு அவருடைய மாதிரியின்படியும் போதனையின்படியும் நடந்தார்கள் என்று நாம் கற்றுக் கொள்கிறோம். மனநிலை மற்றும் ஒழுக்க நெறிகள் கிறிஸ்துவின் போதனைகளின்படி இருக்கும்போது அவைகள் உருவம் பெறுகின்றன. நம் பாவ நிலையிலிருந்து நம்மை இரட்சிக்க அவர் மரித்தபடியால் அவருடைய அன்பு வெளிப்பட்டது. அதன் காரணமாக, கிறிஸ்தவர்கள் தேவனிடத்திலும், கிறிஸ்துவினிடத்திலும், சகோதரர்களிடத்திலும், சக மனிதர்களிடத்திலும் அன்பு கூரும்படியாக ஊக்கப்படுத்தப்படுகின்றார்கள். கிறிஸ்தவர்கள் எப்படி தேவனை ஆராதிக்க வேண்டுமென்றும், அனுதின ஜீவியத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்றும் வேத வாக்கியங்களில் போதனைகளைப் பெற்றிருக்கிறார்கள் (II தீமோத் 3 : 16). கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையை ஆளுகை செய்யும் அதிகாரமாக வேதாகமம் உள்ளது.

அப்படியென்றால், இவ்வுலகத்தின் அரசாங்கமும், அதிகாரமும் எதற்கு இருக்கிறது? இவ்வுலகத்தை ஆளுகை செய்கிறவர்களையும் ஆளும் சட்ட திட்டங்களையுங்குறித்து நம் மனநிலை எப்படியாக இருக்கவேண்டும்? அப்போஸ்தலனாகிய பவுலால் கொடுக்கப்பட்டிருக்கும் போதனைகளைக் குறித்து ஆழ்ந்து சிந்தியுங்கள். **எந்த மனுஷனும் மேலான அதிகார முள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான். அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்ளுகிறார்கள். மேலும், அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள். ஆகையால், நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்கவேண்டுமானால், நன்மை செய்; அதினால் உனக்குப் புகழ்ச்சி உண்டாகும். உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு அவன் தேவ ஊழியக்காரனாயிருக்கிறான். நீ தீமை செய்தால் பயந்திரு; பட்டயத்தை அவன் விருதாயாய்ப் பிடித்திருக்கவில்லை. தீமை செய்கிறவன் மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியக்காரனாயிருக்கிறானே. ஆகையால், நீங்கள் கோபாக்கினையினிமித்தமும் மாத்திரமல்ல, மனச்சாட்சியினிமித்தம் கீழ்ப்படியவேண்டும். இதற்காகவே நீங்கள் வரியையும் கொடுக்கிறீர்கள். அவர்கள் இந்த வேலையைப் பார்த்து வருகிற தேவ ஊழியக்காரராயிருக்கிறார்களே. ஆகையால், யாவருக்கும் செலுத்த வேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள் எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்த வேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள். எவனுக்கு பயப்பட வேண்டியதோ அவனுக்கு பயப்படுங்கள்; எவனைக் கனம் பண்ண வேண்டியதோ அவனைக் கனம் பண்ணுங்கள்** (ரோமர் 13:1-7).

உலக முழுவதிலும் அரசாங்கங்கள் தேசங்களின் குடிமக்களை ஆண்டு வருகின்றன. அரசாளும் விதங்கள் மாறுபடுகின்றன. சில அரசாங்கங்கள் சர்வாதிகார முறையைக் கையாளுகின்றன. சில அரசுகள் சுதந்திரமான ஜனநாயக ஆட்சியைக் கொடுத்து குடிமக்களின் வாழ்க்கையை இனிமையாக்குகின்றன. கிறிஸ்தவர்கள் தேவனுடைய போதனையின்படி அரசாங்கத்தோடு இடைபடும்படி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். நாம் என்ன செய்யவேண்டும்? நன்மை செய்யுங்கள், வரியைச் செலுத்துங்கள். யாருக்கு பயப்படவேண்டுமோ அவர்களுக்குப் பயப்படுங்கள். யாரைக் கனம் பண்ண வேண்டுமோ அவர்களை கனம் பண்ணுங்கள். உண்மையுள்ள கிறிஸ்தவர்களாயிருங்கள் தேவன் நம்மை பார்த்துக் கொள்வார். தேவன் எல்லாவற்றையும் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார். அவர் தம்முடைய சித்தத்தின்படி காரியங்களை நடப்பிக்கிறார். தேவன் தம்முடைய நோக்கத்திற்காக மனிதனுடைய அரசாங்கங்களைப் பயன்படுத்துகிறார்.

அப்படியென்றால், மோசமான அரசாங்கமாக இருந்தால் அதற்கும் நாம் கீழ்ப்படிய வேண்டுமா? ஆம், கீழ்ப்படிய வேண்டும். மீதமுள்ள காரியங்களை தேவன் பார்த்துக் கொள்வார். நாம் நன்மை செய்வதிலும், உண்மையா யிருப்பதிலும் நம் கவனத்தைச் செலுத்த வேண்டும். தீமை செய்கிறவர்கள் தான் பயப்படவேண்டும். அவர்கள் தேவனுடைய பட்டயத்திறகு ஆளாவார்கள். இந்த வேலைகளையெல்லாம் செய்ய நாம் முயற்சிக்கக்கூடாது.

சொல்லப்போனால், நாம் இந்த காரியங்களைக்குறித்து கவலையே படக்கூடாது. தேவனால் காரியங்களைக் கையாள முடியும். அவர் கையா ளுவார். சரி, ஊழல் ஒழுக்கக்கேடு தேவபக்தியற்ற நடத்தை போன்றவைகளுக்கு துணைபோகும் அரசாங்கத்திற்கு நாம் கீழ்ப்படிய வேண்டுமா? மறுபடியும், நாம் பார்க்கும்போது தேவன் சகலவற்றையும் தம்முடைய கட்டுப்பாட்டில் வைத் திருக்கிறார். மோசமான அரசாங்கங்களையும் அதன் ஆதரவாளர்களையும் தேவன் பார்த்துக்கொள்வார். உங்கள் தேசச்சட்டங்களுக்குக் கீழ்ப்படியுங்கள், வரியைச் செலுத்துங்கள், நன்மை செய்யுங்கள். தேவன் தம்முடைய ஜனங் களை ஆசீர்வதித்து பராமரிப்பார். துன்மார்க்கமான அரசாங்கத்தை ஆதரிக்கும் ஒரு கிறஸ்தவனுக்கு என்ன நடக்கும்? நாம் பொறுமையாயிருக்கும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம், தேவன் சரியான நேரத்தில் செயல்படுவார்.

நாமெல்லோரும் தேவன், ஆளுகை முறையைப் பற்றியும், அரசாங்கத்தைப் பற்றியும் சாலொமோனுக்குக் கொடுத்த கட்டளைகள் குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டும் **என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்** ( II நாளகமம் 7 : 14 ). தேவனுக்குத் தங்கள் முதுகை காட்டுகிறவர்கள்தான் பயந்து வாழ வேண்டியவர்களாயிருக்கிறார்கள். நாம் தேவனுடைய வார்த்தையோடு சமரசம் செய்து கொள்ளவில்லையென்றால் நாம் அவரால் ஆசீர்வதிக்கப்படுவோம். தீமையையும், தீமையின் வேலை யாட்களையும் அங்கீகரித்து ஆதரிப்பவர்கள், அவர்கள் தங்களை கிறிஸ்த வர்கள் என்று சொல்லிக்கொண்டாலும் தேவக்கோபாக்கினையை அவர்கள் எதிர் கொள்வார்கள். நன்மையைச் செய்யுங்கள் அப்பொழுது உங்கள் தேசம் குணமாகும். நம் தேசத்தின் எதிர்காலம் தேவனுடைய ஜனங்களைச் சார்ந் திருக்கிறது. நாம் உண்மையுள்ளவர்களாயிருந்தால், தேவன் நம் தேசத்தை குணமாக்குவார். ✝

# என் அப்பா எப்போதுமே அலுவலாயிருந்தார்

## " My Daddy Was Always Too Busy "

*Keith Parker*

மறுபடியும் நான் இதைக் கேட்டேன்; ஆனால், இந்தமுறை இதை ஒரு ஊழியக்காரரின் மகளிடமிருந்து கேட்டேன். இவளுடைய தகப்பன் கிறிஸ்துவின் சபையில் ஓர் உண்மையுள்ள ஊழியக்காரனாக இருக்கிறார். இந்த மகள் சிறு வயதிலிருந்தே தன் தகப்பனை அதிகமாக கனப்படுத்தும் மகளாக வளர்ந்து வந்திருக்கிறார். இன்று கூட அவளுக்கு அப்பா தான் ஹீரோ. ஆனால், சமீபத்தில் ஓர் இரகசியத்தை என்னிடத்தில் வெளிப்படுத்தினாள். அந்த இரகசியம் என்ன வென்றால், அவள் தன்னுடைய குழந்தைப் பருவத்தைக் குறித்து ஏமாற்றம் அடைந்ததாகச் சொன்னாள். அதாவது தன் தகப்பன் எப்போதுமே மற்றவர்க ளுக்கு உதவி செய்வதிலும், அடக்க நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதிலும், மற்றவர்களுக்கு ஆலோசனை வழங்குவதிலுமே நாட்களைக் கழித்தார். எங்க ளுக்காக அவர் மிகக் குறைவான நேரத்தையே செலவழித்தார். அக்காயம் இன் னும் மறையாமல் இருக்கிறது என்று தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினாள்.

அப்படிப்பட்ட கசப்புணர்வை நான் பார்ப்பது இது முதல்முறையல்ல, சில நாட்களுக்கு முன்பு நான் மிசிசிபி பகுதியில் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன். எழுச்சிக்கூட்டத்தின் இரவு வேளையில் ஒரு மூப்பரின் மனைவி என்னிடத்தில் வந்து இப்படி ஓர் அருமையான ஆலோசனையைச் சொன்னார். அதென்ன வெனில், நீங்கள் எதைச் செய்தாலும் உங்கள் பிள்ளைகளுக்கென்று நேரத்தை செலவு செய்யுங்கள். அப்பெண் தொடர்ந்து என்னோடு பேசிக் கொண்டிருக்கும் போது அவளுடைய தகப்பன் ஒரு பிரசங்கியாராக இருந்தார் என்று சொன்னாள். ஓர் பிரசங்கியாருடைய மகளாக இருப்பதனால் அவளுக்கிருந்த ஒரே வருத்தம் பிரசங்கியார் எப்போதுமே வீட்டில் இருப்பதில்லை. அவர் எப்போதுமே வெளியே பிரசங்கிப்பதற்குப் போய்விடுவார். அக்காயம் இன்னும் மறையாமல் இருக்கிறது.

இது எப்போதுமே பிரச்சனையாக இருந்து வருகிறது. இது சாமுவேலுக்கும் ஒரு பிரச்சனையாக இருந்தது என்று நான் சந்தேகிக்கிறேன். சாமுவேல் வேதாகமத்தின் மிகச்சிறந்த மனிதர்களில் ஒருவராக இருக்கிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர் ஏலியின் பாதத்தருகே வளர்க்கப்பட்டார். பின்பு அவர் அன்பும், தயவும், தேவபக்தியும் நிறைந்த தலைவராக உருவானார். ஆனால், அவரைப் பற்றி ஒரு வாக்கியம் (I சாமுவேல் 8 : 3)ல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. **ஆனாலும் அவனுடைய குமாரர் அவன் வழிகளில் நடவாமல், பொருளாசைக்குச் சாய்ந்து, பரிதானம் வாங்கி நியாயத்தைப் புரட்டினார்கள்** என்று நாம் வாசிக்கிறோம். இதை உங்களால் நம்ப முடிகிறதா? அவர் பழைய ஏற்பாட்டின் அருமையான தாசர்களில் ஒருவர், இவர் மிகச்சிறந்த தேவ மனிதன். நீதியும் தேவபக்தியும் நிறைந்தவர். ஆனால், அவருடைய குமாரர்களைக் கவனியுங்கள். கேடானவர்களும் பாவத்தினால் நிறைந்தவர்களுமாயிருந்தார்கள் என்று வாசிக்கிறோம். ஏன் அப்படி? அது எப்படி நடந்தது?

ஏழாம் அதிகாரத்திற்கு நீங்கள் போனால் பிரச்சனையின் ஒரு பகுதியைப் பார்க்க முடியும் என்று நினைக்கிறேன் (I சாமுவேல் 7 : 16). சாமுவேலைப் பற்றி இவ்விதமாகப் பேசுகிறது. **அவன் வருஷாவருஷம் புறப்பட்டு, பெத்தேலையும் கில்காலையும் மிஸ்பாவையும் சுற்றிப்போய், இவ்விடங்களிலெல்லாம் இஸ்ரவேலை நியாயம் விசாரித்த பின்பு** என்று பார்க்கிறோம். அவர் வெளியே போய் ஜனங்களுடைய கேள்விக்குப் பதில் அளித்து, அவர்களுடைய பிரச்சனைகளைத் தீர்த்திருக்கிறார். அவர் வெளியே ஜனங்கள் இரட்சிக்கப்படுவதற்கு உதவி செய்து கொண்டிருந்த வேளையிலே அவருடைய குமாரர்கள் மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டார்கள் அல்லது மிகவும் மோசமாகி விட்டார்கள்.

ஊழியக்காரர்கள் மட்டும் இப்பிரச்சனையோடு போராடுவதில்லை. மூப்பர்கள், வேதபாட ஆசிரியர்கள், ஆத்தும ஆதாயம் செய்பவர்கள், மருத்துவர்கள், வக்கீல்கள், விற்பனையாளர்கள், தொழிற்சாலைப் பணியாளர்கள் போன்றோருக்கும் இதே பிரச்சனை இருக்கிறது. இது எல்லோரையும் தாக்குகிறது. எனவே, இந்த காரியத்தில் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். எனவே, அடுத்த முறை உங்கள் பிள்ளைகள், அப்பா விளையாட்டிற்கு மீன் பிடிக்கப்போகலாம் என்று சொன்னால், அவர்களை அங்கே அழைத்துச் செல்லுங்கள், அங்கே நீங்கள் பிடிக்கும் ஆத்துமா உங்கள் பிள்ளைகளுடையதாயிருக்கட்டும்! ✠

# ஒரு தாயின் தாக்கம்

# A MOTHER'S INFLUENCE

*Dennis Gulledge*



நிலைத்து நிற்கும் சக்திவாய்ந்த ஒரு தாயின் தாக்கத்தை ஒருவரும் சந்தேகப் படுவதில்லை. **Eugene Field** என்பவர் தன் தாயைப்பற்றிச் சொல்லும்போது **என் தாயின் மென்மையான குரலையும், இதமான தொடுதலையும் என் வாழ்நாள் முழுவதும் நினைவில் சுமந்து செல்கிறேன்** என்று சொன்னார் என் நினைவுகளும் இது போன்றது தான். அதே நேரத்தில், தாயின் மறு பக்கத்தையும் நினைத்துப் பார்க் கிறேன். அதாவது, தாயின் குரல் எப்போ துமே மென்மையான தாகவும், தொடுதல் இதமானதாகவும் இருப்ப தில்லை. அப்படி இருக்க வேண்டிய அவசியமுமில்லை. அது ஒரு நல்ல தாயாக இருப்பதின் ஒரு பகுதியாகும். **John Quincy Adams** என்பவர் தாயைப் பற்றிச் சொல்லும்போது **நான் இன்று, என்னவாக இருக்கிறேனோ அதெல்லாம் என் தாயால் உண்டானதுதான்** என்று சொல்கிறார். ஆபிரகாம் லிங்கன் இன்னும் ஒரு படி மேலேப் போய், **நான் இன்று என்னவாக இருக்கிறேனோ அல்லது என்னவாக இருப்பேன் என்று எதிர்நோக்குகிறேனோ அவை எல்லாவற்றிற்கும் நான் என் தேவதையான தாய்க்கு கடன்பட்டிருக்கிறேன்** என்று சொன்னார். **Honest Abe** என்பவர் ஒன்பது வயதாயிருந்தபோது, அவருடைய தாய் மரித்துவிட்டார். மரிக்கும்போது மகனுக்கு அவர் சொன்ன கடைசி வார்த்தை **வாழ்க்கையில் ஏதோ ஒன்றை ஆக்கப்பூர்வமாய்ச் செய்** என்பதாயிருந்தது.

நம் அன்றாட வாழ்வில் தாயின் தாக்கத்தை நாம் உணர்ந்து கொண்டுதான் இருக்கிறோம். ஒரு தாய் ஏற்படுத்துகிற தாக்கத்தைப் போல தத்துவ ஞானங்கள் ஏற்படுத்துவதில்லை. பொதுவாக, நான் தாய்மார்கள் பற்றிய பிரசங்கத்தைச் செய்வதில்லை. தாய்மார்கள் தினம் 1907 ல் பிறந்து 1914 ல் **Abe Wood Row Wilson** என்பவரால் விடுமுறையாக அறிவிக்கப்பட்டது. தாய்மார்களுக்கான தேவனுடைய சித்தத்தை வருடத்தின் எல்லா நாட்களிலும் பிரசங்கிக்கலாம் என்று நினைக்கிறேன். இந்த நாளைப்பற்றிய ஒரு முக்கியமான உண்மையென்னவென்றால், அது கர்த்தருடைய நாளாயிருக்கிறது. கர்த்தருடைய நாள் கர்த்தர் மோசேயின் பிரமாணத்தை நீக்கியதிலிருந்தே நம்மிடம் இருந்து வருகிறது (எபே. 1:14, 15, 1:10).

பெரும்பாலான தாய்மார்கள் கனத்திற்குப் பாத்திரவான்களாயிருக்கிறார்கள் (யாத். 20 : 12 ; 21 : 17 ; தீமோ. 1 : 5). ஆனால், சிலர் அப்படி பாத்திரமாயிருப்பதில்லை (II நாளாகமம் 22 : 23). வேதாகமம் கனத்திற்குப் பாத்திரமான சில தாய்மார்களைப் பற்றி பேசுகிறது ; ஏவாள், ஜீவனுள்ளவர்களுக்கெல்லாம் தாய் (ஆதி. 3 : 20). ரெபெக்கொள், யாக்கோபின் தாய் (ஆதி. 27) அன்னாள், சாமுவேலின் தாய் (I சாமு. 1). மரியாள், இயேசு கிறிஸ்துவின் தாய் (மத். 1:18). ஐனிக்கேயாள் - தீமோத்தேயுவின் தாய் (II தீமோ. 1:5). ✞

---

# கிறிஸ்தவர்களாக நாம்

- கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கத்தினர்களாகிறோம் (கொரி. 12:13)
- தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரஜைகளாகிறோம் (யோவான் 3:5)
- கர்த்தருடைய மந்தையில் ஆடுகளாகிறோம் (யோவான் 10:1-16)
- கர்த்தருடைய சேனையில் போர்ச்சேவகராகிறோம் (தீமோத் 2:3-4)
- கர்த்தருடைய திராட்சை தோட்டத்தில் வேலைக்காரர்களாகிறோம் (II தீமோத்தேயு 2:3-4)

## உண்மையாகவே அன்பு என்றால் என்ன?

## What is Love.....Really?

*Alex Gibson*

இதற்குள் நுழைகிறவர்களே, உங்கள் நம்பிக்கை எல்லாவற்றையும் இழந்து விடுங்கள். ஏனெனில், இங்கே நான் அன்பு எவ்வளவு அருமையானது, அலாதியானது, இனிமையானது என்று உங்களுக்கு நான் சொல்லப் போவதில்லை. நான் கற்றுக் கொண்டவைகளிலிருந்து அன்பின் கடுமையான பக்கத்தைப் பற்றியும், அதன் கசப்பான பக்கத்தைப் பற்றியும், அதன் வேதனை தரும் உண்மைகள் பற்றியும் சில காரியங்களைப் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம் எல்லோருக்கும் அன்புப் பட்டியல் தெரியும். அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது என்று அந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகும். அப்பட்டியலில் வேறு எதையெல்லாம் சேர்க்கலாம் என்று உங்களுக்குத் தெரியுமா? அன்பு உங்கள் முழுத் திறனை அதாவது உங்களுக்குள் இருக்கும் சிறந்தவைகளை வெளிக் கொணர்கிறது; அன்பு ஆரம்பத்தில் உங்களுக்கு வேதனையை அளித்தாலும் இறுதியில் அது நன்மையையே கொண்டு வரும்.

அன்பும், தயவும் பார்ப்பதற்கு ஒன்றாகத் தெரிந்தாலும் இரண்டும் வெவ்வேறானவைகள். இன்னும் சொல்லப்போனால் இரண்டும் வெவ்வேறு துருவங்கள். நான் இப்படிச் சொல்வதன் பொருள் என்ன? நான் சில உதாரணங்களைச் சுருக்கமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். எனக்கு ஒரு நண்பன் இருக்கிறான். அவனுக்குப் பணப்பிரச்சனை இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். நான் அவனிடம் தயவு காட்ட வேண்டுமென்றால், அப்பிரச்சனையை அவன் சமாளிக்கப் போதுமான அளவு பணம் கொடுத்து உதவுவேன். ஆனால், நான் அவனிடம் அன்பாயிருந்தால் அதோடு நிற்பதில் திருப்தி அடைய மாட்டேன். அதற்கு மேல் போய், அவனுடைய வங்கிக்கணக்கு அறிக்கையை பரி

சோதித்து ஒரு சிறுதொகையைக் கொடுத்து உதவுவேன். நான் கஞ்சத்தனமாக இருப்பதால் அச்சிறு தொகையை கொடுக்கவில்லை. அவன் சொந்தக்காலில் நிற்க வேண்டுமென்பதற்காக அவனுக்கு கணக்கு வழக்குகளை எப்படிப் பார்க்க வேண்டும், எப்படி சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டுமென்றும் அவனுக்கு கற்றுக் கொடுப்பதுதான் உண்மையான அன்பு. இதை வேறுவிதமாகச் சொன்னால், நீங்கள் ஒரு மனிதனுக்கு ஒரு மீனைக் கொடுத்தால் ஒரு நாளைக்கு அவனுக்கு ஆகாரம் கொடுக்கிறீர்கள். இதை வேறுவிதமாகச் சொன்னால், நீங்கள் ஒரு மனிதனுக்கு ஒரு மீனைக் கொடுத்தால் ஒரு நாளைக்கு அவனுக்கு ஆகாரம் கொடுக்கிறீர்கள். ஆனால், அந்த நபருக்கு மீன்பிடிக்க கற்றுக் கொடுத்தால் வாழ்நாள் முழுவதும் அந்த நபருக்கு நீங்கள் ஆகாரம் கொடுக்கிறீர்கள். நம் நிதிநிலையை சரிபார்ப்பது, நமக்கு மீன்பிடிக்க கற்றுக்கொடுப்பது இதெல்லாம் தேவனுடைய வேலை அல்ல. இதற்கு உதாரணமாக, என் வாழ்க்கைப் போராட்டங்களையே நான் பயன்படுத்தப் போகிறேன்.

பெருமை என்னும் விசயத்தால் நான் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறேன். என் நண்பர்களிடம் போய் தங்க இடம் கேட்பதற்குப் பதிலாக, தரையிலேயே படுத்துக்கொள்வேன். எனக்கு யாராவது உதவி செய்யுங்கள் என்று கேட்ப தற்குப் பதிலாக பட்டினியாகவே இருந்து விடுவேன். இந்தப் பெருமையிலிருந்து என்னைத் தூக்கி எறிய தேவன் என்ன செய்திருப்பார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? இவ்வருடம் முழுவதும் மற்றவர்களிடம் உதவி கேட்க வேண்டும். இல்லையென்றால், பட்டினியாயிருக்க வேண்டும் அல்லது என் வாகனத்துக்கு எரிபொருள் நிரப்புவதா அல்லது உணவு வாங்குவதா என்று கடைசி காசு இருக்கும் நேரத்தில் விவாதிக்கும் சூழ்நிலைகளுக்குத் தள்ளப் பட்டேன். ஒவ்வொரு முறையும் வாகனமே வெற்றி வாகை சூடி விடுகிறது.

என் பெருமையை நசுக்கிப் போடத்தக்க தேவனால் வடிவமைக்கப்பட்ட சூழ்நிலைகளில் அவர் என்னை வைத்து, அதிலிருந்து தாழ்மையை நான் கற்றுக்கொள்ளும்படி செய்தார். நான் இந்த விசயத்தில் வெகுதூரம் போக வேண்டியதாயிருக்கிறது. கர்த்தருக்குச் சித்தமானால் இறுதியாக நான் அதை எட்டிப்பிடித்து விடுவேன். தேவனால் அனுமதிக்கப்படும் இந்தக்காரியம் ஏன் நல்லதாயிருக்கிறது? அது நல்லது ஏனென்றால் அவர் தயவுள்ள தேவனாயிருந்தால், என் மகிழ்ச்சி, சௌகரியம் போன்றவைகளில் மட்டும் கவனமாயிருந்திருப்பார். ஆனால், அவர் அன்புள்ள தேவனாயிருப்பதினால் நான் அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழவேண்டுமென்றால், சில காரியங்களை உடைத்தெறிந்தால்தான் நான் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருக்க

முடியும் என்பதை உணர்ந்து என்னை இரட்சிக்கிறார். அந்தப் பெருமை என்னில் வாசம் செய்ய அனுமதிக்கப்பட்டால் நான் அடங்காதவனாகவும், மற்றவர்களைக் கட்டுப்படுத்துகிறவனாயும் இறுதியில் மிகவும் மோசமானவனாகவும் மாறிவிடுவேன். பெருமையை நான் களைந்தது மற்றவர்களுக்கு சேவை செய்யும் பாடத்தையும் எனக்குக் கற்றுக் கொடுத்தது. இப்பாடத்தை தேவன் என் மீது அன்புபாராட்டி என் பெருமையை உடைத்திராவிட்டால் ஒருபோதும் கற்றிருக்க மாட்டேன்.

நாம் வேதாகமம் முழுவதும் பார்க்கும்போது வேதாகமக் கதாப் பாத்திரங்களுக்கும் இப்படித்தான் நடந்திருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் கடினமான இருதயத்தை உடையவர்களாயிருந்தபடியால் தொடர்ந்து அவர்கள் பாடுகளையும், உபத்திரவங்களையும் அனுபவித்தார்கள். தேவன் அவர்கள் மீது அன்பாயிருந்தபடியால் தான் அவர்களை மீண்டும் தம்மிடத்தில் கொண்டுவர அந்தப் பாடுகளையெல்லாம் அனுமதித்தார். அன்பு வெற்றிக்காகத் தன்னை தாழ்த்துகிறது. தேவன் நம்மோடு இடைபடும்போது பெருமை என்னும் பிரச்சனை இருக்காதா? நிச்சயமாக இல்லை! எபிரெயர் 12 : 1 – 3 வசனங்கள் இவ்விதமாகச் சொல்கிறது. **ஆகையால் மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடக்கடவோம்; அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோசத்தின் பொருட்டு அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றி ருக்கிறார். ஆகையால், நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்து மாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப் பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்.**

நான் ஒருவரிடத்தில் அன்புகாட்டினால், அதாவது, உண்மையான அன்பு காட்டினால் அவர்கள் தள்ளாடி விழ அனுமதிக்க மாட்டோம். உண்மையாகவே, நான் அவர்களுக்கு எது நல்லதோ அதையே செய்வேன். அது ஆரம்பத்தில் அவர்களுக்கு வலியைக் கொடுத்தாலும் கூட அதைச் செய்வேன். இந்த உதாரணம் முக்கியக் கருத்துக்கு இங்கே வழி வகுக்கிறது. தேவன் உங்களில் அன்பு கூர்ந்தால் அவர் தம்முடைய அளவில்லா ஞானத்தினாலும்; நித்திய பார்வையினாலும் எது உங்களுக்கு சிறந்ததோ அதைத் தான் உங்களுக்கு செய்வார். அதன் பொருள் நீங்கள் பெருமையோடு போராடிக்கொண்டிருந்தால்

அது உச்சக்கட்டத்தை அடைந்து உடைந்து போய்விடும். அதன் மூலம் நீங்கள் ஆவிக்குரிய ஆனந்தத்தை அடைவீர்கள். இச்சையோடு நீங்கள் போராடினால் சில நேரங்களில் நீங்கள் தனியாக இருப்பதாக உணரலாம் அல்லது சில மோசமான உறவுகளால் நீங்கள் அலைக்கழிக்கப்பட்டு உண்மை உறவின் மதிப்பை நீங்கள் உணரக்கூடிய சூழ்நிலை ஏற்படும். அதேபோல், பேராசை அல்லது பொருளாசை உங்கள் பலவீனமாயிருந்தால் உங்களிடம் இருப்பவைகளின் மதிப்பை நீங்கள் உணரும்படி எல்லாவற்றையும் இழக்க நேரிடலாம்.



சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும் சரி, தேவன் அதைப் பார்ப்பார். நீங்கள் அவரை உண்மையாகவே தேடினால் தேவன் உங்களுக்காக எவைகளை வைத்திருக்கிறாரோ, அவைகளைப் பெற்றுக்கொள்ளத் தடையாயிருக்கிற பாவத்தையும் அதன் வேரையும் எடுத்துப் போடுவார். சில வேளைகளில் தேவனுடைய வழிநடத்துதல் நம்மை காயப்படுத்துகிறது. ஆனால், நம் வாழ்க்கையில் காணப்படும் சில அசுத்தங்கள் களைந்து போடப்படாவிட்டால் நரகத்திற்கு நம்மை இழுத்துச் சென்றுவிடும். அவைகளை நாம் களைந்துபோட தேவன் உதவி செய்கிறார். நம் அன்புள்ள தேவன் நம் ஆத்துமாக்களின் நித்தியத்திற்காக நம் பாவசுபாவத்தால் நாம் அழிந்துபோக அனுமதிக்கமாட்டார். தேவன் தமது மிகுந்த அன்பினால் நம்முடைய நலனுக்காக நம்மை வேதனையின் வழியாய் கடந்துபோகச் செய்வார். அதன்மூலம்

நாம் பல பாடங்களைக் கற்றுக்கொள்ளும்படியாகவும் நாம் இரட்சிக்கப்படும் படியாகவும் அப்படிச் செய்வார்.

இப்போது தேவன் நம்மை வேதனையின் வழியாக புடமிடுகிறார். அதன் மறுபக்கத்தில் என்ன இருக்கிறது? என்னைப் பொறுத்தவரை இப்பாடுகள், உபத்திரவங்கள் எல்லாம் மலை உச்சிக்கு பயணம் செய்துவிட்டு வந்த உணர்வுதான் ஏற்படுகிறது. அப்பயணத்தில் ஆவிக்குரிய பாடல்களை ஆனந்தமாக கேட்டுக்கொண்டு, மலை அழகை ரசித்துக்கொண்டு பயணித்த நினைவுதான் இருக்கிறது. மேலும், பல வருடங்களுக்குப் பிறகு முதல் முறையாக நான் கோபப்படாததையும், நான் நேசிக்கப்படுவதையும் எல்லா வற்றையும் நானே செய்ய வேண்டிய அவசியமில்லை, என் பெலனுக்கு அப்பால் எனக்கு உதவியும், ஆதரவும் இருக்கிறது என்பதையும் உணர முடிந்தது. பலகால துக்கத்திற்குப் பிறகு அது ஒரு மகிழ்ச்சியான உணர்வாயிருந்தது.

தேவனுடைய திட்டம் எப்போதுமே இனிமையாக இருப்பதில்லை. அதே நேரத்தில் மலை உச்சியின் மகிழ்ச்சியை அது உள்ளடக்காமல் இருப்பதில்லை. மலை உச்சியைப்பற்றி நான் பேசும்போது நான் விரும்பும் அந்த மலைகளில் என்னைக் காண்கின்ற, நேசிக்கின்ற தேவனோடு நேரத்தை செலவு செய்ய நேரம் வந்துவிட்டது என்று நினைக்கிறேன்.

✝

---

## ஒரு வளரும் கிறிஸ்தவனின் குணாதிசயங்கள்

(ரோமர் 12 : 9 - 21)

- வளரும் கிறிஸ்தவன் *எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுவான் ( ரோமர் 12 : 17 )*
- வளரும் கிறிஸ்தவன் *எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருப்பான் (ரோமர் 12 : 18)*
- வளரும் கிறிஸ்தவன் *பழிவாங்குதலில் ஈடுபடமாட்டான் ( ரோமர் 12 : 19 )*
- வளரும் கிறிஸ்தவன் *தீமைக்குப் பதிலாக நன்மையையே செய்வான். (ரோமர் 12 : 21 )*
- வளரும் கிறிஸ்தவன் *கனம் பண்ணுகிறதிலே முந்திக் கொள்வான் (ரோமர் 12 : 10 )*

# ரோமர் 12 : 9 – 21

## Jerry Bates

1. மாய் மாலம் என்றால் என்ன? (வசனம் 9)
2. கிறிஸ்தவர்கள் ...........வெறுத்து, ............ பற்றிக் கொண்டிருங்கள்
3. கிறிஸ்தவர்கள் மத்தியில் எப்படிப்பட்ட அன்பு வெளிப்படுத்தப்பட வேண்டும்?
4. கிறிஸ்தவர்கள் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் என்பதன் பொருள் என்ன? (வசனம் 11)
5. கிறிஸ்தவர்கள் சக கிறிஸ்தவர்களுடைய குறைவில் அவர்களுக்கு என்ன செய்ய வேண்டும்? (வசனம் 13) (யோவான் 3 : 17 யையும் பார்க்க)
6. கிறிஸ்தவர்கள் தங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை என்ன செய்ய வேண்டும்? (வசனம் 14)
7. கிறிஸ்தவர்கள் சந்தோஷப்படுகிறவர்களுடனும், அழுகிறவர்களுடனும் என்ன செய்ய வேண்டும்? (வசனம் 15)
8. ஒரு கிறிஸ்தவன் நிறைய படித்து ஞானவானாக இருந்தால் தன்னை புத்திமான் என்று எண்ணலாம் (வசனம் 16) சரியா ? தவறா ?
9. சில சூழ்நிலைகளில் பழி வாங்குதல் ஏற்றுக்கொள்ளத்தக்கது. சரியா ? தவறா ? (வசனம் 17)
10. கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களல்லாதவர்களுக்கு முன்பாகவும், யோக்கியமானவைகளைச் செய்ய நாடவேண்டும் சரியா ? தவறா ? (வசனம் 17)
11. எல்லா மனுஷரோடும், எப்போதுமே சமாதானமாயிருப்பது சாத்தியமா? (வசனம் 18)
12. துன்மார்க்கரை யார் பழிவாங்கப் பேகிறார்? (வசனம் 19)

13. நம் சத்ருக்களுக்கு நாம் நன்மை செய்வதினால் என்ன நடக்கும்? (வசனம் 20)

14. தீமை எப்படி வெல்லப்பட வேண்டும்? (வசனம் 21)

---

## ரோமர் ( 12 : 9 - 21 )

உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள். சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள். கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள். அசாதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள். நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள். அந்நியரை உபசரிக்க நாடுங்கள். உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள். ஆசீர்வதிக்கவேண்டியதேயன்றி சபியாதிருங்கள். சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள். அழுகிறவர்களுடனே அழுங்கள். ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள்; மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல் தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள். உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள். ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள். எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது. நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல் கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்கு போஜனங்கொடு. அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு. நீ இப்படிச் செய்வதினால் அக்கினித் தழலை அவன் தலையின் மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.

---

## குறிப்பு

மேலே குறிப்பிடப்பட்டிருக்கிற வசனப்பகுதிகள் சுருக்கமான விளக்கங்களை உடைய மிகச்சிறிய கட்டளைகளை உள்ளடக்கியிருக்கிறது. 9 – 13 வசனங்கள் சக கிறிஸ்தவர்களோடு நமக்கு இருக்கும் உறவைப்பற்றி விவாதிக்கிறது. அதற்கு பிந்தைய வசனப்பகுதிகள் கிறிஸ்தவர்களாக இல்லாதவர்களோடு நமக்கிருக்கும் உறவைப் பற்றி விவாதிக்கிறது. இந்தக் கட்டளைகளெல்லாம் புரிந்து கொள்வதற்கு

எளிதானது தான். ஆனால், அவைகளை நம் வாழ்க்கையில் அப்பியாசப் படுத்துவது கடினமானதாகும்.

இங்கே, நாம் கிறிஸ்தவர்களாக வாழ்வது தான் முக்கியமாக வலியுறுத்தப் படுகிறது. கிறிஸ்தவம் என்பது வெறுமனே நம்பிக்கை, உறவு, உணர்வு, அனுபவம் போன்றவைகளைவிட மேலானது. இது ஒரு வாழ்க்கை முறை யாகும். நாம் கிறிஸ்தவத்திற்கேற்ற வாழ்க்கையை வாழாவிட்டால் கிறிஸ்தவம் உலகத்தின் மத்தியில் குறைவான மதிப்பைத்தான் பெறும். உலகத்தார் நாம் என்ன சொல்கிறோம், என்ன பேசுகிறோம் என்பதை உற்று கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். நம் நம்பிக்கையும், செயலும் இசைவாக இல்லை யென்றால், உலகத்தின் மீது பெரிய தாக்கத்தை நம்மால் ஏற்படுத்த முடியாது. நாம் நம்முடைய வாழ்க்கையில் கிறிஸ்தவத்தை உலகிற்கு அலங்கரித்துக் காட்ட வேண்டும். (தீத்து 2:9). ✝

---

## மனிதன் எப்போது வஞ்சிக்கப்படுகிறான்?



- **மனிதன்** திருவசனத்தை கேட்க மட்டும் செய்து, அதின்படி செய்யாதபோது ... (யாக்கோபு 1:22)
- **மனிதன்** தன்னில் பாவம் இல்லையென்று சொல்லும் போது ... (I யோவான் 1:8)
- **மனிதன்** தான் ஒன்றுமில்லாதிருந்தும் தன்னை ஒரு பொருட்டென்று எண்ணும்போது ... (கலாத்தியர் 6:3)
- **மனிதன்** தான் விதைத்ததை அறுக்கப்போவதில்லை என்று நினைக்கும்போது ... (கலாத்தியர் 6:7)
- **மனிதன்** தன்னால் தேவனை வஞ்சிக்க முடியுமென்று எப்போது நினைக்கிறானோ அப்போது ... (லூக்கா 9:47)

# இடறல்கள் வர வேண்டும்

# OFFENSES MUST COME

*T. Pierce Brown*

லூக்கா 17 : 1ல், **பின்பு அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: இடறல்கள் வராமல் போவது கூடாத காரியம், ஆகிலும் அவைகள் எவனால் வருகிறதோ, அவனுக்கு ஐயோ** என்று கிறிஸ்து சொன்னதை நாம் காண்கிறோம். நாம் **கால்வின்** கொள்கைகாரர்களோடு வேத வசனங்களைப் படித்த போது, தேவன் உலகத்தோற்றத்துக்கு முன்பே நடக்கப் போவதையெல்லாம் முன்னறிவித்திருக்கிறபடியால் அவைகள் ஏற்கனவே தேவனால் முன் குறிக்கப்பட்டிருக்கிறபடியால் அதற்கு மாறாக இவ்வுலகில் எந்தக் காரியமும் நடக்க முடியாது என்று வலியுறுத்திச் சொல்கிறார்கள்.

அவர்களுடைய கூற்றின்படி எழும் மிகப்பெரிய பிரச்சினை என்னவென்றால், ஏற்படுகின்ற இடறல்கள் எல்லாம் ஏற்கனவே தேவனுடைய கட்டளை அல்லது முன்குறித்தலின்படி நடக்கிறபடியால் தேவன் அவ்விதமாகவே காரியங்களை வடிவமைத்திருக்கிறபடியால், மனிதன், ஏற்படும் இடறல்களுக்கு தேவையில்லாமல் பொறுப்பாளியாக்கப்படுகிறான் என்னும் வாதத்தை அவர்கள் முன் வைக்கிறார்கள். ஆனால், இங்கே உண்மை என்னவென்றால், மனிதனுடைய பாவத்தன்மையுள்ள நிலைமை மற்றும் தேவனுடைய சித்தத்தை செய்வதற்குப் பதிலாக தன்னுடைய சித்தத்தை செய்யும் முடிவு போன்றவற்றால் மனிதனால் பாவம் செய்யாமல் இருப்பது முடியாத காரியமாகும். தேவன் மனிதனை செம்மையானவனாகத் தான் சிருஷ்டித்தார். **இதோ தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார். அவர்களோ அநேக உபா யத்தந்திரங் களைத் தேடிக்கொண்டார்கள். இதை மாத்திரம் கண்டேன்** என்று (பிரசங்கி 7 : 29) சொல்கிறான்.

(ஏசாயா 53 : 6). **நாமெல்லோரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து அவனவன் தன்தன் வழியிலே போனோம். கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப் பண்ணினார்** என்று சொல்கிறது. நாம் வழி தப்பிப்போகத்தக்கதாக இவ்வுலகில் சிருஷ்டிக்கப்படவில்லை. மனிதனுடைய பாவத் தன்மை மற்றும் சீர்கெட்டுப்போகும் நிலை போன்றவற்றால் இடறல் வராமல் இருப்பது என்பது அசாத்தியமான ஒன்றாகும். ஆனால், நாம் எதைச் செய்கிறோமோ அதற்குப் பொறுப்பாளியாக இருக்கிறபடியால் இடறல் எவனால் வருகிறதோ, அவனுக்கு ஐயோ என்று தேவன் சொல்கிறார். மற்றவர்களுக்கு இடறலை ஏற்படுத்துகிறவர்களாக நீங்கள் இராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். மற்றவர்களுக்கு இடறலை ஏற்படுத்துகிற காரியம் பவுலுக்கு பயங்கரமாயிருந்தபடியால்தான் **மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரர் இடறுகிறதற்காகவது தவறுகிறதற்காவது பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும்"** என்று எச்சரிக்கிறார் (ரோமர் 14 : 21).

> நாம் எதைச் செய்கிறோமோ அதற்குப் பொறுப்பாளிகளாக இருக்கிறபடியால் இடறல் எவனால் வருகிறதோ, அவனுக்கு ஐயோ என்று தேவன் சொல்கிறார்.

## நான் இப்படிச் சொன்னால் என்ன ஆகும்?

வேதாகமம் தேவனுடைய பரிசுத்த பிரமாணம். அது முழுமையானது, தேவ ஆவியினால் ஏவப்பட்டது, குறைவற்றது என்று சொல்லிவிட்டு அந்த விலையேறப் பெற்ற வார்த்தையை ஒருபோதும் வாசிக்காமலும் அதன் செய்தியால் உந்தப்படாமலும், அதன் உதவியை ஒருபோதும் நாடாமலுமிருந்தால் நான் வேதாகமத்தைப் பற்றி உயர்வாகச் சொல்வதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?

நான் வேதாகமத்தினிடத்தில் போய், நான் அருமையாகப்பேசும் சத்தியத்தை நாடி, இப்பூமிக்குரிய வாழ்வில் அதின் வழிநடத்துதலை தேடாவிட்டால் நான் வேதாகமத்தைப் பற்றி உயர்வாகச் சொல்வதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?

# தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்
## " God is Faithful "
### Harvey Porter

தேவனை விசுவாசிக்கிறோம் என்று சொல்கிறவர்கள் மத்தியில் ஏன் தேவன் இதை எனக்கு நடக்க அனுமதித்தார் போன்ற வார்த்தைகளைக் கேட்பது சகஜமான ஒன்றுதான். சில நேரங்களில் எனக்கு தேவன் தேவைப்பட்டபோது அவர் எங்கே போனார்? என்று நாம் கேட்கிறோம்.

நமக்கு நடக்கும் எல்லா காரியங்களுக்கும் தேவனை குற்றஞ்சாட்டுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக கொரிந்து பட்டணத்து சபையாருக்கு அப்போஸ்தலனாகிய பவுல் ஓர் அருமையான போதனையைக் கொடுக்கிறார். மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடுக்காமல் சோதனையைத் தாங்கத்தக்கதாக சோதனையோடுங்கூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் (I கொரிந்தியர் 10 : 13).

முதலாவது, தேவன் நம்மை சோதிப்பதில்லை, பிசாசுதான் நம்மை சோதிக்கிறான் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். யாக்கோபு ஆசிரியர் சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக தேவன் பொல்லாக்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதிக்கப்படுகிறான் என்று சொல்கிறார் ( யாக்கோபு 1 : 13, 14). நம்முடைய எல்லாப் பிரச்சனைகளுக்கும், சோதனைகளுக்கும் ஆதாரம் நம் எதிராளியாகிய சாத்தான்தான், நம் பரமதகப்பன் அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, தேவன் நமக்கு தரும் உதவியை நாம் பயன்படுத்தினால் நாம் சோதனகளில் விழ மாட்டோம். நமக்கு சத்தியமாகிய அவருடைய வார்த்தை இருக்கிறது, அது பாவத்திலிருந்து நம்மை விடுதலையாக்குகிறது. நம்மை நேசிப்பதற்கும், பெலப்படுத்துவதற்கும், உற்சாகப்படுத்துவதற்கும் சக கிறிஸ்த

வர்கள் நமக்கு உண்டு. நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மாறாத நெருக்கமும், ஐக்கியமும் நமக்கு உண்டு, அவர் நம்மை ஒருபோதும் கைவிடுவதில்லை என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறாரே. நம்மை பெலப்படுத்த பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் செய்கிறார். நாம் கர்த்தருடன் இருக்க வேண்டுமா அல்லது அவரைவிட்டுப் போக வேண்டுமா என்பதை நாம் தான் தீர்மானிக்க வேண்டும்.

மூன்றாவது, சோதனை என்பது எல்லா மனித இனத்துக்கும் பொதுவானது தான். நம்மெல்லோருக்கும் சோதனைகள் உண்டு. அவைகளின் மத்தியில் நாம் உறுதிபெறுகிறோமா அல்லது விழுந்துபோகிறோமா என்பது தான் கேள்வி. மாம்ச இச்சையே எல்லா பாவத்திற்கும் காரணமாயிருக்கிறது. இதற்கு யாருமே விதிவிலக்கல்ல. சரியான பாதையில், வழிநடத்த தேவன் வழிமுறைப் புத்தகத்தைக் கொடுத்திருக்கிறார் (II தீமோத்தேயு 3 : 16, 17). ஆனால் நாம் தேவனுடைய வழிநடத்துதலை அவமதித்து தவறான முடிவுகளை எடுக்கும் போது, அதன் விளைவு வேதனையும் பாடுகளுமாயிருக்கிறது. சுதந்திரமாகிய ஆசிர்வாதம் தவறாகப் பயன்படுத்தப்படும் போது அதுவே பெரும்பாலான மனிதத் துயரங்களுக்குக் காரணமாகி விடுகிறது.

நான்காவது, சோதனையின் மூலமாக நாம் கற்றுக் கொள்ளும் மாபெரும் பாடம் சோதனையிலிருந்து தப்பிக்கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார் என்பதாகும். முதலில் நாம் சோதனையை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும், இரண்டாவதாக தப்பித்துக் கொள்ளும்படியான வழியை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். இங்கே பிரச்சனை என்னவென்றால், பெரும்பாலும் நாம் தப்பித்துக் கொள்ளும்படியான வழியை விரும்பவில்லை. பிசாசு தரும் கனியை அப்படியே பிடித்துக்கொள்ள ஆசைப் படுகிறோம். நம் ஆவிக்குரிய தன்மையை மாம்சம் மேற்கொண்டு விடுகிறது. நாம் மனந்திருந்தி பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள முடியாத பாவம் எதுவுமில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார், நாமும் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ✝

---

சாத்தான் நம்மை சோதிக்க தேவன் அனுமதிக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அந்த சோதனையில் தேவனுடைய நோக்கம் நாம் பெலனடைய வேண்டும் என்பதாகும். ஆனால், சாத்தானின் நோக்கம் நாம் தேவனிடமிருந்து விலகிச் செல்ல வேண்டும் என்பதாயிருக்கிறது. விளைவு எப்படியாக இருக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பது நம் கையில்தான் இருக்கிறது.

# ஒரு மறுமலர்ச்சி
# A Transformation
Betty Tucker

கர்த்தரைச் சேவிப்பதில் தனக்கிருந்த வைராக்கியத்திற்காக ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்டார். அப்போது சவுல் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு தான் இருந்தார். அந்நாள் கர்த்தருடைய சபைக்கு மகா உபத்திரவ நாளாக இருந்தது. யூதனாகிய சவுல் ரோமப் பிரஜையாக இருந்து அக்கலாச்சாரத்தில் கற்பிக்கப்பட்டார்.

ஒரு நாள் சவுல், தமஸ்குவிலுள்ள கிறிஸ்தவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி அங்கே பயணப்பட்டான். சடுதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி சவுலைச் சுற்றி பிரகாசித்தது. வானத்திலிருந்து ஒருசத்தம் உண்டாகி, சவுலே, சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்றது. அதற்கு சவுல் ஆண்டவரே நீர் யார் என்றான். அதற்குக் கர்த்தர் நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்றார் (அப்போஸ்தலர் 9 : 4, 5).

இயேசு கிறிஸ்து ஒளியால் பார்வை இழந்த சவுலிடம் நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப் படும் என்றார். அங்கே சவுல் அனனியா என்னும் பேருள்ள சீஷனைக் கண்டான். அவர் சவுலை பார்வை அடையும்படிச் செய்து மெய்யான சத்தியத்தை அவனுக்குப் போதித்தார்.

அவிசுவாசமான சவுல் பவுலாக மாறி எந்த கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தி னாரோ அந்த கிறிஸ்தவர்களுடைய விசுவாசத்தைத் தழுவினார். அவர் துன்பப்படுகிறவராயிருந்து, சுவிசேஷப் பிரசங்கியாராக மாறி தன்னுடைய மன மாற்றத் தினால் தன் பிரசங்கத்தைக் கேட்பவர்களை ஆச்சரியப்படுத்தினார்.

அந்நாளிலிருந்து பவுல் அன்புள்ள தேவனைப் பற்றி யூதர்களுக்கு உண்மையாகப் போதித்தார். அவர் தன்னுடைய ஊழியத்தில் பக்திவைராக் கியமாயிருந்து அநேகப் பாடுகளை சகித்தார். அவர் கொரிந்து பட்டணத்து சபைக்கு எழுதிய நிருபத்தில் கிறிஸ்துவின் நிமித்தம் தான் பட்டபாடுகளை, பட்ட

அடிகளை, சிறையில் இருந்ததை, கடல் யாத்திரையில் ஏற்பட்ட கப்பற் சேதத்தை பதிவு செய்திருக்கிறார்.

பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின கடைசி நிருபத்தில் ஒரு சுவிசேஷகனாக தீமோத்தேயு எவைகளையெல்லாம் செய்ய வேண்டுமென்று போதித்திருக்கிறார். பவுல் ஒரு மூத்த பிரசங்கியாராக இருந்து, இளம் ஊழியக்காரனாகிய தீமோத்தேயுவுக்கு விசுவாசத்தை ஒப்புக்கொடுக்கிறார். அந்நேரத்தில் பவுல் ரோமாபுரியில் இருந்தார். அவர் மரிக்கும் தருவாயில் இருந்தார். (II தீமோ. 4 : 6) அவர் பெருமையாக சொல்லும் வார்த்தைகளைக் கவனியுங்கள் **நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்** ( II தீமோத் தேயு 4 : 7 ) பவுல் மரணத்தைக் கண்டு பயப்படவில்லை. ஆனால், பிதாவாகிய தேவனோடு ஒரு சிறந்த வாழ்க்கையை வாழ எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்.

அப்போஸ்தலனாகிய பவுல் இளம் பிரசங்கியரான தீமோத்தேயுவை கண்டனம் பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு என்று உற்சாகப்படுத்துகிறார். (II தீமோத்தேயு 4 : 2) வேறுவிதமாகச் சொன்னால், **தீமோத்தேயுவே, ஜனங்கள் விசுவாசத்தை பற்றிக் கொள்ளத்தக்கதாக அவர்களை நீ வழிநடத்த வேண்டும். நல்ல பழக்கங்களை அவர்கள் மனதில் புகுத்தி, தேவனுக்காக வாழ்வது அவர்களுடைய வாழ்வை எப்படி வளப்படுத்தும் என்பதை நீ அவர்களுக்குக் காட்ட வேண்டுமென்று** சொல்கிறார்.

அதே நேரத்தில் அனுபவமிக்க பிரசங்கியாரான பவுல், தேவனுடைய வேலையைச் செய்யும்போது தீமோத்தேயு தீங்கநுபவிக்க வேண்டுமென்று சொல்கிறார் ( வசனம் 5 ). மேலும், பவுல் சொல்லும்போது **சத்தியத்துக்குச் செவியை விலக்கி கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங் காலம் வரும்** என்றும் புத்திமதி சொல்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் இன்று நம்மிடமும் பேசிக்கொண்டிருக்கிறார். கர்த்தருடைய சபைக்குள் ஊடுருவியிருக்கும் தவறான உபதேசத்தைக் குறித்து அவர் எச்சரித்துக்கொண்டிருக்கிறார். நாமும் விசுவாசத்தைப் பற்றிக்கொண்டிருந்தால், ஒரு நாள் கண்ணீரற்ற அந்த நித்திய வீட்டில் பிரவேசித்து என்றென்றும் தேவனோடு வாழ முடியும்.

நாம் இதுகாறும் பவுலின் வாழ்க்கையை சுருக்கமாக, அதே நேரத்தில் துரிதமாகப் பார்த்தோம். அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மிகப்பெரிய மாற்றத்தை நாம் கண்டோம். அவர் தேவனை நேசித்த ஜனங்களை துன்பப்படுத்திய நிலையிலிருந்து அவர் எந்த உபதேசத்தை ஒரு காலத்தில் வெறுத்தாரோ அதே உபதேசத்தை போதிக்கும் அர்ப்பணிப்புள்ள போதகராக மாறியிருக்கிறார். ✞

# தோவேக்கு
# *Doeg*

*Neal Pollard*

**சி**ல வேளைகளில் அறியப் படாத வேதாகம கதாபாத்திரங்கள் அழியாமல் நின்று நம் வாழ்க் கையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். அது நல்ல ரீதியிலும் இருக்கலாம், மோசமான ரீதியிலும் இருக்கலாம். இந்த வேதாகம கதாபாத்திரமான தோவேக்கு இரண்டாவது வகையைச் சார்ந்தவன். இந்த நபரை நாம் I சாமுவேல் 21, 22 அதிகாரங்களில் காண முடியும். இவன் ஏதோ மியனாக (ஏசாவின் சந்ததி) அடை யாளப்படுத்தப்படுகிறான். இவன் சவுலுடைய மேய்ப்பருக்குத் தலைவனாயிருந்தான். ( I சாமுவேல் 21 :7 ) இவனை நாம் சவுலின் ஊழியக்காரரோடே காண் கிறோம் (22 : 9) இவன் சவுல் ராஜா வின் கோபத்துக்கு தப்பி தாவீதிடம் அடைக்கலம் புகுந்த இஸ்ரவேலின் ஆசாரியர்களில் எண்பத்தைந்து பேரை இவன் கொன்று போட்டான் (22 : 18 ) இந்த தோவேக்கு மோசமான பெயர்தான் எடுத்திருந்தான். பேரழிவை ஏற்படுத்திய இச்செய்தியை தாவீது கேட்டு புலம்புகிறார் **அப்பொழுது தாவீது அபியத்தாரைப் பார்த்து: ஏதோமியனாகிய தோவேக்கு அங்கே இருந்தபடியினாலே அவன் எவ்விதத்திலும் சவுலுக்கு அதை அறிவிப்பான் என்று அன்றையத் தினமே அறிந்திருந்தேன்** என்று சொன்னார் (Iசாமுவேல் 22:22).

இந்த தோவேக்கு ஆவிக்குரிய பிரகாரமாகவும் துர்பாக்கியவா னாகத் தான் இருந்திருக்கிறான். எனவே தான், பரிசுத்த ஆவியானவர் தாவீது மூலமாக இவனுடைய சீர் கெட்டதன்மையைப் பற்றி சங்கீதம் 52 ல் பதிவு செய்திருக்கிறார். **நீ கேடுகளைச் செய்ய எத்தனம் பண்ணுகிறாய் கபடு செய்யும் உன் நாவு தீட்டப்பட்ட சவரகன் கத்தியை போல் இருக்கிறது. நன்மையைப் பார்க்கிலும் தீமையையும் யதார்த்**

**தம் பேசுகிறதைப் பார்க்கிலும் பொய்யையும் விரும்புகிறாய்** என்று தாவீது இந்த தோவேக்கைப் பற்றித் தான் பேசுகிறார் (வ 2 - 4). அதன்பின்பு, தாவீது இந்த தோவேக்கின் கொடுமையான மரணத்தைப் பற்றி முன்னறிவிக்கிறார் **தேவன் உன்னை பிடித்து, உன் வாசஸ்தலத்திலிருந்து பிடுங்கி, நீ ஜீவனுள்ளோர் தேசத்தில் இராதபடிக்கு உன்னை நிர்மூலமாக்குவார்** (வசனங்கள் 5 - 7) இந்த தோவேக்கு தவறானவைகளை நம்பியிருக்கிறான், தவறானவைகளை செய்திருக்கிறான் என்ன ஓர் அவமானம்!

இந்த தோவேக்கிடமிருந்து பல காரியங்களை பல கோணங்களில் காண முடியும். முதலாவது, ஒரு மனிதனுடைய குணாதிசயம் மிகவும் முக்கியமானது. இவனுடைய குணாதிசயம் அருவருக்கப்படத்தக்கது. இவன் தேவனுடைய ஆசாரியர்களை மதிக்காதவனாயிருந் தான். இவன் தன் சொந்த ஆதாயத்திற்காக மற்றவர்களை விற்றுப்போட்டிருக்கிறான். இவன் ஜீவனின் மதிப்பை அறியாதவனாக இருந்திருக்கிறான். அதிலும் குறிப்பாக நீதிமான்களின் உயிரை அற்பமாக எண்ணியிருக்கிறான். இரண்டாவது, மோசமாக நடப்பதினால் தற்காலிகமாக சில பலன்கள் கிடைக்கலாம். இது சங்கீதம் 52 ; 7 ல் தாவீதால் சொல்லப்பட்டிருக்கிறது **இதோ தேவனைத் தன் பெலனாக எண்ணாமல், தன் செல்வப் பெருக்கத்தை நம்பி, தன் தீவினையில் பலத்துக் கொண்ட மனுஷன் இவன்தான் என்பார்கள்** இன்றைய நாட்களிலும் இவ்வுலக வாழ்க்கையில் பாவிகள் செல்வத்தையும் புகழையும் பெற்று வாழ்வதை நாம் பார்க்கிறோம். இறுதியில் துன்மார்க்கம் செழித்தோங்காது. ஞானி சாலொமோனின் வார்த்தைகள் தோவேக்குக்கும் இவனைப் போன்றவர்களுக்கும் பொருத்தமாக இருக்கும் **துன்மார்க்கனோ நன்றாயிருப் பதில்லை; அவன் தேவனுக்கு முன்பாக பயப்படாதிருக்கிறபடியால் நிழலைப் போலிருக்கிற அவனுடைய வாழ்நாள் நீடித்திருப்பதுமில்லை** (பிரசங்கி 8 : 13).

நல்ல கதாபாத்திரங்களிடமிருந்து நாம் மாபெரும் பாடங்களை கற்றுக் கொள்ள முடியும். ஆனால், அதே நேரத்தில் மோசமானவர்களிடமிருந்தும் சில பாடங்களை நாம் கற்றுக்கொள்ள முடியும். பழைய ஏற்பாட்டு கதாபாத்திரங்கள் நமக்குப் போதிக்கிறது. நமக்கு நம்பிக்கையைத் தருகிறது

(ரோமர் 15 : 4) இதில் மோசமான கதாபாத்திரங்களும் உள்ளடக்கம். நாம் இந்த தோவேக்கிடமிருந்து காரியங்களைக் கற்றுக் கொண்டு களையய வேண்டியவைகளைக் களைந்து, அவனைவிட சிறந்த குணாதிசயங்களை நாம் பெற்றுக் கொள்வோம்.

✝

## தேவன் பார்த்துக் கொண்டிருக்கிறார்

" நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து, எதிரியானவன் உங்களைக் குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத்தக்கதாக உபதேசத்திலே விகற்பமில்லாதவனும், நல்லொழுக்கமுள்ளவனும் குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக" (தீத்து 2:7, 8).

யாரோ ஒருவர் அவர் யார் என்று எனக்குத் தெரியவில்லை. அவர் இப்படியாகச் சொன்னார். " யாருமே பார்க்காத போது நாம் எப்படி நடந்து கொள்ளுகிறமோ அது தான் நம்முடைய உண்மையான குணாதிசயம். இது எவ்வளவு உண்மையாயிருக்கிறது. நாம் சரியற்ற காரியங்களைச் செய்யும் போது அவைகளை நம் குடும்பம் நண்பர்கள் மற்றும் சபையிடமிருந்து மறைக்க முயற்சி செய்கிறோம். இருந்தபோதிலும் தேவன் நம்மை பார்த்துக்கொண்டிருக்கிறார். அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார்.

நாம் தேவனைப் பிரியப்படுத்த விரும்பினால், அவரோடுநடக்க விரும்பினால் அவருடைய கட்டளைகளின்படி நடக்க நாடவேண்டும். நாம் தேவனுடைய அளவுகோலுக்கேற்ப வாழ முயற்சிக்கும்போது நம் குணாதிசயம் தன்னைத்தானே காத்துக் கொள்ளும். நாம் மற்றவர்களைப் பிரியப்படுத்த வாழ மாட்டோம். நாம் தேவனைப் பிரியப்படுத்தவே வாழ்வோம். நாம் அதை மட்டும் சரியாகச் செய்து விட்டால், மீதி எல்லாமே சரியாகிவிடும்.

# பேதுருவின் கண்கள்

## Eye of Peter

*Dean Kelly*

**தே**வனுடைய வார்த்தையை உள்ளடக்கிய வேதாகமம் முழுவதிலும் பல அருமையான தேவதாசர்கள் காட்டப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வெற்றிகள் விசுவாசம், அவர்களுடைய பெலம் போன்றவைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதைப்போலவே, அவர்களுடைய சோதனைகள் அவர்களுடைய வலி, அவர்களுடைய பெலவீனங்கள் பாவங்கள் எல்லாம் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகள்தான் மனித இனத்தை தொன்றுதொட்டு தொற்றிக்கொண்டு பாடாய்ப்படுத்துகின்றன. நான் ஒவ்வொரு மாபெரும் மனிதர்களுடைய கண்களின் வாயிலாக அவர்கள் செய்த காரியங்களை காண விரும்புகிறேன். ஆயினும், வேதாகமத்தில் இடம்பெற்றிருக்கும் எல்லாக் கதாபாத்திரங்களிலும் என்னை அதிகமாகக் கவர்ந்தது பேதுரு என்னும் கதாபாத்திரம்தான். பேதுருவை என்னைப் போன்ற ஒருவராக நான் காண்கிறேன். சில வேளைகளில், பேதுருவின் கண்களின் வாயிலாக வாழ்க்கையை நான் காண்கிறேன். அவரைப் போலவே என்னுடைய பிரச்சனைகளுக்குப் பெரும்பாலும் நானே காரணமாகிறேன். ஆனால், அவரிடமிருந்து பல பாடங்களை நான் கற்றுக் கொண்டிருக்கிறேன். என் வாழ்க்கைப் பயணத்தில் பேதுரு சந்தேகக்கண்களைக் கொண்டிருந்தது போல அதாவது அவர் உறுதியாக இருக்கவேண்டிய நேரங்களில் உறுதியாக இல்லாமல் சந்தேகக்கண்களுடன் இருந்தது போல சந்தேகக் கண்களுடன் நானும் காணப்படுகிறேன்.

சில வேளைகளில், பேதுருவின் கண்களின் வாயிலாக பயத்தைக் காண்கிறேன். இயேசு கிறிஸ்து விசாரணை என்ற பெயரில் அலைக்கழிக்கப்பட்டபோது பேதுரு பயத்தால் கவ்வப்பட்டு இயேசுவை நெருக்கமாகப் பின் தொடரவில்லை. பேதுரு பயத்தால் மேற்கொள்ளப் பட்டு

கிறிஸ்துவை அவர் மறுதலித்தார். எத்தனை முறை உள்ளிருக்கும் பயத்தோடு நான் போராடியிருக்கிறேன்? சில வேளைகளில் பேதுருவின் கண்களின் வாயிலாக பெலவீனத்தைக் காண்கிறேன், பேதுரு தேவனுடைய சித்தத்தை நாடி அதற்காக நிற்கவேண்டிய நேரத்தில் அப்படிச் செய்யத் தவறியது அவருடைய பெலவீனத்தையே காட்டுகிறது. சில வேளைகளில், நானும் அப்படி நடந்துகொள்வதால் என்னை நான் பெலவீனனாகக் காண்கிறேன். அதே நேரத்தில், பேதுருவின் கண்களின் வாயிலாக விசுவாச உறுதியைக் காண்கிறேன். பேதுருவுக்கு இருந்த அந்த விசுவாச உயரத்தை ஒரு நாள் தொடுவேன் என்று நம்புகிறேன்.

பேதுருவின் கண்களின் வாயிலாக நான் பார்ப்பதில் முக்கியமான கருத்து தேவனுடைய புஸ்தகத்தில் எனக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிற என் இரட்சகரை காண்பதுதான். விசுவாசத்தினால் என் கரங்களை இரட்சகரிடத்தில் சேரத்தக்க நீட்ட வேண்டும். கர்த்தரிடத்தில் கிட்டிச் சேர என்னால் முடிந்த வரை எல்லாவற்றையும் செய்ய வேண்டும். ஒரு நாள் மேலே பரம வாஸ்தலத்திலே என் கண்கள் பேதுருவின் கண்களோடு சேர்ந்து பிதாவின் அன்பை அனுபவிக்கும்.

✞

## நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்கள்?

"எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால், தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள். 8.எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும். 9. முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள். 10.அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள். 11. ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக, ஆமென். 12. பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல். 13. கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்" (I பேதுரு 4:7 – 13).

# இயேசு கண்ணீர்விட்டார்
# Jesus Wept
*Ed Benesh*

காலகாலமாக மனிதர்கள் இந்த வசனத்தை வைத்து விவாதம் செய்கிறார்கள். ஆனால், உண்மையாகவே இயேசு எதற்காக கண்ணீர் விட்டார்? அநேகமாக நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்கென்று தனித்தனி விளக்கங்களை வைத்திருக்கலாம். சிலர் அவருடைய சிநேகிதனான லாசரு மரித்துபோனபடியால் அவர் கண்ணீர்விட்டார் என்று சொல்கிறார்கள். வேறு சிலர், அவர் தம்முடைய சிநேகிதனான லாசரு ஒரு நீதிமானாயிருந்தபடியால் அவனுடைய மரணத்தின்போது அவன் மகிமையாக எடுத்துக் கொள்ளப்பட்டான். அந்த மகிமையான நிலையிலிருந்து லாசருவை திரும்பவும் கொண்டுவர வேண்டும் என்று நினைத்துதான் அவர் அழுதார் என்று சொல்கிறார்கள். இன்னும் சிலர் எல்லோரும் அழுது கொண்டிருந்தபடியால் அந்நேரத்தில் உணர்ச்சிவசப்பட்டு அழுதார் என்று சொல்கிறார்கள்.

மேற்சொல்லப்பட்டவைகளெல்லாம் இயேசு கண்ணீர்விட்டார் என்று தெளிவாக கனகச்சிதமாக சொல்லப்பட்டிருக்கிற வாக்கியத்தின் உண்மையான பொருளைப் புரிந்து கொள்ளவில்லை என்று தான் நம்புகிறேன். இயேசு அக்கறை கொண்டபடியால் தான் அவர் கண்ணீர்விட்டார் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்கள். இங்கே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சிநேகிதரைக் குறித்து, அவனுடைய ஆத்துமாவைக் குறித்தும், மார்த்தாளைக் குறித்தும், அக்கறை கொண்டார். அவர்களுக்குப் போதித்த பாடங்களைக்குறித்து அவர் அக்கறை கொண்டார்.


இயேசு கிறிஸ்து தம்முடைய ஊழியத்தின் பாதையில் மற்றவர்களிடத்தில் காட்டிய அக்கறை யைக் குறித்து வேதாகமம் திரும்ப திரும்ப ஏராளமான உதாரணங்களைக் கொடுத்திருக்கிறது. அவர் குஷ்டரோகியை சுகமாக்கிய போது அவர் அக்கறை கொண்டார். யாக்கோபின் கிணற்றருகே சமாரிய ஸ்திரீயினிடம் பேசினபோது அவருடைய வார்த்தைகளில் வழிநடத்துதலும் கடிந்து கொள்ளுதலும் இருந்த போது, அவர் அக்கறை கொண்டார். அவர் வணங்காக் கழுத்துள்ள பரிசேயர்களை எதிர்கொண்டு அவர்களை மாயக்காரரர்கள் என்று அழைத்தபோது அவர் அக்கறை கொண்டார்.

நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாயிருக்கிறபடியால் அதேவிதமான அன்பையும், அக்கறையையும் நாம் வெளிப்படுத்த வேண்டும். நாம் நம்முடைய விருப்பத்தையும், அனுபவத் தையும் மற்றவர்கள் மீது திணித்து தனிப்பட்ட முறையில் அவர்கள் நம் இஷ்டப்படி நடக்க வேண்டு மென்று எதிர்பார்க்கிறவர்களாயிராமல், நம்மை மற்றவர்களுடைய இடத்தில் வைத்துப் பார்த்து அவர்களிடத்தில் இரக்கமுடையவர்களாயிருக்க வேண்டும். இதை நம்மால் செய்ய முடியுமென்றால் உபத்திரவங்களிருப்பவர்களை வெளியே கொண்டு வந்து அவர்களுக்கு உதவமுடியும். அதன்மூலம் நாம் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாக மாற முடியும். கிறிஸ்துவின் சிந்தை எப்போதுமே தன்னைவிட மற்றவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்களை நடத்தவேண்டிய விதத்தில் நடத்தும். நாம் ஒரு மனிதன் வலியில் துடித்துக்கொண்டிருப்பதைக் கண்டு, அவனைச் சந்தித்து அவனுக்கு உதவ முற்பட்டால் நாமும் இயேசு கிறிஸ்துவைப்போல் கண்ணீர் விடுவோம்.

இந்த நாளில் சுயத்தை விட்டுவிட்டு மற்றவர்களிடத்தில் அக்கறைகாட்ட தீர்மானிப்போம். அவர்களுக்கு சேவை செய்து உங்கள் வாழ்க்கையிலும், அவர்களுடைய வாழ்க்கையிலும் வித்தியாசத்தை ஏற்படுத்துங்கள். ✝

## திருமறை தியானம்

**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**



| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:10 மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 மணி |

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி


வேதாகம அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

தொடர்புக்கு : இயக்குனர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன **கைப்பிரதிகள்** (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்

**E.Z.S. ராஜநாயகம் : 98427 30382**
**P.R. சுவாமி : 09844 70763**
**P.C. பிலேமோன் ராஜா: 9244204420**
**B. அர்ஜுனன் : 994435 58041**

## சத்திய வழி



- ❖ பேச்சாளர் : சகோ. P.R. சுவாமி (ஊழியர்)
- ❖ ரேடியோ : ஞாயிறு to வெள்ளி 5.30 p.m.
- ❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.
போன் : 080-25463507, செல் : 098440 70763


---

## கிறிஸ்துவின் வசனம்



- ❖ பேச்சாளர் : சகோ. B. அர்ஜூனன்
- ❖ தமிழன் : திங்கள் காலை 6:00 மணி & சனி மாலை 6:15 – 6:30 மணி
- ❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்
- ❖ ரேடியோ : SW 25 & 41 M (சனி மாலை 5.30 5.45)


Srilanka all Asia Service



<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;
கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்தலகுண்டு – 624 206.
திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

---

## கிருபையுள்ள வார்த்தை



- ❖ பேச்சாளர் :சகோ. B. பிலேமோன் ராஜா
- ❖ தமிழன்/நம்பிக்கை :ஞாயிறு காலை 6:45 & வெள்ளி காலை 6:15 மணி
- ❖ பைபிள் பாடங்கள் :அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
- ❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)
- ❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை
- ❖ **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL
- ❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.
செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## ' சத்தியத்தின் குரல் ' சந்தா விண்ணப்பம்

❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 [ **4** இதழ்கள் ] (அ) ரூ. 200 [ **8** இதழ்கள் ] க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு என்னுடைய ............................................ முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ...................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ "சத்தியத்தின் குரல்" நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**

"சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ____________________________________________

தெரு / ரோடு : ______________________________________

நகரம் : ______________________________ பின் கோடு : ______________

மாநிலம் : ___________________________________________